R & C PROPERTY LAWYERS LLP
& NOTARY PUBLIC
10a Upper Tooting Road , London SW17 7PG
Telephone: 02087724920
Conveyancing Services:
Residential , Commercial Conveyancing ,
Notarial Services:
Notarisation & Legalisation of Documents
Power of Attorneys,
SENTHURAN THAVARAJA LLB (Hons) Solicitor & Notary Public
Consultant : RAJA THAVARAJA LLB Sollicitor

A Freely Circulated Monthly

# புதினம்

PUTHINAM
FEBRUARY 2016
மலர் 20
இதழ் 1

செல்வராஜா
கோல்டு ஹவுஸ்
14வது ஆண்டு நிறைவு
நகைகள் செய்கூலியுடன்
£229 பவுண்டுகள் மட்டுமே!
162 B, Mitcham Road London SW17 9NJ
Tel: 020 8767 3795 / 07825 005 269

MITHUS JEWELLERS
லண்டனில் தமிழர்கள் விரும்பிச் செல்லும் நகைமாளிகை
நியாயமான விலை, உறுதியான வேலைப்பாடு
பழைய நகைகளுக்கு அதிக விலை அல்லது புதிய நகை
322 LONDON ROAD, CROYDON CRO 2TJ 020 8683 1756



THARANI
JEWELLERY
அதி குறைந்த வட்டி வீதத்தில் அடைவு பிடிக்கும் நகை மாளிகை
54 Ealing Road, Wembley, Middlesex HA0 4TQ.
Tel: 020 8902 7111, 020 8902 6777

# ஒற்றையாட்சியா? சமஷ்டியா?

புதிய அரசியலமைப்பு குறித்து சூடான விவாதங்கள் இலங்கை அரசியல் களத்தில் ஆரம்பித்து விட்டன. ஒற்றையாட்சியா, சமஷ்டி முறையா என்ற கருத்து மோதல்களுக்கிடையில் பதிமூன்றை முழுமையாக அமுலாக்குவதாக புதிய அரசியலமைப்பு இருக்க வேண்டுமென்ற கருத்தியலும் முன்வைக்கப்படுகின்றது. அதேவேளையில் சமஷ்டி முறைக்கு ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது என்ற கருத்துக்கள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தரப்பிலிருந்து வெளிவர தொடங்கியுள்ளன.

உண்மையில் இந்த விவாதத்தை தொடங்கி வைப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே காரண கர்த்தாவாக இருந்துள்ளார்.

தமிழர் விவகாரத்திற்கு தீர்வு காணும் வகையில் புதிய அரசியலமைப்பு வடிவமைக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறிவந்தபோதிலும் இடையில் கிராம இராச்சியமே தீர்வாக அமையும் என்ற கருத்தையும் அவர் விதைப்பதற்கு பின்நிற்கவில்லை. ஆனால், இன்று ஒரேயடியாக புதிய அரசியல்மைப்பு ஒற்றையாட்சி முறையிலேயே அமையுமென உறுதிபட தெரிவித்துள்ளார். ஒற்றையாட்சிக்குள் அதிகாரப்பகிர்வு அல்லது அதிகாரப் பரவலாக்கம் எந்தளவுக்கு சாத்தியமாகும் என்பது குறித்து எவ்வித கருத்துக்களையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வைக்காவிட்டாலும் கூட புதிய அரசியலமைப்பு ஒற்றையாட்சி பண்புகளுடனே அமையும் என்பதை அவர் உறுதிபட கூறியுள்ளார்.

சிங்களத்தலைவர்கள் இவ்வாறானதொரு போக்கினை கொண்டிருப்பார்கள் என்பது தமிழ் மக்களுக்கு நன்றாகவே தெரியும். எனவேதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன விவகாரத்திற்கான தீர்வுப் பொதியை முன்வைக்க வேண்டுமென பல வருடங்களாக தமிழ்த் தேசியவாதிகளிடமிருந்து மாத்திரமல்ல, சமூக ஆர்வலர்கள், புத்திஜீவிகள், ஊடகத்துறை சார்ந்தோரிடமிருந்தும் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டு வந்தது. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமஷ்டி என்ற பதத்தை தேர்தல் காலங்களில் தமிழ் மக்களின் வாக்குகளைக் கவருவதற்கான ஒரு கோஷமாக பாவித்ததே ஒழிய சமஷ்டி குறித்த ஒரு தீர்வுப்பொதியை முன்வைக்க முன்வரவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை கூறுகின்ற சமஷ்டி முறை எதனை அடிப்படையாகக் கொண்டது என்பது குறித்தும் மக்களுக்கு தெளிவுபடுத்தப்படவில்லை.

- தொடர்ச்சி 28ம் பக்கத்தில்

THE LAW OFFICE OF
MR.KULENDRAN
90 High street, Colliers Wood, London, SW19 2BT
Tel: 020 85428222
020 86824494
020 8286 7537 (Appointments)
020 8767 5156 (Evenings only)
We are teamed with Barristers & Solicitors to advice & assist our clients
- Immigration & Asylum
- Entry Clearance- EEA Applications
- Appeals (Appearance & Assistance)
- Bail hearings & European Court
- Police Station Attendance
- Criminal Law
- Benefits Appeals
[All other aspects of Legal matters]



Mr.Pires on 079 8533 9948
for Criminal matters
Police Station &
Traffic offences (24Hrs)
Translation &
Interpreting Services

புதினம்
PUTHINAM
20 வது ஆண்டு விழா
விவரங்கள் விரைவில்

LycaFly
call us 24X7
0207 132 32 32
Colombo பயணமா?
எங்குமில்லாத சிறப்பு சலுகை.
PLUS FREE LYCAMOBILE TOP-UP



தரமான தங்கத்திற்கு லண்டனில் சிறந்த இடம்
LAKSHMIS JEWELLERS
276, High Street North, London E12 6SA,
Tel: 020 8470 5600 FAX: 020 8470 3448

# £5 OFF*

ELAKKIA

Search

elakkiaonline.com

## AN ONLINE SHOPPING CHANNEL FOR

ELAKKIA SAVOURIES
ELAKKIA FROZEN FOODS
FRUITS & VEGETABLES
GROCERIES
FROZEN FISH PRODUCTS

£5 OFF*

*For your first online order over £30*
*Visit us for more details*



e-mail : info@elakkiaonline.com

(*Terms & conditions apply)

**வி.தேவராஜ்**

# துண்டாடப்படும் தமிழ் பேசும் தாயகம்

இலங்கையின் கடந்த கால அரசாங்கங்களைப் போல், கடந்தகால சிங்களத் தலைமைகளைப் போல் நல்லாட்சி அரசாங்கமும் தாம் வழங்கிய வாக்குறுதிகளும் தகர்ந்து போன வாக்குறுதிகள் தான் என்பதை நிரூபித்துள்ளது.

நல்லாட்சி அரசாங்கம் புதிய அரசியலமைப்புக்கூடாக இன விவகாரத்துக்கான தீர்வு என்று சர்வதேசத்தை நம்ப வைத்துக்கொண்டு பெரும்பான்மை இன ஜனநாயகத்தை நூற்றுக்கு நூறு வீதம் உறுதிப்படுத்தும் வகையிலான நகர்வுகளை மேற்கொண்டால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

இலங்கையில் இன விவகாரம் என்ற ஒன்று இல்லை என்ற இலக்கை நோக்கி நல்லாட்சி அரசாங்கம் காய்களை நகர்த்துவதாகவே உள்ளது.

புதிய அரசியலமைப்பு குறித்து நல்லாட்சி அரசாங்கம் ஏன் பேசுகின்றது? நல்லாட்சி அரசாங்கத்தின் அரசியல் நிகழ்ச்சி நிரல் என்ன? என்பன குறித்து தமிழ்த் தலைமைகளும் தமிழ் மக்களும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

உலக நாடுகளின் கவனத்தை திசை திருப்புவதற்காக காலத்திற்கு காலம் சிங்களத் தலைமைகள் முன்மொழியும் தகர்ந்து போகும் வாக்குறுதிகளின் வழிவந்ததே இந்த புதிய அரசியலமைப்பு மாற்றத்தினூடாக இன விவகாரத்திற்கான தீர்வு என்ற பொய்மையோ என எண்ணத் தோன்றுகின்றது.

இலங்கையின் வெளிநாட்டமைச்சர் மங்கள சமரவீர ஐ.நா மனித உரிமைப் பேரவை மாநாட்டில் உரையாற்றுகையில் கடந்த காலங்களில் இலங்கையின் சார்பில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தும் தகர்ந்து போன வாக்குறுதிகளாகவே (Broken Promise) இருந்தன. ஆனால் நல்லாட்சி அரசாங்கம் இதில் இருந்து முற்றிலும் மாறுபட்டது எனக்குறிப்பிட்டார். அத்துடன் நல்லாட்சியின் நம்பகத் தன்மையை மூலதனமாக்கி ஐ.நா மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு சார்பாக பிரேரணையை நிறைவேற்றிக் கொள்வதில் இலங்கை அரசாங்கம் பெரிதும் வெற்றி கண்டது. சர்வதேச அரங்கில் இலங்கை தனக்கு சாதகமான சூழ்நிலையையும் உருவாக்கிக் கொண்டது.

ஆனால், இலங்கையின் கடந்த கால அரசாங்கங்களைப் போல், கடந்தகால சிங்களத் தலைமைகளைப் போல் நல்லாட்சி அரசாங்கமும் தாம் வழங்கிய வாக்குறுதிகளும் தகர்ந்து போன வாக்குறுதிகள்தான் என்பதை நிரூபித்துள்ளது.


ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் வெளிநாட்டு உதவிகளுடனான உள்ளக விசாரணையை இலங்கை அரசாங்கம் தற்போது மறுதளித்துள்ளது. இன்று உலக அரங்கில் பெரிதும் பேசப்படும் விடயமாக இது உள்ளது.

இந்த ஒரு பின்னணியில் புதிய அரசியலமைப்பு மாற்றத்தினூடாக இன விவகாரத்துக்கான தீர்வு என்ற நல்லாட்சி அரசாங்கத்தின் கூற்று எந்தளவுக்கு நம்பகத் தன்மை வாய்ந்தது என்பது குறித்து தமிழ் மக்கள் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர்.

உண்மையில் நல்லாட்சி அரசாங்கம் புதிய அரசியலமைப்புக்கூடாக இன விவகாரத்துக்கான தீர்வு என்று சர்வதேசத்தை நம்ப வைத்துக்கொண்டு பெரும்பான்மை இன ஜனநாயகத்தை நூற்றுக்கு நூறு வீதம் உறுதிப்படுத்தும் வகையிலான நகர்வுகளை மேற்கொண்டால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஒருபுறம் புதிய அரசியலமைப்புக்கூடாக இன விவகாரத் தீர்வு குறித்துப் பேசும் நல்லாட்சியினரின் கள நகர்வுகளைப் பார்க்கும் போது, இன விவகாரத்துக்கான தீர்வு நோக்கி நகர்வதாகத் தெரியவில்லை. மாறாக இலங்கையில் இன விவகாரம் என்ற ஒன்று இல்லை என்ற இலக்கை நோக்கிக் காய்களை நகர்த்துவதாகவே உள்ளது.

கொழும்பையும் வடக்கையும் இணைக்கும் அதிவேக நெடுஞ்சாலை தம்புள்ளையில் இருந்து திசை திருப்பப்பட்டு பொலன்னறுவ, கந்தளாய், திருகோணமலை, முல்லைத்தீவு வழியாக வடக்கு நோக்கி அமைக்கப்பட உள்ளது.




பொலன்னறுவ, திருகோணமலை அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தின் மூலம் எதிர்காலத்தில் 10 மில்லியன் மக்களை திருகோணமலையில் குடியேற்ற அரசாங்கம் மறைமுக திட்டமொன்றை வகுத்துள்ளதாக அறிய முடிகின்றது.

முன்னதாக வடக்கிற்கான அதிவேக நெடுஞ்சாலை வவுனியா, கிளிநொச்சி வழியாக அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் திருகோணமலை துறைமுகம் மற்றும் சுற்றுலாத்துறை வளர்ச்சி என்பனவற்றைக் கருத்திற்கொண்டு இந்தத் திட்டம் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

உண்மையில் தொழில் ரீதியான அபிவிருத்தியை முன்வைத்து இன விகிதாசாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி திருகோணமலை மாவட்டத்தின் இனக் குடிப்பரம்பலை மாற்றியமைப்பதே இதன் உள்நோக்கமாக அமைந்துள்ளது.

வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் முல்லைத்தீவு திருகோணமலை மாவட்டங்களின் எல்லைக்கிராமங்களில் சிங்களக் குடியேற்றங்கள் 1983ஆம் ஆண்டு தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டன. மணலாறு என்ற தமிழ்ப் பிரதேசம் வெலிஓயா என சிங்களப் பெயராக மாற்றப்பட்டு சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

மணலாற்றில் 42 கிராமங்களைச் சேர்ந்த 13 ஆயிரத்து 288 தமிழர்கள் வெளியேற்றப்பட்டனர். பார்வதி கிராமம் பதவியாக மாறியது. பட்டிப்பலை ஆறு கல்லோயாவாக மாறியது. முதலிக்குளம் மொறவெவ ஆகியது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் போது மணலாறு, தென்னமரவாடி ஆகிய கிராமங்களை உள்ளடக்கி தனியான பிரதேச செயலாளர் பிரிவு உருவாக்கப்பட்டு அநுராதபுர மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது.

இந்த நகர்வுகள் அனைத்தும் வடக்கு கிழக்கு இணைந்த தமிழ் பேசும் மக்களின் தாயகம் என்ற கோட்பாட்டை சிதைப்பதை இலக்காகக் கொண்டே மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு குடியேற்றங்கள் விரைவு படுத்தப்படும் அதேவேளையில் மறுபுறம் பிராந்திய அபிவிருத்தி மற்றும் தேசிய ஸ்திரத்தன்மை என்ற போர்வையில் இலங்கையின் மாகாணங்களின் எல்லைகள் மீள் நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்ற பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. பேராதனை பல்கலைக்கழக புவியியல் துறை விரிவுரையாளர் முன்மொழிந்துள்ளவாறு இலங்கையின் வரைபடம் எதிர்காலத்தில் இலங்கை இவ்வாறே அமையும் என்பதை காட்டி நிற்கின்றது. ■

# புதினம்
PUTHINAM

லண்டன் தமிழர்களின் அபிமான இலவச இதழ்

ஆசிரியர்:
ஈ.கே.ராஜகோபால்
E.K.Rajagopal

வடிவமைப்பு
சத்யன் லே-அவுட்
9551395516

அலுவலக முகவரி:
PUTHINAM
38 MOFFAT ROAD
LONDON SW 17 7EZ
TEL: 020 8767 8004
MOB: 077 353 46890
EMAIL:
editor@londonputhinam.co.uk

'ஈழகேசரி' வெளியீட்டு நிறுவனத்துக்காக 20 ஆண்டுகளாக வெளிவரும் இலவச இதழ். தபாலில் பெற விரும்புவோர் முத்திரைச் செலவான 25 பவுண்களை மட்டும் Puthinam என்ற பெயருக்கு காசோலையாக அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.



## பெண் உதவியாளர் தேவை

வயதான தாயாரைப் பார்ப்பதற்குப் பொறுப்பான, பாசமுள்ள பெண் உதவியாளர் ஒருவர் தேவை. TOOTING பகுதியில் மகன் குடும்பத்தோடு வசிக்கிறார். ஐந்து மைல் சுற்றளவில் இருப்பவர் விரும்பத்தக்கது.

தொடர்புக்கு:
07443504742

## மகிழ்ச்சியளிக்கும் ஆனந்தப் பயணம்

தமிழ்நாட்டுக்கு விடுமுறையைக் கழிக்கச் செல்கிறபோது அங்கு வாகன வசதியைப் பற்றி இனிக் கவலைப்படாதீர்கள். இங்கிருந்தோ அல்லது அங்கு சென்ற பின்னர் தொடர்பு கொண்டு ஏற்பாடு செய்யலாம்.

தொடர்புக்கு:
(0091) 9788059977, (0091) 944175825


அச்சகத் தொழில் செய்வோர்,
பத்திரிகை நடாத்துபவர்கள்,
புத்தகங்கள் வெளியிடுவோர்,
மாதாந்திர சஞ்சிகை
நடாத்துபவர்களுக்காக....

புத்தக வடிவமைப்பு, டி.டி.பி.,
திருமண அழைப்பிதழ்கள், சிறப்பு மலர்கள், உங்கள் வீட்டு விஷேச நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்கள் என சிறந்த வேலைகளை இந்தியாவிலிருந்து வழங்குகிறோம்

Call: 9551395516
www.satyanlayout.com

Looking for an
# ACCOUNTANT ?

We are next to you!
We provide solutions for your Accountancy needs



உங்கள் தனிப்பட்ட மற்றும் வியாபார
ACCOUNTANCY
தேவைகளுக்கு
LONDON இல்
இயங்கும் தனித்துவமான ஸ்தாபனம்

Initial consultation is free
No fee for first three months

P & K
ASSOCIATES
CIMA
PRACTISING CERTIFICATE HOLDER

183. Burnt Oak Broadway,
Edgware. Middlesex.
HA8 5EH

020 8958 8883
079 1613 4976
(Mr.P. Navendran)
www.pandkgroup.co.uk
pandkassociates@aol.com

Bhrathiar University Europe Study Centre
பாரதியார் பல்கலைக்கழக
ஐரோப்பிய கல்வி நடுவம்

## தொலைநெறித் தொடர்கல்வி

B.A, B.Sc, B.com, B.B.A, B.S.W, M.A, M.Sc, M.com, MSW, M.B.A
Diploma / P.G.Diploma & Certificate Courses

- பாரதியார் பல்கலைக்கழகத்தின் பரீட்சைகள், அதன் அங்கீகாரம் பெற்ற மேற்குலகப் பாடசாலைகள் ஒன்றியத்தினால் (Western Tamil Schools Federation) இலண்டனில் நடாத்தப்படுகின்றன.
- பட்டயப்படிப்பு, பட்டப்படிப்புகளுக்கான பாடக் குறிப்புக்களைப் பல்கலைக்கழகப் பதிவுடன் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.
- ஆங்கில மொழியில் மட்டும் அன்றித் தமிழிலும், மலையாளத்திலும் குறிப்பிட்ட சில பரீட்சைகளை (B.A, MBA) எழுதும் அனுமதி உண்டு.
- சர்வதேசத் தகுதிபெற்ற, தரம்வாய்ந்த பாரதியார் பல்கலைக்கழகப் பட்டத்திற்குரிய மிகக் குறைந்த கட்டணத்தினை தவணை முறையில் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் வசதி செய்து தரப்படுகின்றது.
- உங்களுக்கு வசதியான நேரத்தில், மேலதிக சிரமங்கள் இன்றிப் பாடக் குறிப்புக்களை மாத்திரம் படித்துப் பரீட்சையில் இலகுவாகச் சித்தி பெறும் அரிய வாய்ப்பினை இழக்காது பயன்படுத்துங்கள்.
- மேல்காணும் உயர் கல்வி நெறிகளில் உங்களுக்குப் பொருத்தமான துறையினைத் தேர்ந்து சித்தி அடைவதன் மூலம் சமூகத்தில் சிறப்புப்பெற்று, தொழிலில் உயர்ந்து, உன்னதமாக வாழ்வை மேம்படுத்தத் தொடர்புகொள்ளுங்கள்.

WESTERN TAMIL SCHOOLS FEDERATION
Mr. K. Manoharan 0208 540 0705, 07946 937 000
Mr. J. Vilvaraj 07958 408 280
Email: info@wtsfuk.org | joseph.vilvaraj@gmail.com

Web: www.b-u.ac.in | www.wtsfuk.org



# SRI KALIMATHA ASTROLOGY CENTRE








இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார். இவர் கைரேகை, முகலட்சணம் ஜாதகம் ஆகியவற்றைக் கொண்டு நடந்தவை, நடக்கின்றவை மற்றும் நடக்கப் போகின்றவைபற்றித் துல்லியமாகக் கூறுவார்.

PANDIT:
RAJU

*Are you suffering from any of the following problems?*
- Black Magic - Evil Spirits
- Bad Luck - Reunite Lovers
- Stop Divorce - Depression
- Aura Chakras Healing
- Childless Couples
- Sexual Problem
- Lottery - Work Problems
- Financial Problems
- Wife & Husband Pro
- Children Mistakes
- Court Cases - Enemy
- Drinking Problems
- Health Protection
- House Protection
- All other Problems

All Religions are welcome
Private & Confidential
100%
GUARANTEE

HE SPEAK TAMIL, ENGLISH, HINDI, TELUGU, KANADA

ஒருமுறை சந்தித்துப் பாருங்கள்! உண்மை புரியும்!!
போன்ற எல்லாக் காரியங்களும் நல்லபடியாகச் செய்து தரப்படும்.
மந்திர செய்வினைகள், சூனியம் ஆகியவற்றிலிருந்து விடுதலை பெறலாம்.

Call for an Appointment
074 9292 6869
194B High Street North, East HAM E6 2JA. London

# விமலின் பக்கம்




அவர் ஓர் அற்புதமான கலைஞர். இனிமையாகப் பாடுவார். ராகசுத்தம், தெளிவான தமிழ் உச்சரிப்பு அவரது சொத்துக்கள்.

இலண்டன் கலை அரங்குகளிலும் பரத நாட்டிய மேடை அரங்கேற்றங்களிலும் நான் தொகுப்பாளராகக் கலந்து கொள்ளும்போது அவரை அடிக்கடி கண்டும் கேட்டும் ரசித்திருக்கிறேன். இப்படியாக எங்கள் இருவர் மத்தியிலும் ஒருவித பரஸ்பர மதிப்பும் மரியாதையும் நீண்ட காலமாக இருந்து வந்தது. அதனை மிக நெருக்கமான நட்பு என்றோ வேறு பெயர் கொண்டோ விபரிக்க முடியாது.

ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை காலை நேரம் காலை காப்பி பருகியபடி எனது கணனியில் வந்து சேர்ந்திருந்த (ஈ-மெயில்) மின் அஞ்சல்களைப் படித்துக்கொண்டிருந்தேன்.

அன்று காலை வந்திருந்த ஒரு அஞ்சல் என்னை தூக்கி வாரிப்போட்டது! என் சோம்பல், தூக்கக் கலக்கம் அனைத்தும் பறந்து சென்றன. அந்த ஈமெயில் அந்தப் பாடகி அனுப்பியிருந்தது!




"அன்புள்ள விமல், நான் நைஜீரியாவில் ஒரு நட்சத்திர ஹோட்டலில் மிகவும் மோசமாகச் சிக்குண்டிருக்கிறேன். என் பாஸ்போர்ட், பயணச்சீட்டுக்கள், பணம் அனைத்தும் திருடப்பட்டு விட்டன. இங்கிருந்து வெளியேற முடியவில்லை. ஹோட்டல்காரர்கள் பணம் கேட்டு வற்புறுத்துகிறார்கள். நைஜீரிய பொலிசார் லஞ்சம் கேட்கிறார்கள். பிரிட்டிஷ் தூதரகம் அவ்வளவாக அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

ஹோட்டலின் மனேஜர் மட்டும் என் மீது இரக்கம் காட்டி உதவ முன்வந்திருக்கிறார். இந்த ஈமெயில் கிடைத்ததும் தயவுசெய்து £ 500 பவுண்ட் பணத்தை மனேஜரின் (கீழ்க்காணும்) பெயருக்கு 'வெஸ்டன் யூனியன்' மூலமாக உடனடியாக அனுப்பி வைப்பீர்களா? நான் லண்டன் வந்ததும் திருப்பித் தந்து விடுவேன்" என்று அந்தப் பாடகி மின் அஞ்சலில் கேட்டிருந்தார். எனக்கோ அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி!

என்னிடம் பணம் கேட்கும் அளவுக்கு அவர் எனக்குத் தோழி அல்ல! அவர் ஏன் நைஜீரியாவுக்குப் போனார்? (இலங்கைக்குச் செல்பவர்கள் டுபாயில், மும்பையில், சென்னையில், சிங்கப்பூரில் தடைப்பட்டால் நம்பலாம்) யாரோ மூன்றாம் பேர்வழியின் பெயரில் அந்த மூன்றாம் தர பணப்பரிமாற்ற நிறுவனத்துக்கு அனுப்பும்படி என்னை ஏன் அவர் கேட்டார்?

இலண்டனில் அவருக்கு நெருக்கமான எத்தனையோ தோழியர், பரதநாட்டிய மாணவியர், பெற்றோர் இப்படிப் பலர் இருக்கும்போது என்னிடம் ஏன் அவர் £ 500 பவுண்ட் கடனாகக் கேட்டார்?

அந்த மின் அஞ்சலில் காணப்பட்ட பல ஓட்டைகள் அது ஒரு மோசடி என்று எனக்குக் காட்டின.

இது நடந்து சில மாதங்கள் கழிந்த பின் மற்றோர் அரங்கேற்ற நிகழ்ச்சிக்கான ஆயத்தங்களுடன் சில பெற்றோர் என்னைச் சந்தித்தார்கள். "பாடல்கள் பாடப்போவது யார்?" என்று கேட்டேன். அந்தப் பாடகியின் பெயரைச் சொன்னார்கள். "அவர் விடுமுறையில் யாழ்ப்பாணம் சென்றிருக்கிறார் அரங்கேற்ற திகதிக்கு முன் வந்து விடுவார்" என்றும் சொன்னார்கள்.

அரங்கேற்ற தினம் வந்தது. அந்தப் பாடகி வழக்கம்போல் கவர்ச்சிகரமாக மேடையில் அமர்ந்து அற்புதமாகப் பாடி அனைவரையும் மகிழ்வித்தார். இடைவேளையின்போது அவரைச் சந்தித்து, "என்ன நைஜீரியாவுக்குப் போயிருந்தீர்களா?" என்று நகைச்சுவையாகக் கேட்டேன்.

"ஐயோ விமல்! நீங்களுமா? எனது (லப் டொப்) மடிக் கணினி திருடப்பட்டு விட்டது. திருடர்கள் எனது ஈமெயில் பதிவேட்டிற்குள் நுழைந்து எனது அத்தனை நண்பர்களிடமும் பணம் பறிக்க முயற்சித்திருக்கிறார்கள்!


நீங்கள் பணம் அனுப்பி ஏமாறும் அசடு அல்ல! எனது மடிக் கணினி திருடப்பட்டதால் எனக்கு



அசௌகரியமே தவிர பண நஷ்டம் எதுவும் ஏற்படவில்லை. எனது பயணக் காப்புறுதி நிறுவனம்(இன்சூரன்ஸ்) புதிய மடிக் கணினி வாங்க பணம் தந்து விட்டது."

ஓட்டைகள் பல கொண்ட ஒரு மின் அஞ்சலைப் பார்த்து, உடனடியாக, "கானகத்தே காரிருளில் தவித்து நிற்கும் காரிகைக்கு உதவுவதாக" நினைத்துக்கு கொண்டு பணம் அனுப்பும் வடிவேல், செந்தில் போன்ற அப்பாவிகள் கடைசியில், "அட அவனா நீ!" என்று வியக்கும் அளவுக்கு மனம் வருந்த நேரிடும்.

வடிவேல், செந்தில் போன்ற அப்பாவிகளைச் சுரண்டிப் பணம் பறிக்கும் பல கும்பல்கள் இணைய வலையில் இயங்கி வருகின்றன. எனவே உங்கள் மின் அஞ்சலுக்கு வரும் எல்லாக் கடிதங்களையுமே அவசரப்பட்டு நீங்கள் திறக்கக்



கூடாது. திறந்தாலும் பதில் எழுதக் கூடாது! அவர்கள் கேட்ட தகவல்களை அனுப்பவும் கூடாது. அந்த மின் அஞ்சல்களை 'குப்பைத் தொட்டி' விசையை அழுத்தி 'டிலீற்' செய்யுங்கள்.

'பாடகி என்னிடம் பணம் கடனாகக் கேட்டது போன்று சில மோசடிக்காரர்கள் . இயங்குவது போல இன்னும் சிலர் நேரடியாகவே உங்கள் வங்கியின் இணையத் தளத்துக்குச் சென்று உங்கள் பணத்தைத் திருடுகிறார்கள்.

இதைத் தடுக்க நீங்கள் அறிய வேண்டிய மிக மிக முக்கிய பாடம்: உங்கள் வங்கி, உங்கள் கணக்கு இலக்கம், ரகசிய 'பாஸ்வேர்ட்' உங்களிடம் ஒரு நாளுமே, ஒருபோதுமே கேட்கப் போவதில்லை.

மோசடிக்காரர்கள் கடைப்பிடிக்கும் உத்திகளில் மிக பொதுவானது ஒன்று இருக்கிறது.

உங்கள் வங்கி / கடன் அட்டை நிறுவனம் உங்களுக்கு அனுப்புவது போல ஒரு போலி மின் அஞ்சல் உங்களுக்கு வரும்.

அதில்:

"ஐயா! பல மோசடிகள் நடத்தப்பட்டு வருகின்றன. உங்கள் கணக்கும் பாதிக்கப்பட்டிருக்கிறதா என்று நாம் அறிய விரும்புகிறோம். இந்த ஈமெயில் கிடைத்த 15 நிமிடங்களுக்குள் உங்கள் முழுப்பெயர், வங்கி கணக்கு இலக்கம், சோர்ட் கோட், பாஸ்வேர்ட் ஆகியவற்றை எமது மின் அஞ்சலுக்கு உடனே அனுப்பி வையுங்கள்" என்று காணப்படும். இதனைக் கண்டு நீங்களும் ஏமாறாமல் மிக ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும்.




முடிவாக - இப்படியான மோசடிகளில் நீங்கள் சிக்கியிருந்தால் அல்லது சிக்க நேர்ந்தால் பிரிட்டிஷ் பொலிசார் தந்துள்ள இலக்கத்துடன் அல்லது இணையத் தளத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்:

WWW.ACTIONFRAUD.POLICE.UK

Tel: 0 300 123 2040

சமஸ்

# அற்புதம்மாளின் தாய்மைப் போராட்டம்!






## வெள்ளத்தில் அடித்துச் சென்ற தீர்ப்பு!!

தமிழகத் தலைநகரம் வரலாறு காணாத வெள்ளத்தில் தத்தளித்த 2015, டிச.2-ல், பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரை விடுவிப்பது தொடர்பான வழக்கில் தீர்ப்பு வெளியானது, ராஜீவ் கொலை வழக்கில், மரண தண்டனை வளையத்திலிருந்து வெளியே வந்து, இப்போது ஆயுள் தண்டனையை அனுபவித்துவரும் இவர்களை விடுவிக்க தமிழக அரசு மேற்கொண்ட முயற்சிக்குப் பேரிடியாக விழுந்தது அன்றைய தினம் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு.

உச்ச நீதிமன்றம் குறிப்பிட்ட மூன்று விஷயங்கள் இத்தீர்ப்பில் முக்கியமானவை.

1. ஆயுள் தண்டனை என்பதற்கு, 'எஞ்சிய ஆயுள் முழுவதற்குமான் தண்டனை' என்பதே அர்த்தம்.

2. மத்தியப்புலனாய்வு அமைப்பால் விசாரிக்கப்பட்ட வழக்கில் தண்டனைக் குறைப்பு வழங்க முற்பட்டால் அந்த முடிவை மாநில அரசு மட்டுமே எடுத்துவிட முடியாது; மத்திய அரசின் ஒப்புதல் வேண்டும்.

3. தேசப் பாதுகாப்பை மனதில் கொள்ளாமல் மன்னிப்பின்பேரில் ஆயுள் தண்டனைக் கைதிகளை விடுவிக்க முடியாது. தேசத் தலைவர்கள் கொல்லப்படுவதை உள்நாட்டு அல்லது வெளிநாட்டுத் தாக்குதல் நடவடிக்கையாகவே கருத வேண்டும்.

சாதாரண நாட்களில் வெளியாகியிருந்தால், தமிழகத்தில் பெரும் அதிர்வுகளை இந்தச் செய்தி உருவாக்கியிருக்கக் கூடும்.


தலைமை நீதிபதி எச்.எல். தத்து ஓய்வு பெற்ற நாளில், அவர் தலைமையிலான ஐந்து நீதிபதிகள் அடங்கிய அரசியல் அமர்வுதான் இத்தீர்ப்பை அளித்தது. ராஜீவ் கொலை வழக்கில் தண்டனை பெற்றவர்களைத் தாண்டி, மனித உரிமைகள் - மாநிலங்களின் உரிமைகள் இரண்டின் மீதும் விழுந்திருக்கும் பலத்த அடி இத்தீர்ப்பு. மேலும், இந்தியச் சிறைகளில் வதைப்பட்டுக் கிடக்கும் பல நூற்றுக்கணக்கான சிறைவாசிகள், அவர்கள் குடும்பங்களின் எதிர்கால நம்பிக்கைகள் மீது விழுந்திருக்கும் கரும்பூச்சு, கூடவே, கூட்டாட்சி முறையின் அடிப்படைத் தத்துவத்தையும் இது கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது.

ராஜீவ் கொலை வழக்கு ஆரம்பம் முதலே முரண்பாடுகளினூடேதான் கடந்துவந்திருக்கிறது. மனித உரிமைகள் இந்த வழக்கில் எப்படியெல்லாம் சிக்கி மூச்சுத் திணறின/திணறிக்கொண்டிருக்கின்றன என்பதற்குப் பேரறிவாளன் ஒரு உதாரணம் போதும்.

ராஜீவ் கொலை வழக்கில் பேரறிவாளன் உள்ளிட்டோர் 1991/ல் கைது செய்யப்பட்டபோது பேரறிவாளனின் வயது 19, மனித உரிமை அத்துமீறல்களுக்குப் பேர்போன கொடுங்கோன்மைச் சட்டமான தடா சட்டத்தின் கீழ் மூடிய அறைக்குள் விசாரணை நடத்தப்பட்ட வழக்கு இது. பின்னாளில், தடா சட்டமே ரத்துசெய்யப்பட்டது, தடா சட்டத்தின் கீழ் விசாரிக்கப் பொருத்தமற்ற வழக்கு அல்ல இது எனும் முடிவை உச்ச நீதிமன்றம் எடுத்தது. ஆனாலும், தடா சட்டத்தின் கீழ் பெறப்பட்ட வாக்குமூலங்களை அடிப்படையாகக் கொண்டே இந்த வழக்கை அணுகியது. எந்த வாக்குமூலம் பேரறிவாளனுக்கு எதிரான, வலுவான ஆயுதமான விசாரணை அமைப்புகளால் முன்வைக்கப்பட்டதோ, அந்த வாக்குமூலத்தைப் பதிவு செய்த விசாரணை அதிகாரியான தியாகராஜன் வாக்குமூலப் பதிவின்போது நடந்த தவறைப் பின்னாளில் தானாக முன்வந்து தெரிவித்தார்.

பேரறிவாளன் ஒரு குற்றவாளியாக, 25 ஆண்டுகளாகச் சிறையில் இருக்கிறார். இளமையை இழந்து, உடல் நலம் குலைந்து இப்போது 44 வயதில் ரத்த அழுத்தம், முதுகு வலி, சிறுநீரகத் தொந்தரவு என்று ஏகப்பட்ட உடல் பிரச்சினைகளையும் மனநெருக்கடிகளையும் சுமந்து நிற்கிறார். மரணத்துக்கு எதிராகப் பெரும் போராட்டம் நடத்திக் கொண்டே இந்த இடைப்பட்ட காலகட்டத்தில் இரண்டுக்கும் மேற்பட்ட பட்டப் படிப்புகளையும் பட்டயப் படிப்புகளையும் சிறைக்குள்ளேயே படித்து முடித்து, படிப்பில் முதலில் வந்ததற்காகத் தங்கப் பதக்கமும் வென்றிருக்கிறார்.

இன்றைக்கு ராஜீவ் போன்ற ஒரு தலைவரின் கொலையைத் தேசத்தின் மீதான தாக்குதலாகப் பார்க்க வேண்டும் என்கிறது, உச்ச நீதிமன்றம். 350க்கும் மேற்பட்டோர், உயிரைப் பறித்த 1993 மும்பை தொடர் குண்டுவெடிப்பு தேசத்தின் மீதான அப்பட்டமான தாக்குதல். ராஜீவ் கொலை வழக்கில் பேரறிவாளன் செய்த தவறு, எதற்காக என்று தெரியாமல் பேட்டரிகள் வாங்கிக் கொடுத்தது மட்டுமே. மும்பை தொடர் குண்டுவெடிப்புகளில் சஞ்சய் தத் செய்த தவறு தாவூத் இப்ராஹிம் ஆட்கள் கொடுத்த துப்பாக்கிகள், எறிகுண்டுகளை வைத்திருந்தது. அடுத்த மாதம் சஞ்சய் தத்தை முன்கூட்டியே விடுவிக்கப்போவதை இப்போதே மகாராஷ்டிரத்திலிருந்து வரும் செய்திகள் சொல்கின்றன.



சஞ்சய் தத்துக்கு விதிக்கப்பட்டது 6 ஆண்டுகள் சிறைத் தண்டனை, பின்னர், அது மேல்முறையீட்டில் அது 5 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. அந்தத் தண்டனையையும் அவர் தொடர்ச்சியாக அனுபவிக்கவில்லை. பலமுறை பரோலில் விடுவிக்கப்பட்டார். வீட்டில் இருந்தார். படங்களில் நடித்தார். சுற்றிப் பறந்தார். 2013-ல் தண்டனை உறுதி செய்யப்பட்ட பிறகு, 150 நாட்கள் மட்டுமே முழுவதுமாகச் சிறையில் இருந்திருக்கிறார். எஞ்சிய தண்டனைக் காலம் முடியும் முன்னரே இப்போது வெளியே வரப்போகிறார். வரட்டும், தவறல்ல. திருத்தி சமூகத்துக்குத் திருப்பி அனுப்பத்தானே சிறைச்சாலைகள்? ஆனால், நீதி எல்லோருக்கும் ஒன்றானதாக இருக்க வேண்டும்!

சட்ட மேதைகள் வாதாடலாம். "மகாராஷ்டிர அரசு மும்பை குண்டுவெடிப்பு வழக்கை மத்தியப் புலனாய்வு அமைப்பிடம் ஒப்படைக்கவில்லை. ஆகையால், அது தன்னிச்சையாக முடிவெடுக்கிறது, தமிழக அரசு தானாக முன்வந்து ராஜீவ் கொலை வழக்கை ஒப்படைத்தது. அதனால்தான் இப்போது சிக்கி நிற்கிறது. சஞ்சய் தத் வழக்குக்கும் பேரறிவாளன் வழக்குக்கும் இடையே இப்படிப் பல வேறுபாடுகள் இருக்கின்றன..." என்று வரிசையாக வாதங்களை அடுக்கலாம். சாமானிய மக்களுக்குச் சட்ட விதிகளின் நுணுக்கங்கள் தெரியாது. ஆனால், தர்மம் தெரியும். அவர்கள் பேரறிவாளனையும் சஞ்சய் தத்தையும் ஒப்பிடவே செய்வார்கள்! அங்கிருந்தும் நம் நீதி பரிபாலன முறையை மதிப்பிடவே செய்வார்கள்.!

மகன் பேரறிவாளனை விடுவிக்க இன்றைக்கு 69 வயதான அற்புதம் அம்மாள் நடத்திக் கொண்டிருக்கும் அயராத போராட்டம் ஒரு தாயின் தாய்மைப் போராட்டம் மட்டுமே அல்ல. அது இந்நாட்டின் நீதி எல்லோருக்கும் சமமானது, இந்நாட்டில் ஜனநாயக மாண்புகளுக்கு இன்றைக்கும் மதிப்பு இருக்கிறது, உண்மை ஒரு நாள் வென்றே தீரும் என்று நம்பிக்கொண்டிருக்கும் கோடிக்கணக்கான சாமானியர்களின் பிரதிநிதித்துவப் போராட்டம். ஒரு வழக்குரைஞரைக்கூடத் தனக்கென நியமித்துக்கொள்ளும் வசதியில்லாமல், சட்டப் போராட்டங்களுக்கான வாய்ப்பே தெரியாமல் சிறைக்குள்ளேயே மருகிக்கொண்டிருக்கும் கோடிக்கணக்கான சாமானிய சிறைவாசிகளை இருட்டிலிருந்து வெளிச்சத்துக்குக் கொண்டுவர பாரம் சுமக்கும் போராட்டம்.

இந்தியா மனிதநேயத்தோடு மரண தண்டனைக்கான புதிய வரையறையை எழுத தமிழக மக்களின் தன்னெழுச்சியான போராட்டங்கள் தேவைப்பட்டன. இந்தியா மனிதநேயத்தோடு ஆயுள் தண்டனைக்கான புதிய வரையறையை எழுதவும் தமிழக மக்களின் தன்னெழுச்சியான போராட்டங்கள் தேவையா? ■

# அ.தி.மு.க. ஆட்சிக்கு சவால் விடும் செம்பரம்பாக்கம் ஏரி!

தமிழகத்திலிருந்து கே.ஜி.மகாதேவா

மே மாதத்தில் நடைபெறவிருக்கும் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில், அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு, செம்பரம்பாக்கம் ஒரு பெரிய சவாலாக இருப்பதால், வெள்ளப் பாதிப்பு நிவாரண (கடந்த மாதம் 15-ம் திகதி வரை தமிழக முதல் அமைச்சரின் வெள்ள நிவாரண நிதிக்கு மொத்தம் முந்நூற்று பத்துக் கோடியே, எண்பத்து இரண்டு லட்சத்து, முப்பத்தேழாயிரத்து நானூற்றி தொண்ணூற்றொன்பது ரூபாய் சேர்ந்துள்ளது) நிதியாகக் குவிந்துள்ளதை முடிந்தவரை "அன்பளிப்பாக" ஊதித்தள்ளி தனது அரசியல் நிலைப்பாட்டை மீண்டும் உறுதி செய்து கொள்வதில் அ.தி.மு.க. பெரும் முனைப்புடன் செயல்படத் தொடங்கிவிட்டது. செம்பரம்பாக்கம் சவாலாக இருப்பதால்; செம்பரம்பாக்கம் ஏதோ ஒரு புதிய அரசியல் கட்சி என்றோ புதிய கூட்டணி என்றோ எண்ணி விடாதீர்கள். சென்னை மாவட்டங்களை புரட்டிப் போட்டு, நூற்றுக்கணக்கில் மனித உயிர்களைக் காவு கொண்டு, ஆயிரக்கணக்கில் கால்நடைகள் மற்றும் பறவை இனங்களை அழித்து, ஆயிரக்கணக்கில் பலரின் வாழ்வாதாரத்துக்கும் உலை வைத்த ஏரியின் பெயர்தான் செம்பரம்பாக்கம் (லேக்)!

மழை வரவை எதிர்பார்த்து சென்னைக்கு குடி நீர் வழங்கும் இரண்டு பிரதான ஏரிகளில் ஒன்று இது. மற்றையது புழல் ஏரி. செம்பரம்பாக்கம் ஏரி, சென்னையிலிருந்து நாற்பது கிலோமீட்டர் தூரத்திலுள்ள காஞ்சிபுரம் மாவட்டத்தில் இருக்கிறது. பதினாறு அறைகளைக் கொண்ட கண்மதகுகள் காணப்படுகின்றன. இதன் மொத்த நீர் கொள்வனவு 364.5 கோடி கன அடியாகும். நீர் மட்டம் சராசரி உயரம் 83.8 அடியாகும். ஆனால், முன் அறிவிப்பு, எச்சரிக்கை இல்லாமல் பேரழிவை ஏற்படுத்திய இந்த ஏரி, டிசம்பர் மாதம் முதலாம் திகதி நள்ளிரவு திறந்து விடப்பட்டபோது நீர்மட்டம் சராசரி கொள்வனவு 85.4 அடி உயரமாக அதிகரித்துக் காணப்பட்டது! முதல் அமைச்சர் ஜெயலலிதாவின் நீர் திறப்பு உத்தரவு சரியான நேரத்தில் உரிய முறையில் உயர் அதிகாரிகளுக்குக் கிடைக்காததால்தான் இத்தனை கொடிய சேதம் உண்டானது என்றும் அடையாறு பெருக்கெடுத்ததற்கும் இதுவே காரணம் என்றும், ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளும் தமிழக அரசு மீது குற்றம் சுமத்துகின்றன! இந்த நிலையில்தான் தனது ஆட்சி அரசியலை மீண்டும் ஸ்திரப்படுத்தும் வகையில் அ.தி.மு.க. அரசு திடீரென கடந்த டிசம்பர் பிற்பகுதியில் 'அவிழ்த்து விட்ட' அ.தி.மு.க.வின் சாதனைகளை விளக்கும் இலட்சியப் பேரணியாகும் என்று அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிடுகின்றனர்.

## தி.மு.கவுக்கு பதிலடியாக அ.தி.மு.க.வின் அதிரடி திட்டம்

தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின் சில மாதங்களுக்கு முன்னர் ஆரம்பித்து, நான்கு கட்டங்களாக நாட்டின் பல மாவட்டங்களிலும் பரவலாக நடைபெற்று அண்மையில் உண்டான வெள்ளக் கொடுமைக்குப் பின்னர் சென்னை மாவட்டத்தின் சில பகுதிகளிலும் இடம் பெற்ற 'நமக்கு நாமே விடியல் பயணத் திட்டம்' சுலபமாக வாக்காளர் பெருமக்களை வெற்றிகரமாக சென்றடைந்ததன் எதிரொலிதான் அ.தி.மு.க. திடீரென அதிரடியாகத் தொடங்கிய 'இலட்சியப் பேரணி' என்றும், அ.தி.மு.க. நிறுவனத்தலைவரும், பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவருமான எம்.ஜி.ராமச்சந்திரனின் 99-வது பிறந்த நாளை முன்னிட்டு முதல் அமைச்சர் ஜெயலலிதா அ.தி.மு.க. தொண்டர்களுக்கு "சட்டமன்றத் தேர்தல் பணிகளை ஒற்றுமையுடன் உணர்வு பூர்வமாகத் தொடங்குங்கள்" எனும் அழைப்பு என்றும் விமர்சிக்கப்படுகிறது. தமிழக அரசியல் மற்றும் கலை உலகின் கடந்த நூற்றாண்டு வரலாற்றில் பெரும்பாலான ஆண்டுகள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் புகழ்பாடும் ஆண்டுகளாகவே கடந்திருக்கின்றன. இதற்கு, அரசியலிலும், கலைத்துறையிலும் தனது தன்னலமற்ற கடின உழைப்பாலும், பொது நலம் நோக்கிய செயல்திட்டங்களாலும், எம்.ஜி.ஆர். செய்து முடித்த சாதனைகளே காரணமாகும்



டிசம்பர் மாதம் நடைபெற்ற அ.தி.மு.க. பொதுக்குழுவில் பல தீர்மானங்களை நிறைவேற்றி ஒரு மாநாடு போல் நடத்தியதில் தேர்தல் வியூகம் பற்றி ஒரு தீர்மானம்கூட நிறைவேற்றப்படவில்லை. இந்த நிலையில் சட்டமன்றத் தேர்தலில் கூட்டணியா அல்லது தனித்தா என்று மூச்சுவிடப்படாத சூழலில், ஜெயலலிதா ஆற்றிய சிறப்புரையில் மட்டும், "தேர்தலில் நமது நிலைபற்றி இப்போது கவலைப்படத் தேவையில்லை. சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் நாட்கள் இருப்பதால், அவசரப்படத் தேவையில்லை. நான் நல்ல முடிவெடுப்பேன்" என்று கூறிவிட்டு அந்த மை காய்வதற்குள்ளாகவே எதிர்க்கட்சிகள், குறிப்பாக தி.மு.க. பலம் அறிந்து 'இலட்சியப் பேரணி'யை திடுதிப் என்று, முகூர்த்த நேரம் பார்த்து ஆரம்பித்துவைத்துவிட்டார். இதன் தொடர்ச்சியாக, தேர்தல் பணிகளை ஒருங்கிணைந்து முழு ஈடுபாட்டுடன் உடனடியாக தொடங்கிவிடவேண்டும் என்று அ.தி.மு.க. தொண்டர்களுக்கு முதல்வர் ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## அ.தி.மு.க. பொதுக் குழுவில் ஜெயா வெளியிட்ட கருத்து: பின்னணி என்ன?

ஆண்டுக்கு ஒரு தடவை பெரிய மாநாடு போல் அ.தி.மு.க. பொதுக்குழு கூடுவதும், முதல்வர் ஜெயலலிதாவின் பேச்சை வேதவாக்காகக் கொண்டு கட்சியினர் அம்மா வழியில் செயல்படுவதும் ஒரு நாவலாகும். 'பேச்சு சுவாரஸ்யமின்றி அசௌகரியம் ஏற்படுத்தினால் முணுமுணுப்பார்களே தவிர எதிர்த்துப் பேசமாட்டார்கள். கட்சியை விட்டு வெளியேறவும் மாட்டார்கள். இதே மாதிரி கடந்த டிசம்பர் 31 இல் சென்னை திருவான்மியூரில் அ.தி.மு.க. பொதுக்குழு ஒரு மாநாடு போல் நடந்தது. பொதுக்குழு காலை பத்தரை மணிக்கு கூடும் என்று அறிவிக்கப்பட்டிருந்தும், இரண்டு மணி நேரத்துக்கு முன்பாகவே களைகட்டி, அரங்கம் நிறைந்துவிட்டது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய 14 தீர்மானங்களைக் கொண்ட நகல்கள் பொதுக்குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. இதில், 11-வது தீர்மானம், தி.மு.க.வை பெயர் குறிப்பிடாமல் நேரடியாகத் தாக்கியது.

"சுயநல அரசியலுக்காக மக்களை பலியாக்கி வளம்பெறத் துடிக்கும் தீய சக்திகளையும், அதன் வாரிசுகளையும் தலையெடுக்காமல் தடுக்க தமிழக மக்களுக்கு அறைகூவல் விடுக்கின்றோம்" என்று 11-வது தீர்மானம் கோரியது. அதாவது, வரும் சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க கடுமையாக தோற்கடிக்கப்பட்டு, கட்டுப்பணமும் இழந்த நிலையில் அதிமுக மகத்தான வெற்றியை மீண்டும் பெற தேவையான நடவடிக்கைகளை ஜெயலலிதா மேற்கொள்ள இத்தீர்மானம் அதிகாரம் அளிக்கிறது! ஆனால், தனி ஆவர்த்தனமா அல்லது கூட்டணி அல்லது தனித்துப்போட்டியா என்பது பற்றி தீர்மானங்கள் எதுவும் மூச்சுவிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆட்சிகளின்போது, பொதுக்குழு தீர்மானங்களை முன்மொழியும் வாய்ப்பு மூத்த நிர்வாகிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. ஆனால், இம்முறை 13 தீர்மானங்களையும் ஒருவரே முன்மொழிய உப்புச் சப்பற்ற ஒரு தீர்மானத்தை ஜெயலலிதா முன்மொழிந்தார். முதல்வரின் கருத்தையும் தீர்மானத்தையும் கண்கொட்டாமல் விழித்திருந்து காது கொடுத்தவர்கள் ஏமாற்றப்பட்டனர். காரணம்; ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கு தீர்ப்புக் காரணமாக 263 பேர் மாரடைப்பினாலும், தற்கொலையாலும் இறந்தவர்கள். அவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் 2வது தீர்மானத்தை ஜெயலலிதா முன்மொழிந்ததே.


## நாளை நடப்பதை யாரறிவார்? தீர்மானமே ஜெயா பேச்சுதான்!

பொதுவாக கட்சியின் தீர்மானங்களில் ஜெயலலிதா பொடி வைத்து பேசமாட்டார். ஒரே வெட்டு இரு துண்டுகள் கதைதான். அவர் எடுக்கும் முடிவில், பேச்சில் அதிரடி இருக்கும். கட்சியினரை வியப்புக்குள்ளாக்கும். ஆனால், பொதுக்குழு கூட்டத்துக்கு காலை 10.45க்கு வந்திருந்த ஜெயலலிதா பகல் 12.20க்குத்தான் கூட்டத்தை விட்டுப் புறப்பட்டார். "வரும் தேர்தலில் அப்போதை சூழலுக்கேற்ப தகுந்தபடி (கூட்டணியா அல்லது தனித்தா) முடிவெடுப்பேன். இத்தேர்தலை எதிர்கொள்ள, கூட்டணி அமைப்பதற்கு நிரந்தர யுக்தி எதுவும் கிடையாது. வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. மீண்டும் ஆட்சியமைக்கும்" என்று தனது பேச்சில் மூச்சுவிட்டார் ஜெயலலிதா. இதுவே பொதுக்குழுவின் முக்கிய 'பிரகடன'மாக பேசப்பட்டது. நாளை நடப்பதை தனது பேச்சு மூலம் புதிராக்கியிருக்கிறார் ஜெயலலிதா. முடிச்சுப் போடவேண்டியது கட்சியினர்தான்.

## தி.மு.க.வின் 'நமக்கு நாமே' போல் அ.தி.மு.க. லட்சியப் பேரணி!

தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின் கடந்த செப்டம்பர் மாதம் கன்னியாகுமரியில் ஆரம்பித்துவைத்த 'நமக்கு நாமே விடியல்' பயணத் திட்டத்தின்போது தொழிலாளர்கள், வியாபாரிகள், விவசாயிகள், விசைத்தறி தொழிலாளர்கள், கைத்தறி நெசவாளர்கள், கட்டிடத் தொழிலாளர்கள் என்று பலதரப்பட்ட மக்களைச் சந்தித்து தி.மு.க. பலத்தை அதிகரித்துவரும் அதே நேரம், நான்காவது கட்டமாக தனது விடியல் பயணத்தை சென்னை மாவட்டம் உள்ளிட்ட 22 தொகுதிகளில் ஆரம்பித்தார். ஆர்.கே. நகர் தொகுதியில் துப்புரவு தொழிலாளர்களை கை குலுக்கி வரவேற்று அவர்கள் குறைபாடுகளைத் தெரிந்துகொண்டார். இவர்கள் மத்தியில் மு.க.ஸ்டாலின் பேசுகையில்; "தெருக்களை சுத்தம் செய்யும் நீங்கள் இந்த ஆட்சியை சுத்தம் செய்ய வேண்டும். இனிவரும் காலங்களில் மக்களின் குறைபாடுகளை அறிய அமைச்சர்கள், எம்.பி.க்கள், எம்.எல்.ஏக்கள் வருவார்கள்.

தொடர்ச்சி 28-ம் பக்கம்...







# 23 வது ஆண்டாக லண்டனில் மேடையேறும்

## ஸ்ரீமதி யோகா தில்லைநாதனின்



## கானக்குயில்-2016

**02.07.2016**

**GREENFORD ASSEMBLY HALL**

**RUISLIP ROAD. GREEN FORD UB 6 9QN**

போட்டியில் பங்குபெற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

'கானக்குயில் -2016' நிகழ்ச்சியில் பாட விரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்: 020 34898309/07903327708

**Email : arumthill@hotmail.com**

விண்ணப்பம் முடிவு திகதி:

**10.03.2016**

பிறந்த திகதி, பாட விரும்பும் இரு பாடல்கள், தொலைபேசி எண், முகவரி குறிப்பிட வேண்டும். பாட விரும்பும் பாடல்கள் சினிமாவில் வரும் ஆண் தனிப் பாடல் ஆண்களும், பெண் தனிப்பாடல் பெண்களும் தெரிவு செய்ய வேண்டும்.

**பால கானக்குயில்:**
8 வயது முதல் 12 வயது வரை (ஆண், பெண்)

**இளைய கானக்குயில்:**
13 வயது முதல் 16வயது வரை (ஆண், பெண்)

**கானக்குயில்:**
17 வயதுக்கு மேல் (ஆண், பெண்)



# ENGINE TEC MOTORS

we offer Facilities for

- Servicing
- Clutches
- Brakes
- Overhauls
- Car Electricals
- Pre - MOT Checks
- ALL Types of Repair & Body Work
- Insurance Work Undertaken

**என்ஜின் ரெக் மோட்டர்ஸ் உங்கள் கார் திருத்த வேலைகளுக்கு நம்பிக்கையான நிறுவனம்**

Ask for Vel or Rajan
Tel: 020 8640 8000
020 8640 1230
Mob: 0786 0226 476
07860 770 945

Email: vel@etmluk.com
rajan 339c@gmail.com
www.etmluk.com



**Unit 5,339 London Road, Mitcham, Surrey CR4 4BE**

**தமிழிலேயே பேசி உங்கள் கார் பிரச்சனையைத் தீர்த்துக் கொள்ளலாம்.**

CEC SEND MONEY FROM 35 BRANCHES

| | |
|---|---|
| CENTRAL LONDON | 0207 355 3800 |
| OAKWOOD | 0208 886 4488 |
| FINCHLEY | 0208 343 3737 |
| EDMONTON | 0208 884 4646 |
| ST.ALBANS | 0172 786 1111 |
| ROMFORD | 0170 873 3633 |
| HOLLOWAY RD | 0207 700 7575 |
| BARNET | 0208 449 4033 |
| HENDON | 0208 202 4300 |
| ILFORD | 0208 553 5300 |
| CHISWICK | 0208 995 9585 |
| BRICK LANE | 0207 033 4600 |
| CAMDEN NW1 | 0203 437 1200 |
| FLEET STREET | 0207 936 4646 |
| WALTHAMSTOW | 0208 521 5252 |
| WOOD GREEN | 0208 889 6464 |
| SWISS COTTAGE | 0207 722 6767 |
| ROYAL DOCKS | 0207 474 4700 |
| GOLDERS GREEN | 0208 455 0099 |
| CAMDEN | 0207 284 1415 |
| LONDON BRIDGE | 0207 407 5717 |
| WELWYN G.CITY | 0170 733 3883 |
| FULHAM | 0203 437 1223 |
| GREEN STREET | 0208 552 5100 |
| TOOTING | 0203 437 1220 |
| GOLDERS GREEN | 0208 455 0099 |
| HARROW | 0203 437 1221 |
| DALSTON | 0203 437 1222 |
| BAKER STREET | 0203 437 1225 |
| WEMBLEY LDO | 0203 437 1226 |
| HATFIELD | 0203 437 1227 |
| STRATFORD | 0203 437 1228 |
| KENTISH TOWN | 0208 886 4488 |
| ERITH | 0203 437 1229 |
| TOTTENHAM COURT RD | 0203 437 1212 |

SINCE 1999

FAST CASH
SEND TODAY - COLLECT TODAY

CENTRAL BANK APPROVED
MONEY TRANSFERS TO SRI LANKA

48 MITCHAM ROAD, TOOTING SW17 9NA

2 MINUTES FROM TOOTING BROADWAY AND NEXT TO GALA BINGO

இலங்கைக்கான பணமாற்று சேவை
நம்பிக்கை நாணயமிக்க மிக துரிதமான சேவை

குறிப்பிட்ட அதே நாளில் பணத்தை அங்கு பெற்றுக்கொள்ளவோ அன்றி அங்குள்ள உங்களது எந்த வங்கிக் கணக்கிலும்வைப்பு செய்ய கூடியதான வசதிகள்.



SWIFT CREDITS TO ANY BANK ACCOUNT
SEND TODAY, CREDIT TODAY*
*COMMERCIAL BANK ACCOUNTS ONLY. T/C APPLY.

OUR PROMISE
YOUR MONEY IS SENT FROM THE UK AND NOT CREDITED LOCALLY BY UNKNOWN SOURCES.
OFFICIAL TRANSFERS

CUSTOMER SERVICES
0208 886 4488
www.efastcash.co.uk

FASTCASH IS A FCA & HM CUSTOMS AND EXCISE / REGISTERED BUSINESS. MSB 12112819 / FCA -PI 540536

Powered By MCG

WHEREVER YOU ARE IN THE UK, YOU DON'T HAVE TO COME TO US!
CREDIT OUR ACCOUNT ONLINE WITH
BARCLAYS
& CALL US FOR IMMEDIATE TRANSFERR
A/C NAME : C.E.C. LTD
A/C NO : 70713945
SORT : 20-36-47

HNB · BOC · PEOPLE'S BANK · NSB · Sampath Bank · SEYLAN · NDB bank · Nations Trust Bank · HSBC · Standard Chartered · PAN ASIA · Vardhana Bank

HolidayAir
A Travel Experience to Remember

BEST DEALS TO SRI LANKA

DO NOT BOOK YOUR AIR TICKET WITH ANY OTHER TRAVEL AGENT UNTIL YOU SPEAK TO US!

Quality 1,2 & 3 bed
APARTMENTS
for Rent in Mt.Lavinia
Sea Side - Close to St. Thomas & Mt.Lavinia Hotel



Prices from £25 Per Day*

- Fully Furnished with AC & Lift
- 3 min to Galle Rd. 5 Min to Beach

Contact : Mike on 07733 261 999
Visit our website
www.stayatmount.com

WORLDWIDE SPECIALS
TORONTO FROM £400 NEW YORK FROM £350
MELBOURNE/ SYDNEY FROM £610

Emirates
£425 INCL. TAXES 40+7kg



| KUWAIT AIRWAYS | JET AIRWAYS | OMAN AIR | QATAR AIRWAYS | SriLankan |
|---|---|---|---|---|
| FROM £410 INCL TAXES 35+7kg | FROM £419 INCL TAXES 46+7kg | FROM £445 INCL TAXES 40+7kg | FROM £449 INCL TAXES 30+7kg | FROM £465 INCL TAXES 40+7kg |

WE SPECIALISE IN TAYLOR MADE HOLIDAY PACKAGES TO SRI LANKA TO SUIT TO ALL BUDGETS.
BOOK ANY HOTEL / ANY ROOM TYPE IN SRI LANKA, **BEST PRICE GUARANTEED!**

FOR MORE OFFERS AND OPTIONS VISIT www.holidayair.com | RESERVATIONS & ENQUIRIES PLEASE CALL SAM OR ABBY

130 HIGH STREET, BARNET, EN5 5XQ 0208 440 0770

# கலைந்திடும் கனவுகள் கண்ணீர் சிந்தும் நினைவுகள்

சிவ தியாகராஜா

"ஆசை நிலா சென்றதே
ஆசை நிலா சென்றதே
அபலை கண்ணீரில் நீந்தியே
ஆசை நிலா சென்றதே
வண்ண ரோஜா சூடிடும் முன்னே
வஞ்சக முள்ளும் பாய்ந்ததே
இன்பம் தந்த நினைவின் அலைகள்
எரியும் வேல் போல் வாட்டுதே
பொன் விளக்கேற்றி பூஜிக்கும் போது
விண்ணிலே புயலும் தாக்குதே
கன்னி எந்தன் கண்ணைக் குருடாக்கி
துன்பக் கடல்தன்னில் ஆழ்த்துதே"

- கவிஞர் சுரபி

**1**

"நான் மனதார, நெஞ்சார, உடலாக, உயிராக உங்களைக் காதலிக்கிறேன்" என ஜெயா கூறியது எனக்கு எதுவிதமான ஆச்சரியத்தையும் தரவில்லை. அவளது மனக்கிடக்கையை நான் அறிவேன். என்றாவது ஒருநாள் தனது காதலை அவள் வெளிப்படையாகக் கூறுவாள் என்பது நான் எதிர்பார்த்ததுதான்.

ஜெயா எனக்கு மிகவும் பிடித்தமான பெண். நான் அபியையும் கூட்டிக்கொண்டு போக்கிடமின்றித் தவித்தபோது பூரண விருப்பத்தோடு எங்களுக்குத் தனது வீட்டில் தஞ்சம் தந்தவள். எனது மகள் அபிராமியைத் தனது பிள்ளை போல- கண்ணை இமை காப்பது போலக் காத்து வருபவள். என்மேல் அளவு கடந்த அன்பும் மரியாதையும் வைத்திருப்பவள். அவள் துன்பப்படுவதை என்னால் சகிக்க முடியவில்லை.

ஒருவாறு என்னை ஒருநிலைப்படுத்திக் கொண்டு கேட்டேன்.

"உன் மேல் எனக்குக் காதல் இருப்பதாக என்றாவது சொல்லியிருக்கிறேனா?"

"காதல் இருப்பதை வாயால் சொல்ல வேண்டும் என்பதில்லை. முதன் முதலாக நீங்கள்தான் என்னைத் தேடி வந்தனீங்கள். நீங்கள்தான் என்னோடு பேச ஆரம்பித்தனீங்கள்.

உங்களை முதன் முதலாகச் சந்தித்த அன்று என்னோடு பேசுவதற்காக உணவுக் கோப்பையை ஏந்திக் கொண்டு நானிருந்த சாப்பாட்டு மேசைக்கு வந்தீர்களே ஞாபகமிருக்கிறதா? அன்றைக்கே என் இதயத்தைப் பறிகொடுத்து விட்டேன். அன்றிலிருந்தே உங்களைக் காதலிக்க ஆரம்பித்துவிட்டேன். எங்கள் வீட்டிற்கு நீங்கள் குடிவந்தபோது என்மேலுள்ள அன்பினால்தான் அங்கே வாழ வருகிறீர்கள் என எண்ணினேன். எனது காதலை ஏற்றுக்கொள்வீர்களா? என்னை ஏமாற்ற மாட்டீர்களே!"

நான் எதுவுமே பேசாமல் கற்சிலையாக நின்றேன்.

அவள் அழுதாள்.

எத்தனையோ ஜென்மங்களாகப் புதைத்து வைத்திருக்கிற சோகத்தையெல்லாம் கரைக்கிறவள் போல் அவள் அழுதாள்.

"என்ன கிருஷ் பதிலேதும் பேசாமல் இருக்கிறீர்களே, உங்கள் இதயம் இந்த ஐஃபல் கோபுரம் போல இரும்பினால் ஆனதா?"

விம்மினாள்.

எனது இதயமாவது இரும்பாக ஆவதாவது. அது மெழுகால் செய்யப்பட்ட மென்பொருள். ஈரக் களிமண்ணிலே பிசைந்தெடுத்த கோழைப் பிறவி. அது உருகியது! கரைந்தது!

எனது கண்களிலிருந்தும் கண்ணீர் வடிந்தது.

"ஜெயா! ஜெயா! நான் என்ன செய்ய முடியும்? ஏற்கனவே உன்னைப் போல உள்ள ஒரு இளம் பெண்ணுக்கு நான் அவளை மணப்பதாக வாக்குக் கொடுத்துவிட்டேனே! அவளை எப்படி ஏமாற்ற முடியும்!"

"நீங்கள் ஏற்கனவே திருமணமாகி உங்கள் மனைவி பிரசவத்தின் போது இறந்து விட்டாள் என்றல்லவா எண்ணிக் கொண்டிருக்கிறேன்."

"அது உண்மை அல்ல. நான் எல்லோரிடமும் அப்படிக் கூறுவது அவளுக்கு ஒரு கெட்ட பெயர் வராமல் இருக்கத்தான். நான் அவளைக் கல்யாணம் செய்து கொள்ளுமுன்னரே அவள் கருத்தரித்து அபியையும் பெற்றுவிட்டாள்"

"பிள்ளை பிறந்த பின்னர்தானும் நீங்கள் அவளைக் கல்யாணம் செய்து கொண்டிருக்கலாமே?"

"அதற்கு அவள் அவகாசம் தரவில்லை. நாங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்து வரும் வழியில் சாவகச்சேரியில் இந்தக் கைக்குழந்தையை விட்டுவிட்டு அவள் தலைமறைவாகி விட்டாள்.

பிறந்த குழந்தையை விட்டுவிட்டு, ஒரு தாய் ஓடிப்போய்விட்டாள் என்பது அவளுக்கு எவ்வளவு இழுக்கு. அதனால்தான் அவள் இறந்துவிட்டாள் என எல்லாரிடமும் சொல்லி வந்திருக்கிறேன்.

ஆனாலும் அவள் இன்னும் எங்கேயோ உயிருடன் இருப்பதாக எனது உள்மனம் சொல்கிறது.

ஒருவேளை அவள் இறந்துவிட்டதாக உறுதிப்படும் சமயத்தில் உன்னை நான் கட்டாயம் கல்யாணம் செய்வேன் ஜெயா"

"எனது வாழ்நாளில் அது நடவாமலே போகலாம். நீங்கள் என்னைக் கல்யாணம் செய்து கொள்கிறீர்களோ இல்லையோ உங்கள் மீது எனக்கிருக்கும் ஆழ்ந்த காதல் இந்த ஜென்மத்தில் என் உயிரைவிட்டு விலகாது."

விம்மியெழுந்த நெஞ்சகத்தை வலக்கையால் அழுத்திக் கொண்ட ஜெயா, எனது காலடியில் மயங்கி விழுந்தாள்.


பனியில் நனைந்து, வெய்யிலில் வெளுத்த அழகான உயிரோவியம் போல எனது காலடியில் துவண்டு கிடந்த ஜெயாவை நான் ஆசுவாசப்படுத்தினேன்.

**2**

நாங்கள் பாரிஸிலிருந்து திரும்பி வீடு வந்த பின்னரும் பல நாட்களாக ஜெயா தனக்குப் பிரியமானது எதையோ பறிகொடுத்துவிட்டவள் போலச் சோகமாகக் காணப்பட்டாள். பசியின்மையால் ஒழுங்காக உணவு உட்கொள்ளாமல் அவளது உடல் மெலிந்து கொண்டே போயிற்று. இரவில் நிம்மதியான நித்திரையில்லாமல் படுக்கையில் புரண்டு கொண்டேயிருப்பாள். அதிகாலையில் கண் விழித்தெழுந்தால் சோர்வடைந்த உடலும் உள்ளமும் அவளை வருத்தின. உடல் இளைத்து களைப்பும் சோர்வும் அவளை வீட்டில் எதுவித அக்கறையுமில்லாமல், வேலைசெய்ய இயலாமல் செய்தன.

சோகமான மனநிலையுடன் ஒருவிதமான அங்கலாய்ப்பும் மனத்தவிப்பும் அவளிடம் குடி கொண்டன. அமைதியாக இருக்க முடியாமல் அங்குமிங்கும் அலைந்த வண்ணமோ கைகளைப் பிசைந்த வண்ணமோ இருப்பாள். ஒருவரோடும் முகம் கொடுத்துப் பேசப் பிடிக்காமல் அறையை மூடிக்கொண்டு உள்ளேயே இருப்பாள். யாராவது கேள்வி கேட்டால் ஒரு சொல்லில் பதில் கூறிவிட்டுப் போய்விடுவாள். உடுப்புகளிலோ தன்னை அலங்காரம் செய்வதிலோ கவனம் செலுத்துவதில்லை. மனதை ஒருநிலைப்படுத்தி வேலையில் கவனம் செலுத்த இயலாமையால் சுகவீன லீவு எடுத்துக்கொண்டு வீட்டிலிருந்தாள்.

சிட்டுக்குருவி போல சுதந்திரமாகப் பறந்து திரிந்த ஜெயா- எப்போதும் ஹாஸ்யமாகவும், கலகலப்பாகவும் கொள்ளைச் சிரிப்புடன் உலாவிவந்த ஜெயா - சிறகொடிந்த பறவைபோல முடங்கிக் கிடந்தாள். சொல்லிழந்து, செயலிழந்து, வெறும் பொம்மையாக நடமாடும் ஜெயாவைப் பார்க்க பாவமாக இருந்தது. பரிதாபமாக



இருந்தது.

ஒருநாள் அவள் அறைக்கு வெளியே வந்த சமயம் அவளைப் பார்த்துக் கேட்டேன்-

"ஏன் ஜெயா இப்படியிருக்கிறாய்; உனது மனச்சாந்திக்கு ஒரு சைக்கியாட்றிஸ்ட் டாக்டரைப் போய்ப் பாரேன்"

"எனது வாழ்க்கைதான் வெறுமையாகிவிட்டதே, யாரைப் பார்த்து என்னத்தைச் செய்வது' என விரக்தியாகப் பதிலளித்தாள்.

ஜெயாவின் மனச்சோகம் எங்கள் எல்லோரையும் விட அதிகமாகப் பாதித்தது அபியைத்தான். அவளும் உணவு உட்கொள்ள மறுத்தாள். இரவில் அடிக்கடி கண்விழித்து எழுந்து அழுதாள். படுக்கையில் சிறுநீர் கழித்தாள். ஒரு மாதத்தின் பின் அவளுக்குக் காய்ச்சல் பிடித்தது. டாக்டரிடம் காட்டியதில் அவளுக்கு சிறுநீரகத்தில் கிருமிப்பிடிப்பு இருப்பதாகக் கண்டுபிடித்து மருந்து கொடுத்தார்.

அபி சுகவீனமுற்றிருந்தபோது அவளைப் படுக்கையில் வைத்துப் பராமரித்தது ஜெயாதான். அபியைக் கவனிக்க ஆரம்பித்த பின்னர் ஜெயாவின் மனநிலையில் முன்னேற்றம் காணப்பட்டது. சிறுகச் சிறுக ஜெயா தன் சுய நிலைக்குத் திரும்பிய பின்னரே அபியும் தன் வழமையான நிலையை அடைந்தாள்.

ஜெயா வழமைக்குத் திரும்பிய பின்னர் வேலைக்குப் போக ஆரம்பித்தாள். ஆனால், என்னோடு பேசுவதைக் குறைத்துக் கொண்டாள். முன்பெல்லாம் கலகலப்பாக மணிக்கணக்கில் பேசுபவள் இப்போது கேட்ட கேள்விக்கு மட்டும் பதில் சொல்லிவிட்டுப் போய்விடுவாள். முன்பெல்லாம் எங்கேயாவது போக வேண்டியிருந்தால் எனது காரில் 'லிஃப்ட்' கேட்பாள். இப்போதெல்லாம் ஒரு டாக்ஸியை அமர்த்திக் கொண்டு போய் விடுவாள்.

எனது பிடிவாத குணத்தினால் அழகிய ஒரு நட்பை இழந்து கொண்டிருக்கிறேனோ என ஆதங்கப்பட்டேன்.

வருட முடிவில் ஜெயா 'டிரைவிங்' பரீட்சையில் சித்தி பெற்று தனக்கென்று ஒரு சிறிய காரை வாங்கினாள். அடிக்கடி அபியையும், காந்தியையும் தனது காரில் அழைத்துக் கொண்டு பார்க், கடற்கரை, மிருக காட்சிச்சாலை என வலம் வந்தாள். அவளது உலகம் அந்தக் குறுகிய வட்டத்திற்குள்ளே அடங்கியிருந்தது.

**3**

அன்றைய தினம் கிங்ஸ்ரன் ஹை கோர்ட்டில் போதைப் பொருள் கடத்தல் வழக்கில் நீதிபதி தீர்ப்பு வழங்கும் நாள்.

அதற்குக் கட்டாயம் போகவேண்டும் என காந்திமதி வற்புறுத்தியதால் நான் அவளையும் அழைத்துக் கொண்டு கோர்ட்டுக்குப் போயிருந்தேன். கோர்ட்டில் பார்வையாளர் பகுதியில் வரிசையாகப் போடப்பட்டிருந்த சார்மனை பெஞ்சுகளில் நடுப்பகுதியில் நாம் அமர்ந்திருந்தோம்.

காலை பத்து மணியளவில் நீதிபதி தனது பெஞ்சுக்கு வந்தபோது நாமெல்லாம் எழுந்து நின்று பின் அமர்ந்தோம். அவ்வாறு எழுந்து நிற்கையில் முதல் வரிசையில் ஸாரி உடுத்தியிருந்த ஒரு இளம் பெண்ணை எனக்குச் சுட்டிக் காட்டிய காந்திமதி-

"அவள்தான் கொழும்பு விமான நிலையத்தில் நான் ரொயிலெட்டுக்குப் போயிருந்த சமயம் எனது பெட்டியைப் பார்த்துக் கொண்டவள். அவள்தான் அந்த ஹெரோயின் பார்சலை எனது பெட்டியில் வைத்திருக்க வேண்டும்."

வழக்கின் சுருக்கத்தை விவரித்த பின் நீதிபதி கூறினார்-

"ஜூரிமார்களின் ஒருமித்த கருத்துப்படி ஹெரோயினைக் கடத்தி வந்ததுமல்லாமல் லைசென்ஸ் இல்லாத துப்பாக்கியால் ஒரு பொலிஸ் அதிகாரியைச் சுட்ட குற்றத்திற்காக சேகர் என்ற ராஜசேகருக்கு இருபது வருட கடுங்காவல் தண்டனை விதிக்கிறேன்.

அவருக்கு உதவியாக இருந்த கிச்சா என்ற கிருஷ்ணனுக்கும், கதிர் என்ற கதிரமலைக்கும் தலா பத்து வருட சிறைத் தண்டனை விதிக்கிறேன்.

இத் தண்டனை அதிகமானதல்ல. இவர்கள் கடத்த முற்பட்ட ஹெரோயின் என்ற போதைப் பொருள் பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தி ஒரு சமூகத்தையே நாசப்படுத்துமானதால் சில நாடுகளில் இக்குற்றச் செயலுக்கு மரண தண்டனை விதிப்பார்கள். நமது சட்டங்கள் மனிதாபிமான ரீதியில் அமைக்கப்பட்டிருப்பதால்தான் இக்குறைவான தண்டனை

ஜெயாவின் நடத்தையிலும் மாற்றம் காணப்பட்டது. கொஞ்சம் கொஞ்சமாக அவள் என்னோடு திரும்பவும் பேசவும், எனது ஆலோசனைகளைக் கேட்கவும் செய்தாள். நானும் மிகவும் கவனமாக அவளோடு பழகினேன். நான் அவளைக் கல்யாணம் செய்து கொள்வதை உறுதி செய்ய முடியாத நிலையில் அவளின் உள்ளத்து ஆசைகளை வளர்ப்பது சரியானதாகப் படவில்லை.

வழங்கப்படுகிறது"

வழக்கு முடிந்து நாங்கள் வெளியே சென்று கொண்டிருந்த சமயம் ஸாரி அணிந்த அந்தத் தமிழ்ப் பெண் பின்னால் வந்து காந்திமதியின் தோளில் தொட்டாள்.

"இப்ப சந்தோசம்தானே. எனது கணவர் சேகரை ஜெயிலுக்கு அனுப்பி எங்கள் குடும்பத்தையே நாசம் செய்திருக்கிறாய்" என்றாள்.

"எனக்கு உங்களை யாரென்று தெரியாது. உங்கள் கணவரையும் யார் என்று தெரியாது. இந்தக் கோர்ட்டில்தான் முதல் முறையாக உங்கள் கணவரை கண்ணால் பார்த்தேன். அப்படியிருக்க என்மேல் பழி போடுகிறீர்களே" என்றாள் காந்திமதி.

"நீ தானே அவருக்கு எதிராகச் சாட்சி சொன்னாய்?"

"நான் எங்கே அவருக்கு எதிராகச் சாட்சி சொன்னேன், எனது பெட்டியில் எவரோ அந்தப் பார்சலை வைத்திருக்கிறார்கள், அது பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது என்றுதானே சொன்னேன்"

நான் குறுக்கிட்டு-

"அம்மா, நீங்கள் தவறாக விளங்கிக் கொள்ளுறியள். உங்கள் கணவருக்குத் தண்டனை கிடைத்ததற்கு காரணம் அவர் இரவு நேரத்தில் ஒரு வீட்டில் புகுந்து அவர் கடத்தி வந்த போதைப் பொருளை களவாடியது மட்டுமல்லாமல் ஒரு பொலிஸ் அதிகாரியையும் துப்பாக்கியினால் சுட்டதே ஆகும். அவர் செய்த குற்றங்களுக்கான தண்டனையை அவர் பெற்றிருக்கிறார். அதற்குக் காரணம் இந்த அப்பாவிப் பெண்தான் என்று எப்படி நீங்கள் கூற முடியும்?

அதுவுமல்லாமல் இந்த அப்பாவிப் பெண்ணை உங்கள் கடத்தல் தொழிலுக்கு ஒரு கருவியாகப் பாவித்திருக்கிறியளே! இவள் அகப்பட்டிருந்தால் ஜெயிலுக்குப் போகவேண்டி இருந்திருக்கும். அப்படி இவளுக்கு அட்டூழியம் செய்துவிட்டு இப்போது இவளை குறை சொல்லுகிறீர்களே!"

அவள் மேலே ஒன்றும் பேசாமல் அப்பால் போனாள்.

நாங்கள் வீடு திரும்பினோம்.

**4**

அபிராமிக்கு மூன்று வயது முடிந்ததும் அவளை எங்கள் வீட்டுக்கு அருகாமையிலிருந்த ஒரு நர்ஸரி ஸ்கூலில் சேர்த்தோம். ஆரம்பத்தில் பிகு செய்தவள் நாளடைவில் அங்கே ஆசையாகப் போய்க் கொண்டிருந்தாள்.

நான் அல்லது ஜெயா அபியைக் காரில் ஸ்கூலுக்குக் கொண்டுபோய் விட்டு விட்டு வேலைக்குப் போவோம். அது காலை நேரப் பாடசாலையாதலால் மத்தியானத்துடன் வகுப்புகள் முடிந்துவிடும். காந்திமதிதான் மத்தியானம் நடந்து போய் அபியைக் கூட்டிக் கொண்டு வருவாள். மழை அல்லது பனி காலங்களில் ஜெயா தனது காரை எடுத்துக் கொண்டு போய் அபியைக் கூட்டி வருவாள்.

ஜனவரி மாதத்தில் ஒரே பனி மழை கொட்டிக் கொண்டிருந்தது. பனி கொட்டுவது நின்றதும் காந்தி அபியையும் அழைத்துக் கொண்டு போய் வீட்டு முற்றத்தில் "ஸ்நோ-மான்" (பனிக்கட்டி மனிதன்) செய்வார்கள். மென்மையான பனிப்பொதிகளைத் திரட்டி, மனித உருவம் செய்து, உடலுக்கு சேட்டும், தலைக்குத் தொப்பியும், கழுத்தில் ஸ்கார்ஃபும் அணிவித்து விளையாடுவார்கள். அபி அந்த ஸ்நோ மானைச் சுட்டிக்காட்டி 'அது டடி' என்பாள்.

ஜெயாவின் நடத்தையிலும் மாற்றம் காணப்பட்டது. கொஞ்சம் கொஞ்சமாக அவள் என்னோடு திரும்பவும் பேசவும், எனது ஆலோசனைகளைக் கேட்கவும் செய்தாள். நானும் மிகவும் கவனமாக அவளோடு பழகினேன். நான் அவளைக் கல்யாணம் செய்து கொள்வதை உறுதி செய்ய முடியாத நிலையில் அவளின் உள்ளத்து ஆசைகளை வளர்ப்பது சரியானதாகப் படவில்லை.

ஒரு சனிக்கிழமை காலை. பனிமழை சற்று ஓய்ந்திருந்தது. ஜெயா மெதுவாக ஜன்னலருகில் சென்று திரையை விலக்கி, கண்ணாடியைத் துடைத்துவிட்டு வெளியே பார்த்தாள்.

தோட்டம், நடைபாதை, மரங்கள், அண்டைய வீடுகள், வீதிக்கு அப்பால் தெரிந்த ஹொஸ்பிட்டல் கட்டிடங்கள் அனைத்தையும் பனிப்படலம் மூடியிருந்தது.

"நான் இந்த வீட்டில் பதினொரு வருசங்களாகக் குடியிருக்கிறேன். ஆனால், இந்த வருசம் போல் இத்தனை 'ஸ்நோ' விழுந்து பார்த்ததில்லை. இப்போது நடைபாதையை வேறு கிளியர் பண்ண வேணுமே" என அங்கலாய்த்தாள் ஜெயா.

நேற்று மதியம் 'ஸ்நோ ப்புளோயர்' மெஷினோடு வீதியைச் சுத்தப்படுத்த வந்த நகராட்சிப் பணியாள் எங்கள் வீட்டுக்கு முன்னாலிருந்த நடைபாதையில் ஆறங்குல உயரத்திற்குப் படிந்து கிடந்த பனி, அப்படியே கிடந்ததைப் பார்த்து விட்டு படியேறி வந்து வீட்டு அழைப்பு மணியை அடித்தான். கதவைத் திறந்த ஜெயாவிடம் -

"குட் ஆஃவ்டர்நூன் மடம்" என்றவன் "உங்கள் வீட்டு நடைபாதையில் ஸ்நோ அப்படியே கிடக்கிறது. யாராவது சறுக்கி விழும் அபாயம் உள்ளது. பனி மழை பெய்த 48 மணி நேரத்திற்குள் அந்தந்த வீட்டு வாசல்களில் படிந்த ஸ்நோவை அந்தந்த வீடுகளின் சொந்தக்காரர்கள் அகற்ற வேண்டும் என்பது நகராட்சியின் விதி முறை. செய்யத் தவறினால் அபராதம் உண்டு" எனச் சொல்லிவிட்டுப் போனான்.

"நான் ஸ்நோவைக் கிளியர் பண்ணுகிறேன்" என்றேன்.

கனமான கம்பளிக் காலுறைகளை மாட்டினேன். அடுத்து வெடவெடக்கும் குளிரிலிருந்து உடலைக் காப்பாற்ற இடுப்பிலிருந்து கணுக்கால் வரை 'டிராக் சூட்' அதற்கு மேல் தடிமனாய் கம்பளிக் காற்சட்டை. மேற்பகுதி உடலுக்கு வெஸ்ட், அதற்குமேல் கழுத்து வரை நீண்ட ஸ்வெட்டர், அதற்கும் மேல் ஓவர் கோட். இவை தவிர கைகளுக்கு கையுறை, கால்களுக்கு ஸ்நோ பூட்ஸ், காதுகளுக்கு மப்லர், தலைக்கு ஹெல்மெட்.

இத்தனை அணிகளையும் அணிந்து கொண்டாற்தான் வெளிக்கதவைத் திறந்து படியிறங்கி நடைபாதையில் படிந்து கிடக்கும் பனிப்படலத்தை வாரிக் கொட்டி பாதையைச் சுத்தப்படுத்த முடியும்.

இத்தனை அலங்காரங்களோடு நிலமெல்லாம் பரவிக் கிடந்த ஸ்நோவில் பூட்ஸ் புதைந்து புதைந்து வெளிவர நான் மெல்ல மெல்ல அடியெடுத்துச் சென்றபோது காந்திமதியின் குரல் கேட்டது.

"அங்கே பார் ஜெயா; ஆம்ஸ்ரோங் 'மூன்வாக்' போகிறார்."

இருவரும் சிரித்தார்கள்.

காந்திமதி கூறியது போல ஆம்ஸ்ரோங் மாதிரி நடந்து ஷெட்டைத் திறந்து பெரிய இரும்பு அகப்பை போலிருந்த 'ஸ்பேட்டை' எடுத்துக் கொண்டு வந்து நடைபாதையில் கிடந்த பனிக் கட்டிகளை வாரிக் கொட்டியபோது முதுகு வலித்தது; மூச்சு வாங்கியது.

ஒரு வழியாக நடைபாதை முழுவதையும் சுத்தம் செய்துவிட்டு 'ஸ்பேட்ஸ்' ஷெட்டில் வைத்துப் பூட்டிவிட்டு 'அப்பாடா' என்று வீட்டினுள் சென்றபோது சுடச்சுட ஒரு பெரிய மக்கில் காஃபி கிடைத்தது.

(தொடரும்)

திரைப்புதினம்

# வக்கிரம், கொடூரம் இசையில் இளையராஜா படக்காட்சி பார்த்து ரசிகர் மயக்கம்

(தமிழகத்திலிருந்து கே.ஜி.மகாதேவா)

பொங்கல் தினத்தையொட்டி, நான்கு புதிய தமிழ்ப் படங்கள் வெளியாகியிருந்தன. ஒவ்வொரு படமும் பல வாரங்கள் ஓடும் என்று எதிர்பார்த்த நிலையில் இயக்குநர் பாலா தயாரித்து, இசைஞானி இளையராஜா இசை அமைத்த கரகாட்ட கலைஞர்களின் வாழ்க்கையை சித்தரிக்கும் 'தாரை தப்பட்டை' பட்டையைக் கிளப்பும் என்று ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்தனர். கங்கை அமரனின் 'கரகாட்டக்காரன்' பட வசூலையும் தோற்கடிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அந்த அளவுக்கு வானொலியிலும் தொலைக்காட்சியிலும் ஏகப்பட்ட விளம்பரம்.

படம் வெளிவந்தது. முதலில், விழுந்தடிக்கொண்டு ஓடியவர்கள் தொடரில் தடைக்கற்கள் காணப்பட்டதுபோலும். படத்தை பார்த்த பலர் மயங்கியதும், வீட்டில் தூக்கத்தை தொலைத்ததும் ஒருபுறம் என்றால் பாலாவுக்கும், இசைஞானிக்கும் என்ன ஏற்பட்டது என்பது புரியாத புதிராக இருந்தது. சேது, பிதாமகன் என்று பாராட்டு பெற்ற பாலாவின் 'தாரை தப்பட்டை'யைப் பார்த்தவர்கள் புலம்பத் தொடங்கியிருக்கின்றனர். படம் பார்க்காதீங்க என்று அடுத்தவர்களையும் பயமுறுத்துகின்றனர். அந்த அளவுக்கு என்ன நடந்தது? பேய்க்கதைகளே தமிழ்நாட்டில் 'ஓகோ' என்று ஓடும்போது 'தாரை தப்பட்டை'க்கு ஏன் தடை? 'ஏ' சான்றிதழ் பெற்ற இப்படத்தை வயதானவர்கள்கூட திரையில் பார்க்க அஞ்சுகிறார்கள். ஏன்?

## சினிமா பாடலுக்கு ஏன் இந்த சோதனை? இளையராஜா பார்வையில் வக்கிரமா!

தலைப்பைப் படித்ததும், பீப் பாடல்தான் இளையராஜாவைக் குழப்பியது என்றால்... வக்கிரம் கிக்கிரம் என்று கொடூரமாக 'டோஸ்' கொடுக்கிறீர்கள் என்று நீங்கள் புலம்புவது நன்றாகவே கேட்கிறது. ஆனால், இதுதான் உண்மை. ஏனோ தெரியவில்லை. இசைவரிகளால் - வார்த்தை - இசைஅமைப்பினால் இன்று குழம்பிப் போயிருக்கிறார்கள் ரசிகர்கள். நாட்டுப்புறப்பாடல் தேசவிரோத செயல் - சிறை என்றால், மனித உணர்வுகளைத் தூண்டிவிடும் பாடல்களுக்கு லட்சக்கணக்கில் 'வட்ஸ்அப்' ரசிகர்கள் வரவேற்பு. அதுவும் சில மணி நேரம் போதுமானது. முன்னர் எல்லாம் சினிமா பாடலை ரசித்தார்கள். இன்று அந்தப் பாடலின் வார்த்தைகளுக்கு பாலுணர்வு கருத்து உள்ளதா என்று பூதக்கண்ணாடி கொண்டு ஆராய்கிறார்கள். மன்மதலீலையை வென்றார் உண்டோ? என்று தியாகராஜர் அன்று பாடியது... ரசனை கரைபுரண்டது. 'றெக்கோட்'டை திரும்பத் திரும்ப போட்டு தலையாட்டி ரசனையில் புரண்டார்கள். இன்று? இணையதளத்தில் 'கேம்ஸ்' விளையாடும் சிறுவன்... "அந்தப் பாடலைக் கேட்டுவிட்டு, "ஏனப்பா... மன்மதலீலை என்றால் என்ன?" என்று கேட்கின்றான். சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்த "ஏரியிலே ஒரு காஷ்மீர் ரோஜா..." எனும் பாடல் முழுக்க முழுக்க பாலியல் உணர்வு கருத்துக்களை மறைமுகமாகக் கொண்டது. ஆனால், பிரச்னைகள் வெளிவரவில்லை. பாடியவர் கே.ஜே.ஜேசுதாஸ் ஆச்சே! பிரபல சினிமா இசைக் கலைஞர் வாலி தனது ஒரு பாடலில்... "சமஞ்சது எப்படி..." என்று எழுதியிருக்கிறார். கடந்த வருட இறுதியில் நாட்டுப்புற தெருப்பாடகர் கோவன்... "சாராயத்தில் தள்ளாடுது தமிழகம்... ஊத்திக்கொடுத்த உத்தமிபோயர்ஸில்..." என்று சமூக அக்கறையுடன் பாடினார்.

பாலாவின்
தாரை தப்பட்டை



கம்பி எண்ணினார்! ரசனையும் அர்த்தங்களும் முன்புபோல் அல்ல, 'றெடிமேட்' உணர்வுகள்!

சிம்பு, அனிருத் கதைதான் உங்களுக்கு விலாவாரியாகத் தெரியுமே!. பெண்களை இழிவுபடுத்தும் ஒரு பாடலை சிம்பு பாட பெண்கள் மத்தியில் கொந்தளிப்பு ஏற்பட்டு, அனைத்து இந்திய மாதர் சங்கம் கொடுத்த புகார் மீது கோயம்புத்தூர் பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டனர். பிற மாவட்ட பொலிஸ் நிலையங்களிலும் புகார்கள் பதிவு செய்யப்பட்டன. 'வை திஸ் கொலைவெறி' புகழ் இசை அமைப்பாளரும் சிம்புவும் தலைமறைவாகினர். கைது செய்ய பொலிஸ் புறப்பட்டாலும் இருவரும் கைதாகவில்லை. இந்த நிலையில்தான் அனிருத் 'புரட்சி' செய்தார். அதாவது, யாருக்கும் தெரியாமல் கோயம்புத்தூர் பீளமேடு விமான நிலையத்தில் நள்ளிரவு நேரம் தனது தந்தை ரவிச்சந்தருடன் வந்து இறங்கி, ரேஸ்கோர்சுக்கு வழக்கறிஞருடன் சென்று, அனிருத் தங்கிய இடத்துக்கே பொலிஸ் இன்ஸ்பெக்டர் செல்வராஜை அழைத்து நள்ளிரவு 12.45 மணிக்கு, "இந்த வழக்கு சம்பந்தமாக விசாரணைக்கு அழைக்கும்போது கண்டிப்பாக ஆஜராவேன்" என்று சத்தியம் செய்து இரண்டு பக்கத்துக்கு அனிருத் மனு எழுதிக் கொடுத்துவிட்டு, கோயம்புத்தூர் தாஜ் ஹோட்டலில் தந்தையுடன் தங்கியிருந்தபோது, ரேஸ்கோர்ஸ் பொலிஸ் நிலையத்தில்தான் மனு கையளித்தார். அடுத்த நாள் இண்டிகோ விமானத்தில் தந்தையுடன் சென்னை பறந்துவிட்டார். இந்த ஏற்பாடுகள் மிகவும் ரகசியமாகவே நடத்தப்பட்டதாம்!. எங்கும் ஆஜராக அனிருத் தயார். பாவம் சிம்பு!

சிம்புதான் பழிவாங்கப்பட்டார், இதன் பின்னணியில் இளம் முன்னணி நடிகர் இருந்தார் என்றால், அனிருத்? 'பால்' மணம் மாறாத இவர்தான் 'லிப் டு லிப்' பேமஸ் ஆச்சே! நடிகையும் பின்னணிப் பாடகியுமான அண்ட்ரியா மீது மோகம் கொண்டு 'லிப் டு லிப்' முத்தம் கொடுத்த




களியாட்டப்பிரியர்தான் அனிருத். ஹொலிவுட் ஜாலி பார்ட்டி இவர்! இவரது 'ஓடி ஒளிந்து விளையாட்டு'க்கு பலம் ஒன்று சாதி. மற்றையது ஊடக ஒத்துழைப்பு. 'பாத்றூம்' பீப் பாடல் எப்படியோ நண்பர்களால் லீக் ஆகி, சிம்புவை வீக் ஆக்க, அனிருத் மட்டுமே கனடா, லண்டன் (?) என்று ஜாலியாக சுற்றிவந்தாராம். நண்பனைக் காட்டிக் கொடுக்காத சிம்பு மட்டும் பொறியில் அகப்பட்ட 'மவுஸ்' ஆனார். சிம்புவுக்குத்தானே அந்த நடிகரினால் குறிவைக்கப்பட்டது! சரி வாங்க இளையராஜா பக்கம் போவோம்.

## இளையராஜாவுக்கு இது தேவையா? 'இசைராஜா'வுக்கு நடந்தது என்ன?

ஒரு நிகழ்ச்சியில் சில வாரங்களுக்கு முன்னர் இளையராஜா கலந்துகொண்டபோது, செய்தியாளர் ஒருவர், சிம்புவின் பீப் பாடல்பற்றி எதேச்சையாக கேள்வி கேட்க, "உனக்கு அறிவு இருக்கா?" என்று ராஜா சுட்டெரிக்க செய்தியாளர்கள் குழம்பிப்போனார்கள். இசைபக்தியுடன் பொறுமை காக்க வேண்டிய இளையராஜா கோபம் கொண்டதும் 'வட்ஸ்அப்பில்' பயங்கர அர்ச்சனைகள்! யாருக்கு? ராஜாவுக்குத்தான்! இப்படி கேள்வி கேட்டிருக்கக் கூடாது என்றார் கங்கை அமரன். என்ன தப்பு என்று எழுந்த செய்தியாளர்கள் பக்கம் 'வட்ஸ்அப்' வாசகர்கள் மட்டும்தான். முக்கிய தினசரியொன்று வாசகர்களுக்கு இருகரம் நீட்டியது. அத்துடன் இந்த விவகாரம் அடங்கிவிட்டது. ஒரு சின்ன இடைவெளிக்குப் பின்னர் ரசிகர்கள், வாசகர்களுடன் ஊடகங்களும் கொடி தூக்கியிருக்கின்றன பாலாவின் 'தாரை தப்பட்டை' இசையமைப்பாளர் இளையராஜாவுக்கு எதிராக. ராஜாவுக்கு ஒரு மைல்கல்லாகும் ஆயிரமாவது படமும் ஆகும். பொங்கல் வெளியீடான 'தாரை தப்பட்டை' பல கோணங்களில் பட்டையை கிளப்பிவிட்டிருக்கிறது.

ரசிகர்கள் தங்கள் கருத்தை பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாயிலாக தெரிவித்திருப்பது ஒருபுறம் இருக்க, வேட்டியை மடித்து, மீசையை முறுக்கி ஊடகங்கள் ரத்தவாந்தி எடுத்திருப்பதுதான் பயங்கரம். அதுவும் முக்கிய முதல்தர தமிழ்த் தினசரி, "பாலா, இளையராஜா அட்டூழியம்! 'தாரை தப்பட்டை' பார்க்காதீங்க" என்று ஏழு காலம் செய்தி வெளியிட்டு வயிற்றை கலக்கியதுதான். இத்தினசரி விமர்சனத்தின் சில பகுதிகளைத் தருகிறேன். படித்துப்பாருங்கள்.

"இளையராஜா இசை அமைக்கும் ஆயிரமாவது படமான 'தாரை தப்பட்டை' கரகாட்ட கலைஞர்களின் வாழ்க்கை என்பதால் ரசிகர்கள் பெரிதும் கவரப்பட்டார்கள். சென்னையிலுள்ள ஒரு மல்டிபிளக்ஸ் தியேட்டரில் இப்படம் பார்த்த ரசிகர் ஒருவர், மயங்கிவிழுந்த நிலையில் படம் பார்த்த பலரின் மனநிலை பாதிக்கப்பட்டு, சாப்பிட முடியாமல் தவித்திருக்கிறார்கள். கிளைமாக்ஸில் அவ்வளவு கொடூரம்! கர்ப்பிணியான கதாநாயகி வரலட்சுமிக்கு மயக்க மருந்து கொடுத்து பிணவறையில் கிடத்துகிறார் வில்லன். அங்கே பிணவறை ஊழியர் ஒருவர் கத்தியுடன் பிரசவம் பார்க்க வருகின்றார். மீதியை, படத்தைப் பார்க்காமல் ரசிகர்கள் பதறுகிறார்கள். ரத்தம் என்றால் பாலாவுக்குச் சொல்லவேண்டாம். சேது, பிதாமகன், நான் கடவுள், அவன் இவன் என்று அவரது படங்களில் வன்முறை, கொடூரத் தன்மை அதிகமாக இருக்கும். ரத்தம் நம் முகத்தில் தெறிக்கும் உணர்வு, குரல்வளையை கடித்து கொல்வது, நிர்வாணமாக பிணத்தை தொங்கவிடும் காட்சிகள்... ரத்தம் பீறிட பீறிட வில்லனை கதாநாயகன் அடித்து துவைப்பது... அதற்கேற்ப இசைப்பயம்...! கதாநாயகியின் படு ஆபாச நடனத்துடன் சரக்கடிப்பது. காயத்ரி ரகுராமும் ஒரு சாவு வீட்டில் படு ஆபாசமாக கரகாட்டம். இதற்கேற்ப இசை அமைப்பு. சகோதர உறவுள்ள அண்ணன் தங்கையின் இரட்டை அர்த்த ஆபாச டயலாக்! மது அருந்தும் காட்சிகள் தண்ணீராக ஓடுகிறது. கஞ்சா புகைப்பது எப்படி என்று இளைஞர்களுக்கு பாடம் போதிக்கிறது பாலா படம். ஒரு கரகாட்ட படத்தில் இவ்வளவு ரத்தக்காட்டேரி, வக்கிர வசனங்கள், செக்ஸ் அர்த்தங்கள் வன்முறைகள் ஏன்? ரசிகர்கள் பல காட்சிகளில் படத்தைப் பார்க்க முடியாமல் (வயதானவர்கள்) கண்களை மூடிக்கொள்கிறார்கள்.... பாலா இதனை ரசிக்கிறாரா? பாலாவுக்கு ஏன் இவ்வளவு கொடூர சிந்தனை? பாலா இப்படி என்றால் இளையராஜாவும் இங்கு 'மிஸ்' ஆகின்றார்.

தொடர்ச்சி அடுத்த பக்கம்..

## இளையராஜாவின் ரீமிக்ஸ்: கன்றாவி! கொடூர காட்சிகளில் வக்கிர இசை!

"எனது இசையில் ஒரு அளவுக்கு மேல் ஒலியை எழுப்பமாட்டேன்" என்பவர் ராஜா. ஆனால், "தாரை தப்பட்டை"யில் இவரது இசைக்குப் பயந்து நடுங்காத ரசிகர்களே இல்லை. 'தங்கப்பதுமை' படத்தில் இடம்பெற்ற "மனிதன் ஆரம்பமாவது" பாடலை இளையராஜா 'ரீமிக்ஸ்' செய்திருக்கிறார். இதைக்கேட்டிருந்தால் அந்தப் பாடலை எழுதிய பட்டுக்கோட்டையார் பொங்கி எழுந்திருப்பார். இப்பாடலைப் பாடிய சி.எஸ்.ஜெயராமன் கண்ணீர் விட்டு கதறி இருப்பார். தனது பாடலை இப்படி யாராவது 'ரீமிக்ஸ்' செய்தால் இளையராஜா பொறுமையாக இருப்பாரா? இப்படியொரு 'கிளைமாக்ஸ்' காட்சிக்கு இசை அமைக்க ராஜா எப்படி சம்மதித்தார்? மனித உணர்வுகளை வேறு பக்கம் தூண்டிவிடும் கொடூரமான, வக்கிரமான இசை அது!.

"படத்தில் ஒரு கரகாட்டப் பாடலுக்கு திரும்ப சொல்வதற்கே கூசுமளவுக்கு ஆபாச வார்த்தைகள். இரட்டை அர்த்த வார்த்தைகள் புகுந்து விளையாடுகின்றன. ஏகப்பட்ட 'பீப்' சத்தங்கள்! சிம்புவின் 'பீப்' பாடலை மிஞ்சும் அந்தப் பாடலுக்கு ராஜா எப்படி இசை அமைத்தாரோ!.


"ஒரு கலைநிகழ்ச்சியில் இளையராஜா மேடையில் பேசும்போது: "பாடல் இசை என்பது உடலையும் உள்ளத்தையும் உயர்ந்த நிலைக்கு எடுத்துச்செல்வதாக இருக்க வேண்டும்" என்று கூறி தனது "மரி... மரி நின்னே..." எனும் பாடலைக் குறிப்பிட்டார். எவ்வளவு பெரியவர் இளையராஜா! எவ்வளவு பெரிய கலைஞன் பாலா! இப்படியாக இருவரும் சேர்ந்து எடுத்த 'தாரை தப்பட்டை'யை குடும்பத்தோடு பார்க்க முடியுமா? பயந்து, நூலாக மாட்டானா?" என்று அந்த தினசரியின் விமர்சனம் கேட்கிறது. இது இருவருக்கும் அவசியம்தானா? அதுவும் தனது ஆயிரமாவது படத்தில் இளையராஜா .... திக்... திக்..!

பொதுவாக படவிமர்சனம், அப்படி இப்படி அமைவதுண்டு. புள்ளிகளும் கூட்டியும், குறைத்தும் வாசகர்கள் விமர்சனக் குழுவிடமிருந்து வாங்கிக் கொள்வது உண்டு. ஆனால், "படம் அட்டூழியம், வக்கிரம், ஆபாசம், இப்படத்தை யாரும் பார்க்காதீங்க... நெஞ்சு பதறும்!" என்று தலைப்பிட்டு தினசரியில் கண்டன விமர்சனம் இதுவரை வந்ததில்லை! பாலா சார் அவசியம் பதிலளிக்க வேண்டும்!

## இந்து, கிறித்துவ முறையில் அசின் திருமணம்

'சிவகாசி', 'வரலாறு', 'போக்கிரி', போன்ற படங்களில் நாயகியாக நடித்த நடிகை அசின் (30) தொழில் அதிபரான மைக்ரோமேக்ஸ் நிறுவனர் ராகுல் சர்மா (40) திருமணம் கடந்த மாதம் நடந்தது. கடந்த சில ஆண்டுகளாக காதலித்து வந்தனர். காலையில் கிறித்துவ முறைப்படியும், மாலையில் இந்து முறைப்படியும் திருமண நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதனை அடுத்து மும்பையில் கடந்த 23ம் திகதி மும்பையில் திருமண வரவேற்பு நிகழ்ச்சிகள் நடந்தன.





## 'திருமணம் இல்லை; மச்சான்களே போதும்!!'

'நான் திருமணமே செய்து கொள்ளப் போவதில்லை! ஒவ்வொரு நாளும் டுவிட்டர் மூலம் மச்சான்களுடன் கலந்துரையாடுகிறேன். நிறையப் பேர் என்னைக் காதலிப்பதாகக் கூறுகிறார்கள். அவர்களின் காதலே போதும்! கல்யாணம் எனக்குத் தேவை இல்லை. வாழ்நாள் முழுவதும் நடிகையாகவே இருந்துவிட்டுப் போகிறேன்" என்று தெரிவித்துள்ளார் நடிகை நமீதா.

ஒரு சிறிய இடைவெளிக்குப் பிறகு மீண்டும் நடிக்க ஆரம்பித்துள்ளார். 'பொட்டு' படத்தில் அகோரியாக நடிக்கிறார். இதில் பரத், இனியா, மனிஷா நடிக்கின்றனர்.

96 கிலோ எடையில் மிகக் குண்டாக இருந்த நமீதா இப்போது தன் நிறையை மிகக் கஷ்டப்பட்டு 73 கிலோவாகக் குறைத்துள்ளார். இன்னும் 8 கிலோ குறைக்கப் போவதாக கூறுகிறார்.

'பொட்டு' படத்தில் நமீதா சுருட்டு பிடிப்பதுபோல் காட்சிகள் வருகின்றன.

அதுதான் நமீதாவுக்கு இப்போதைய கஷ்டம்.

## 'தெறி'யில் விஜய் மகள் அவரது மகளாக நடிக்கிறார்!



நடிகர் விஜய்யின் 59வது படமான அட்லீ இயக்கத்தில் உருவாகி வரும் 'தெறி' படத்தில், விஜய்யின் மகள் திவ்யா, முக்கிய பாத்திரத்தில் அவருக்கு மகளாகவே நடித்திருக்கிறார்.

இப்படத்தில் விஜய்க்கு மனைவி சமந்தா. தோழி எமி ஜாக்ஸன். இயக்குனர் மகேந்திரன் நடிக்கிறார். கலைப்புலி தாணு தயாரிக்கும் இப்படத்தில் ஜி.வி.பிரகாஷ் இசையமைக்கிறார்.

சிறுவயது விஜய் மகளாக நடிகை மீனா மகள் நைனிகாவும், சற்றே வயது கூடியதும் அதே மகள் கதாபாத்திரத்துக்கு விஜய் மகள் திவ்யாவும் நடித்திருக்கின்றனர்.

விஜய் மகன் சஞ்சய் சில காலத்தின்முன் ஒரு படத்தில், தகப்பனாருடன் ஆடல் காட்சியில் வருகிறார். லண்டனில் வாழ்ந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சங்கீதாவைக் காதலித்து விஜய் மணமுடித்தது தெரிந்ததே.



## தனுஷ், அதர்வாவுக்கு ஜோடியாக பூஜா ஜவேரி!

பிரபு சொலமன் இயக்கத்தில் தனுஷ் நடித்துள்ள படம் ரயில், இறுதிக் கட்டப் பணிகள் நடந்து வரும் இந்தப் படத்தில் கன்டீன் டீ Boyக்கும், ஒரு பெண்ணுக்கும் ஒரு காதல் கதையில் உருவாகி இருக்கிறது. படம் முழுக்க ரயிலுக்குள் நடக்கும் இந்தக் கதையில் ரயில் பயணிகளுக்கு ஏற்படும் பிரச்சினைகளும், தனுஷின் ஹீரோயிசத்தை வெளிப்படுத்தும் 'கிளைமாக்ஸ்' இடம் பெற்றுள்ளது.

நாயகியாக நடிகை கீர்த்தி சுரேஷ் நடிக்கிறார். இவருடன் இன்னொரு நடிகை பூஜா ஜவேரி நடிக்கிறார். 'ருக்குமணி வண்டி வருது' படத்தில் அதர்வாவுக்கு ஜோடியாக இவர் நடித்து வருகிறார்.

## சொந்தக் குரலில் பேசும் தமன்னா!



இன்றைய தமிழ் சினிமாவின் கனவுக் கன்னிகளாக திகழ்பவர்கள் நயன்தாரா, சமந்தா, திரிஷா. இவர்கள் நடித்த படங்களில் சொந்தக் குரலில் பேசாமலே 'டப்பிங்'கில் வேறு ஒருத்தர் பேசி வந்தனர். ஆனால், காலப்போக்கில் சொந்தக் குரலில் பேசி நடித்தார்கள். தற்போது நடிகை தமன்னாவும். இதில் இணைந்துள்ளார். இவர் தற்போது விஜய் சேதுபதியுடன் நடித்து வரும் 'தர்மதுரை' படத்தில் கிராமத்து பெண்ணாக சேலை அணிந்து நடிக்கிறார். இப்படத்துக்காக தமன்னா சொந்தக் குரலில் பேசுகிறார்.

## 'லேடி சூப்பர் ஸ்டார்' நயன் தனிப்பெரும் நாயகி!



சினிமாவில் பன்னிரண்டு ஆண்டுகளைக் கடந்து கதாநாயகியாகத் தொடரும் நயன்தாராவை 'லேடி சூப்பர் ஸ்டார்' என்று அழைக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

தமிழ் சினிமாவில் நாயகி ஒருவர் இப்படி அழைக்கப்படுவது முதல் தடவை.

கதாநாயகர்களை வசூல் கடவுளர்களாகப் பார்க்குமபோது, நயன் நடிப்பில் வெளியான 'மாயா', 'தனி ஒருவன்', 'நானும் ரவுடிதான்' ஆகிய மூன்று படங்கள் ஐம்பது நாட்களைக் கடந்து ஓடி வெற்றி அடைந்திருக்கின்றன. முன்னணிக் கதாநாயகர்களின் படங்கள் இரண்டு வாரங்களே தாக்குப்பிடிக்கும் நிலையில் நயன்தாராவின் இந்த வெற்றி குறிப்பிடத்தக்கது.





# டயபட்டிஸ்: 2016 புதிய பார்வை

## ஹோமியோபதி டாக்டர் ஆர்.தியாகராஜன் பேசுகிறார்

**2016** ஆம் ஆண்டு யாருமே அறிந்திராத புதிய வருடம்.

புதிய வாழ்க்கை.

புதிய பயணம்.

புத்துணர்ச்சியுடன் தொடங்குவோம்.

கடந்த இருபது, முப்பது வருடங்களாக பழைய சிந்தனைகள் - பழைய வாழ்க்கை - பழம் கதைகளையே பேசிக்கொண்டிருக்கிறோம்.

ஊறிப்போன சிந்தனைகளால், நாம் பெற்றது என்ன? பயமும், பதட்டமும், பல்வேறு வகையான நோய்த் தாக்கங்களுமே நாம் அடைந்த பயன்.

கடந்த வருடத்தின் இறுதி மாதங்களை எண்ணிப் பார்க்கிறேன்.

ஏராளமானோர் பயத்தோடும், குழப்பத்தோடும், கடும் உளைச்சலுக்கும், உடல் உபாதைகளுக்கும் உள்ளாகி, மிகுந்த நெருக்கடிகளுடன் தொடர்பு கொண்டார்கள். அப்படி ஒரு தொலைபேசி அழைப்பு. செப்ரெம்பர் மாதத்தில் ஒருநாள் வந்தது.

பத்து வருடங்களுக்கு முன்னர் லண்டனில் சிகிச்சை பெற்ற அந்தக் குரல் மீண்டும் பேசியது.

அவருக்கு 45 வயது. கடந்த ஆறு மாத காலமாக நெஞ்சு எரிவு (*GASTRIC*), வயிற்றில் நோவு, உணவு செமிபடாமல் இருப்பது, நித்திரையில்லை, மன உளைச்சல், இதனால் உண்டான கடுமையான உடல் மெலிவு போன்ற பிரச்சினைகளைச் சொல்லிக் கொண்டிருந்தார். சமீபகாலமாக வேலைக்குப் போகமுடியவில்லை என்றும் வேதனைப்பட்டார். கடும் சோர்வு இருப்பதை அவர் உரையாடலின்போது உணர்ந்தேன். கடந்த காலத்தில் பலவித சிகிச்சைகள் பெற்றும் எவ்வித பயனும் கிடைக்கவில்லை, என்று விரக்தியுடன் கூறினார்.

அவருக்குப் பல மருத்துவப் பரிசோதனைகள் செய்யப்பட்டது. பெரும்பாலும் முடிவுகள் பிரச்சினைகள் ஒன்றுமில்லை என்று தெரிவிக்கப்பட்டதாம். ஆனால், அவரால் அந்த முடிவுகளை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. உடல் வருத்தம், மன உளைச்சல் உபாதைகளால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் அவர், அதனை நம்பத் தயாராக இல்லை.

நித்திரையின்றி மிகுந்த சிரமப்பட்டுக் கொண்டிருந்தார். அவர் மனதில் இருந்த கருத்தைக் கொட்டித் தீர்த்தார்.

இந்தப் பிரச்சினைகளுக்கு ஹோமியோபதி வைத்தியத்தில் நல்ல தீர்வு இருப்பதாகக் கூறி, சிகிச்சை தொடங்குங்கள்; விரைவில் எல்லாம் சரியாகிவிடும் என்று ஆறுதல் சொன்னேன்.

இரண்டு மாத எனது சிகிச்சைக்குப் பிறகு அவருடைய உடல் வருத்தங்களில் உள்ள தீவிரம் குறையத் தொடங்கியுள்ளதாகச் சொன்னார். நவம்பர் மாதம் மத்தியில் லண்டனில் அவர் சொன்ன நேரத்தில் நேரில் வந்து சந்தித்தார். அவரது தோற்றத்தைக் கவனித்தேன். மாறுபட்டு இருந்தது. கண்களில் கருவளையம் ஏற்பட்டு, உடல் மெலிந்து மிகுந்த சோர்வுடன் காணப்பட்டார்.


சிலகாலத்தின்முன், தனது வாழ்க்கையில் நடந்த சம்பவம் ஒன்றைச் சொன்னார். அவருடன் கடையில் ஒன்றாக வேலை செய்த நண்பர் ஒருவரின் மனைவி செமிபாடு பிரச்சினையால் உடல் மெலிந்து, கடந்த ஜூலை மாதத்தில் மரணமடைந்துவிட்டார். கடைசிக்கட்ட சிகிச்சைகளின்போதுதான் அவருக்கு கான்சர் (*CANCER*) என்பது கண்டுபிடிக்கப்பட்டது. பலன் இன்றி அவர் வாழ்வு முடிந்துவிட்டது.



நண்பரின் மனைவியின் நோயும், மரணமும் இவருக்குத் தாக்கத்தை ஏற்படுத்தியது. தனக்கும் இதே போன்ற அறிகுறிகள் இருப்பதாக நினைத்தார். இந்தப் பிரச்சினைகள் தனக்கும் ஏற்பட்டு விடப்போகிறதே என்று பயந்திருக்கிறார். இந்தக் கவலை அவரை வாட்டத் தொடங்கியிருக்கிறது. கவலை குழப்பமாக, குழப்பம் நித்திரையைக் கெடுத்து, நித்திரைக் குறைபாடு உடல் சோர்வாக மாறி, உடல் சோர்வு செமிபாடுப் பிரச்சினையை ஏற்படுத்தி, உணவு சரிவர உட்கொள்ளாமல் எடை குறைந்து, கடும் நோயாளிபோலக் காணப்பட்டார்.

மேற்குறிப்பிட்ட அனைத்துப் பிரச்சினைகளும் தொடர் சுழற்சியாக, அவரை நோய் எனும் பெருங்கடலில் மூழ்க வைத்துக் கொண்டிருக்கிறது.

இவரைப் போன்ற பலர் தமக்குக் கிடைத்த சொற்ப தகவல்களால் தாக்கப்பட்டு, அவற்றை தமது கற்பனா சக்திகளால் மேலும் பூதாகரமாக்கி, தேவையற்ற அழுத்தத்தாலும், உடல் நோய்களாலும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தற்காலத்தில் பிரதானமாக எல்லாராலும் பேசப்படும் டயபட்டிஸ் (*DIABETES*), அழுத்தம் (*HYPER TENSION*), கொலஸ்ரோல் (*CHOLESTEROL*), நெஞ்சுஎரிவு (*GASTRIC*) போன்ற பல பிரச்சினைகள் குணப்படுத்தவே முடியாது, வாழ்நாள் முழுவதும் கஷ்டப்படவேண்டும், மருந்து குடித்துக்கொண்டே இருக்க வேண்டும் என்ற தவறான நம்பிக்கை நமது மனதில் ஆழமாக விதைக்கப்பட்டுள்ளது. இதனை முழுவதும் நம்பி, வாழ்க்கையை இழந்து கொண்டிருக்கிறோம். இதனை மனதில் பதித்து கொண்டு வாழ்க்கையை நகர்த்த வேண்டும்.




நீண்ட ஆராய்ச்சிக்குப் பிறகு இந்தப் பெரிய 2016ம் ஆண்டினைப் புதிய சிந்தனையுடன் 'டயபட்டிஸ்' நோய்க்கு எதிரான போர் (*WAR AGAINST DIABETES*) பிரகடனத்துடன் இந்த வருடத்தைக் கொண்டு செலுத்துவோம்.

'டயபட்டிஸ்' என்பது நாமாகவே வரவழைத்துக் கொண்ட ஒரு பிரச்சினை. நம்முடைய வாழ்வியல் மாற்றங்கள், உணவு பழக்க வழக்கங்கள், உலகச் சுற்றுப்புற சூழல் மாசுபட்டது, ரசாயனங்களின் (*CHEMICALS*) அதிகப்படியான உபயோகம் போன்ற பலவகைக் காரணங்களால் நாம் கடும் நோய்த் தாக்குதலுக்குள்ளாகி உள்ளோம்.

சரியான புரிதலும், நேர்த்தியான வாழ்க்கை முறையும், ஹோமியோபதி வைத்திய சிகிச்சை முறையில் 'டயபட்டிஸ்' நோயிலிருந்து முற்றிலுமாக மீண்டு வரக்கூடிய சூழலை எமக்கு அமைத்துக் கொடுக்கும்.

'டயபட்டிஸ்' நோய் தாக்கத்தைவிட அவை சம்பந்தப்பட்ட தவறான தகவல்களே பெரியளவில் பாதிப்புக்குள்ளாக்குகின்றன.

சரியான முறையில் நாம் இதனைப் புரிந்துகொண்டு, தொடர்ச்சியான சிகிச்சையும் கவனமும் செலுத்தும்போது 'டயபட்டிஸ்' நோயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும்.

கடந்த பத்து வருடங்களாக மனிதகுலத்துக்கு நோயால் உண்டாகும் தாக்கத்தைவிட, மருந்துகளால் ஏற்படும் கெடுதல்களே பெரும் சவாலாக உள்ளன. பலனே இல்லாத பலவிதமான வீரியமிக்க மருந்துகளையே உபயோகித்துக் கொண்டு இருக்கிறோம். தேவைப்பட்ட மருந்துகளைக் குறைவான அளவில், சரியான முறையில் பயன்படுத்துவதன் மூலம், மருந்துகளால் உண்டாகும் பக்க விளைவுகளைப் பெரும் அளவில் குறைக்க முடியும்.

'டயபட்டிஸ்' என்பது உயிர்கொல்லி நோய் அல்ல. உடனடியாக பாரிய பிரச்சினைகளை உண்டாக்காது.

ஏராளமான 'டயபட்டிஸ்' நோயாளிகள் நீண்டகாலமாக பெரிய பிரச்சினைகள் இன்றி, நம்மோடு நலமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவசரப்படாமல், பயப்படாமல், நிதானமாக, சரியான கவனத்தில், ஹோமியோபதி சிகிச்சையுடன் 'டயபட்டிஸ்' நோயை அணுகுவதன் மூலம் மிக மகிழ்ச்சியான, இனிமையான வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ளலாம்.

தொடக்கத்தில் குறிப்பிட்ட நோயாளி, ஹோமியோபதி சிகிச்சை மூலம் உடல் தேறிவருகிறார்; உள்ளமும் தெளிவு பெற்று வருகிறார். புதிய வேலைக்குப் போகவும் தயாராகிவிட்டார்.

புதிய சிந்தனைகளுடன், 'டயபட்டிஸ்' போன்ற வாழ்வியல் நோய்களை ஹோமியோபதி சிகிச்சையின் துணைகொண்டு, முறியடித்து மிகச் சிறந்த வாழ்க்கையை அமைத்துக் கொண்டு, 2016 ஆம் வருடத்தை அணைத்துக் கொள்வோம்.

**இலவச ஆலோசனைகளுக்கு: 020 81441553**

# ஆஸ்துமா



## ஹோமியோபதி மருத்துவம்
## +
## உங்கள் ஒத்துழைப்பு
# 100% தீர்வு

ஆஸ்துமா நோயாளிகள் ஏற்கனவே உட்கொள்ளும் ஆங்கில மருந்துகளுடன் ஹோமியோபதி மருந்துகளையும் உட்கொண்டால் கண்பாதிப்பு, தோல் மற்றும் பிறப்பு உறுப்பு அரிப்பு, நரம்புகள் பாதிப்பு, ஆண்மை குறைபாடு, கிட்னி பாதிப்பு போன்றவைகளை தவிர்க்கலாம்.



**உயர்தர மருத்துவம் ▪ பாதுகாப்பான மருந்துகள் ▪ விரைவான சேவை**

### சிறப்பு சிகிச்சைகள்

- **உயர் இரத்த அழுத்தம்** (B.P/HyperTension)
- **கொலஸ்ட்ரால்** (Cholesterol)
- **சிறுநீரக கோளாறுகள்** (Kidney Diseases)
- **மூட்டு வலி** (Arthritis)
- **தோல் வியாதிகள்** (Skin Diseases)
- **ஹார்மோன் பிரச்சனைகள்** (Hormone Disorders)
- **மாதவிடாய் கோளாறுகள்** (Menses Disorders)
- **செக்ஸ் பிரச்சனைகள்** (Sex Disorders)
- **குழந்தையின்மை** (Infertility)
- **டயாபட்டிஸ்** (Diabetes)



**இலவச மருத்துவ ஆலோசனைக்கு**
**0208 144 1553**

## HOMOEO CARE

30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்

போன்: **0208 144 1553**

வெப்சைட்: **www.homoeocare.com**

இமெயில்: **homoeocare@rediffmail.com**

ஸ்ரீ:

பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம்

THE FEDERATION OF SAIVA (HINDU) TEMPLES U.K

2-4 Bedford Road, Walthamstow, London E17 4PX

Contact: 0208 527 3819 | 07956 919 511

# 17வது 17th SAIVA CONFERENCE

# நடராஜ தத்துவமும் திருமந்திரமும்

பிரித்தானிய சைவத்திருக்கோயில் ஒன்றியம்
இவ்வருடம் 2016 ஏப்ரல் 30ம் மே 01ம் திகதிகளில் நடத்தவிருக்கும்
மாபெரும் சைவ மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகிறோம்.



*Chief Guests*

Hon. **Sri Sivagnana Balaya Swamigal**



Kavignar A **Arivoli**





Prof. **Nellai Kannan**

*Guest Speakers*

Dr. **Kandiah Shriganeshan**

*Staff and Educational Development Association (SEDA),*




*Devotional Songs Singer*

Kalaimamani P **Unnikrishnan**

**Saturday 30th April 2016**
**@ 9.00am to 8.00pm**
**Highgatehill Murugan Temple,**
200A Archway Rd,
London N6 5BA.

**Sunday 1st May 2016**
**@9.00am to 8.00pm**
**London Sivan Kovil Trust,**
4A Clarendon Rise,
London SE13 5ES


SUBARA
BUSINESS CENTRE
SUBARA
Smart In Management
- LIFE INSURANCE
- INCOME PROTECTION
- ACCIDENT PROTECTION
- CRITICAL ILLNESS COVER
- HOME INSURANCE
- LANDLORD'S COVER
- BLOCK MANAGEMENT
- BUILDING MAINTENANCE
- SECURITY SYSTEMS
- UTILITY SERVICES
GET OUR EKARD
4 Weald Lane
Harrow
Middlesex
HA3 5ES
0844 887 1664
020 3119 1111
www.subara.co.uk
info@subara.co.uk



## பணமழை பொழிகின்றது...

அங்கே பில்லியன் கணக்கில் ஊதித்தள்ளுகிறார்கள். இங்கேயோ பில்லியன் கணக்கில் பணத்தை வாரி இறைக்கின்றார்கள்.

அது எங்கே நடக்கின்றது என்று ஆச்சரியப்படுகின்றீர்களா?

ஸ்பெயின் நாட்டில்தான்! நத்தார் கொண்டாட்ட காலம் வந்துவிட்டால் ஸ்பெயின் நாட்டின் El Gordoஎன்ற பெயரில் அறியப்படும் கொழுத்த சீட்டிழுப்பு ஆரம்பித்து விடும் . பெருநாளுக்கு நல்ல கொழுத்த ஆட்டை வெட்டி விருந்து படைப்பது போல இங்கும் கொழுத்த பணத்தொகையை இந்தச் சீட்டிழுப்பு மூலம் வருடாவருடம் மக்களுக்குச் சென்றடையச் செய்து வருகின்றார்கள். இந்த ஸ்பானிய சொல்லின் பொருளே (El Gordo) கொழுத்த ஒன்று என்பதுதான்.

2015ம் ஆண்டிற்குரிய நத்தார் காலச் சீட்டிழுப்பில் 2.24 பில்லியன் யூரோ தொகை மக்களுக்குச் சென்றடைந்துள்ளது.

ஒருவர் 200 யூரோ பெறுமதியான சீட்டுக்களை வாங்கினால் மாத்திரமே இதில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றன. எனவே குடும்பப் பகிர்தலையே வெளிப்படுத்தும் நத்தார் பெருநாள் காலத்தில் குடும்ப அங்கத்தவர்கள் தலைக்கு 20 யூரோ என்று இந்த 200 யூரோ தொகையை பங்குபோட்டு சீட்டுக்களை வாங்கி விடுகின்றார்கள். இதனால் இந்த இராட்சத சீட்டிழுப்பில் பங்குபற்றுபவர்கள் தொகையும் வெல்பவர்கள் தொகையும் அதிகரித்து விடுகின்றன.

1812இல் ஆரம்பித்த இந்தச் சீட்டிழுப்புஇன்றுவரை ஆண்டுதோறும் தவறாது இடம்பெற்று வருகின்றது. 1936 தொடக்கம் 39வரை இடம்பெற்ற சிவில் யுத்த காலத்திலும் இந்தச் சீட்டிழுப்பு நிறுத்தப்படவில்லை.




### ஐநாவில் முழங்கிய வைகுந்தவாசன் துணைவியார் மறைவு

ஐக்கிய நாடுகள் சபையில், உலகத் தலைவர்கள் சூழ்ந்திருக்க, முதல் தடவையாக தமிழில் முழங்கி, உலகத்தையே அதிரவைத்த அமரர், பாரிஸ்டர், ஈழத் தமிழன் கிருஷ்ணா வைகுந்தவாசனின் ஆருயிர் துணைவியார் திருமதி மகேஸ்வரி வைகுந்தவாசன் தமது 93 வயதில் காலமாகிவிட்டார். அன்னாரது பூதவுடல் 04-02-2016 வியாழக்கிழமை லண்டன், MORDEN மயானத்தில் தகனம் செய்யப்படவுள்ளது. அவர்களது ஒரே மகன் காண்டீபனிடம் விவரங்களை அறியலாம்.

020 8542 9787/ 0785 285108




எ.ஜே.ஞானேந்திரன்

# முடியின் ஆயுள் மூன்று நிமிடங்கள்...

அறிவிப்பாளர், குவியலாக நின்ற குவலயத்து ஆரணங்குகளின் பேரழகால் மனம் குழம்பி விட்டாரோ தெரியவில்லை. பிரபஞ்சப் பேரழகியின் பெயரை அறிவிப்பதில் அவர் விட்ட தவறு காரணமாக , இரண்டாம் இடத்தைப் பெற்ற அழகி, முதலாம் இடத்திற்கு உயர்த்தப்பட்ட வேடிக்கை செய்தியாளர்களை நன்றாகவே குஷிப்படுத்தியுள்ளது.

என்னதான் நடந்தது?

ஆண்டுக்கு ஆண்டு உலக அழகிகளைத் தெரிவு செய்யும் நோக்கோடு இரு அமைப்புகள் *Miss World*, *Miss Universe* என்று உலக மகா அழகிகளைத் தெரிவு செய்து வருகின்றன. இதில் பிரபஞ்ச அழகி எனப்படுபவர்தான் ஆங்கிலத்தில் *Miss Universe* என்று அழைக்கப்படுகின்றார்.

வழக்கம்போல் 2015ம் ஆண்டுக்குரிய அழகிக்கான 64வது தேர்வு கடந்த டிசம்பர் 20ந் திகதி இடம்பெற்றது. இடம்பெற்ற நகரம் அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ். 80 உலக நாட்டு அழகிகள் இந்தப் போட்டியில் பங்குபற்றியிருந்தார்கள். இந்த அமைப்பு சில புதியவர்கள் கைகளின் நிர்வாகத்திற்கு இந்தத் தடவை மாறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

அனுபவக்குறைவுதான் காரணமோ தெரியவில்லை. நீதிபதிகள் பிலிப்பைன்ஸ் நாட்டு அழகி *Pia Wurtzbach*என்பவரை பிரபஞ்ச அழகியாகத் தேர்வு செய்திருந்தார்கள். ஆனால், அறிவிக்கப்பட்டதோ இரண்டாம் இடத்தைப் பிடித்த கொலம்பிய நாட்டு *Ariadna Gutierrez Arevalo* என்ற அழகியின் பெயரைத்தான்.! இவரை 2015இன் பிரபஞ்ச அழகியாக முடிசூட்டிக் கௌரவித்து மூன்று நிமிடங்களின் பின்னர் தவறுதலுக்கு மன்னிப்புக் கோரி, பிலிப்பைன்ஸ் நாட்டு அழகியை நடப்பு வருட பிரபஞ்ச அழகியென அறிவித்திருந்தார்கள்.

தர்மசங்கடமான நிலை. உலக அழகியெனக் குதூகலித்துபெருமையோடு பார்வையாளர்களைப் பார்த்து கையசைத்துக் கொண்டிருந்த கொலம்பிய அழகி தலை மீதிருந்த முடியைக் கழற்றி இன்னொரு பெண்ணின் தலையில் சூட்டி நீதான் அழகி நானல்ல என்று ஏற்றுக் கொள்வது சுலபமான ஒன்றல்லவே!

கொலம்பிய அழகியின் முடிக்கு ஆயுள் மூன்று நிமிடங்கள்தான்! சூடிய முடி அகற்றப்பட்டு, பிலிப்பைன்ஸ் நாட்டு அழகிக்கு அந்த முடி சூட்டப்பட்டது. வழமையாக முடிசூட்டிய பின்னர் அழகி மேடையில் ஒய்யாரமாக நடைபயில்வதுண்டு. இந்தத் தடவை அப்படி எதுவுமின்றி பட்டென நிகழ்வுகள் முடிவுக்கு வந்தன.




தன்னை அவமானப்படுத்தி விட்டதாக நிஜ அழகி நினைத்திருக்கலாம்.

இது முழுக்க முழுக்க என் பிழை. இந்த மோசமான தவறுக்கு நானே முழுப் பொறுப்பேற்கிறேன். ஆனால், அற்புதமான இரவு! வெற்றியாளர்கள் பெயர்கள் எழுதிய அட்டைகள் இதோ என்று பார்வையாளர்களுக்கு அட்டைகளைக் காண்பித்து மன்னிப்பைப் பலதடவை கோரியிருக்கின்றார் அறிவிப்பாளர்.

மன்னிப்புக் கோருகின்றேன் நான் இன்னொருவருக்குச் சொந்தமான பட்டத்தைப் பறிக்க முயலவில்லை. எந்தத் தவறுதலான நோக்கோடும் இது நிகழவில்லை. என்று தன் பங்கிற்குப் பேசியுள்ளார் கொலம்பிய அழகி.

இப்படியான தவறு இதுதான் முதற்தடவை நிகழ்கின்றது என்றும் சொல்வதற்கில்லை. 2010ம் ஆண்டும் தொலைக்காட்சி ஒலிபரப்பில் அழகிகள் தேர்வில் பிழையான அறிவிப்பு இடம்பெற்றது.

19 வயதுக்கும் 27வயதுக்கும் உட்பட்ட அழகிகளே இப் போட்டியில் பங்குபற்ற அனுமதிக்கப்படுகின்றார்கள். நாலு பேர் கொண்ட நீதிபதிகள் குழு வெற்றியாளர்களைத் தீர்மானிக்கின்றது.


சிறீலங்கா, சுவிட்சர்லாந்து உட்பட 12 நாட்டு அழகிகள் இந்தப் போட்டியில் பங்குபற்றுவதாக இருந்து இறுதியில் விலகிக் கொண்டுவிட்டார்கள்.

அழகான குழப்பந்தான்.. என்றாலும் 3 நிமிடங்களுக்கு நானும் பிரபஞ்ச அழகியாக வீற்றிருந்தேன் என்று கொலம்பிய அழகி பெருமையடித்துக் கொள்ளலாம். இந்தப் போட்டிகளைப் பொறுப்பெடுத்துள்ள புது நிர்வாகத்தினருக்கும் வேண்டப்படாத ஒரு சறுக்கல்!

அங்கே உங்கள் வயது 19க்கும் 27க்கும் இடைப்பட்டதாக இருந்தால்தான் அழகுப் போட்டியில் பங்கேற்ற முடியும் இங்கே அவுஸ்திரேலிய மாவட்டமான தஸ்மேனியாவில் இனிவரும் காலங்களில் குறைந்த பட்சம் 21 வயதைத் தொட்டிருந்தால்தான் சட்டரீதியாக கடைகளில் சிகரெட் வாங்க முடியும். அப்படியொரு சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர அரச நிர்வாகம் ஆலோசனை நடாத்திக் கொண்டிருக்கின்றது.

இன்றைய நிலையில் 18 வயதானவர் கடைகளில் சிகரெட் வாங்கவோ, புகைக்கவோ அவுஸ்திரேலியாவில் சட்டரீதியாக அனுமதிக்கப்பட்டு வருகின்றார்.

உலகநாடுகளில் புகைத்தலுக்கு எதிராக கடும் சட்டங்களை வகுத்துள்ள நாடுகளில் அவுஸ்திரேலியா முக்கிய நாடொன்றாகத் திகழ்ந்து வருகின்றது. சிகரெட் பக்கட்டுகளில் சுகாதாரத்திற்கு கெடுதியான தகவல்களை படமாக அச்சிட்டு, தனிப்பட்ட ஒரு நிறத்தில் விற்பனைக்கு விடவேண்டும் என்ற சட்டத்தை 2012இல் அரசு அறிமுகப்படுத்தியது. உலக நாடுகளில் மிக அதிக விலைக்கு சிகரெட் பக்கட்டுகளை விற்கும் நாடுகளில் அவுஸ்திரேலியா ஒன்றாகத் திகழ்கின்றது.



## புகைத்தலைப் பகைத்தல்...

குவெத் நாடு உட்பட பல உலக நாடுகள் 21 வயதுக்கு உட்பட்டவர்கள் சிகரெட் புகைப்பதை அனுமதிப்பதில்லை. 2016இலிருந்து ஹவாயும் இத் தடையை அமுலுக்குக் கொண்டு வருகின்றது.

தஸ்மேனியாவில் ஐவரில் ஒருவர் சிகரெட் புகைக்கும் பழக்கமுள்ளவர் என்று புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. பெரும்பான்மையானவர்கள் 25 வயதாகும் முன்பே புகைக்கத் தொடங்கி விடுகின்றார்களாம். 2025அளவில் அவுஸ்திரேலியாவின் மிகச் சுகாதாரமான மாவட்டம் என்ற நிலையை எட்ட தாம் வகுத்துள்ள ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு பகுதியே இந்தச் சிகரெட் புகைக்கும் வயதெல்லை என்கிறது அரச நிர்வாகம்.

வருடாவருடம் சுமாராக 6மில்லியன் ஜனத்தொகையினர் சிகரெட் புகைப்பதால் மரணமாகி வருகின்றார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் 600000க்கு மேற்பட்டவர்கள் புகைப்பவர்களுக்கு அண்மையில் இருந்த காரணத்தால் மரணித்தவர்கள். புகைக்கும் பழக்கமுடைய உலகின் ஒரு பில்லியன் தொகையினரில் 80வீதமானவர்கள் குறைந்த அல்லது நடுத்தர வருமானம் பெறும் நாட்டுப் பிரஜைகள் என்பது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். உலக ஜனத்தொகையில் 12 வீதமானவர்கள் அதாவது 29 உலக நாடுகள் மாத்திரம் புகைத்தல் சம்பந்தமான அனைத்து விளம்பரங்களையும் தடை செய்துள்ளது.

பொதுவாக புகைக்கும் பழக்கம் உள்ளவர்களில் பாதித் தொகையினர் கொல்லப்படுகின்றர்கள் என்று சொல்லப்படுகின்றது. 2014இல் எடுக்கப்பட்ட ஒரு கணிப்பின்படி ஒரு பில்லியனுக்கு அதிகமானவர்கள் அதாவது 20 வீதமான உலக ஜனத்தொகையினர் சிகரெட் புகைக்கும் பழக்கத்திற்கு அடிமையாகி இருக்கின்றார்கள்.....



# என்ன உலகமடா? Doctor ஸ்ரீதரன்



## கோவில்

இலங்கையில் பிறந்து வளர்ந்து - இன்று ஐம்பது வயதை எட்டி விட்ட மிக பெரிய மனிதர் தணிகாசலம் - இலங்கையை விட்டு வெளியேறி இன்று இலண்டனில் நிரந்தரமாகவே வசிப்பதற்கு வந்திருப்பதன் முக்கிய காரணம் அவருடைய நீண்ட கால நண்பன் அதி பெரிய மனிதர் விருத்தாசலம்.

சென்ற ஆண்டுதான் இலண்டனுக்கு குடிபெயர்ந்த விருத்தாசலமும் தணிகாசலமும் இலங்கையில் சேர்ந்து செய்யாத வியாபாரமில்லை - போடாத வேடமில்லை - ஆடாத நாடகமில்லை.

தன் அழைப்பை ஏற்று கடந்த வாரம்தான் இலண்டனுக்கு வந்த தணிகாசலத்திற்கு தனிப்பட்ட விருந்தளித்து கௌரவித்த பின் விருத்தாசலம் கூறுகிறார்:

நாம் எந்தத் தொழிலைச் செய்வதற்கும் இலங்கை நிலவரங்கள் இப்பொழுது சாதகமாக இல்லை. கடந்த ஒரு வருடமாக நான் இலண்டனை நன்றாக படித்து - இங்குள்ள மக்களுடன் பழகி - தீர ஆலோசித்து - ஒரு அருமையான - இலகுவாக செல்வம் கொட்டும் - இதுவரை நாம் செய்திராத தொழில் ஒன்றைக் கண்டு பிடித்துள்ளேன்.

தணிகாசலத்தின் வாய் ஏற்கனவே பிளந்து விட்டது. தொடர்கிறார் விருத்தாசலம்.

இன்று இலண்டனிலேயே அதி லாபகரமான ஒரே ஒரு தொழில் ஒரு கோவில் அமைப்பதே! அதற்கேற்ற எல்லாத் தகுதிகளும்- அதாவது பணம் - நரை முடி - காடைத்தனம் - காடையர்கள் சிநேகிதம் - திருட்டுப் புத்தி - வேஷம் போடும் திறமை - பெண்கள் துணை - தக்க தருணத்தில் காலை வாரும் கெட்டித்தனம் - இவை எல்லாமே தாராளமாகவே இருக்கின்றன நம் இருவருக்கும்.

ஆனால், நம்மிடம் இல்லாதது ஒன்றே ஒன்றுதான் - அதுதான் கடவுள் பயம். அதை வைத்துத்தான் தொழிலே ஆரம்பிக்கப்போகிறோம். நமக்கு அது இருக்கலாமோ?

கேட்க நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால், இலண்டன் மக்கள் இதற்கு ஏமாறுவார்களா? தணிகாசலம் அங்கலாய்க்கிறார்.

என்ன காணும் கண்டறியாத இலண்டன்? இந்த நாய்கள் இருக்கும் இடம்தான் மாறியிருக்கிறதே தவிர அதுகள் சிந்திக்கும் முறை அப்போதும் - இப்போதும் - எப்போதும் ஒன்றுதான்.

நன்றாக கேளும்! இதுகளுக்கு வாழ்க்கையில் முட்டாள்தனமான ஆசைகள் இருக்கும் வரை - அந்த ஆசைகளை தெய்வம் நிறைவேற்றும் என்ற நம்பிக்கை இருக்கும் வரை - அதற்கு பரிகாரமாக தெய்வத்திற்கு நாம் ஏதாவது கைமாறு செய்ய வேண்டும் என்ற பண்டமாற்றுப் புத்தி இருக்கும் வரை- நாம் என்ன அநியாயம் செய்து சம்பாதித்தாலும் அதில் ஒரு பகுதியை தெய்வத்திற்கு. கொடுத்து அவரை சமாதானம் செய்யலாம் என்ற லஞ்ச எண்ணம் இருக்கும் வரை கோவில்கள் எம்மை வாழ வைக்கும்!

அரோகரா!

## புள்ளிவிபரம்

கடந்த பத்து வருடங்களாக தன் மகள் அகிலாவுடன் இலண்டனில் வசிக்கும் ஆறுமுகத்துக்கு இப்பொழுது வயது எழுபது. கடந்த சில மாதங்களாக அவருக்கு ஒரு வகை இருமல். ஆரம்பத்தில் இருமும் பொழுது சளி மட்டுமே வந்தது. ஒரு நாள் இருமும் பொழுது சளியுடன் சேர்ந்து இரத்தமும் வந்தது. பதறிப்போன அகிலா அதி சிறந்த மருத்துவ நிபுணரை அணுகினாள். நீண்ட பரிசோதனையின் பின் மருத்துவ நிபுணர் அகிலாவிடம் கூறினார்:

நீங்கள் பெரிதாக பயப்பட வேண்டியதில்லை. இப்பொழுது ஒரு புதிய மருந்து அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் உதவியுடன் உங்கள் தகப்பனார் இன்னும் எத்தனையோ வருடங்களுக்கு உயிர் வாழ முடியும். ஆனால், மருந்தினால் ஏற்படும் ஒரு சில பக்க விளைவுகளை அவர் அனுபவிக்க வேண்டும்.

சிறிது விளக்கமாக கூறுமாறு கேட்கிறாள் அகிலா. டாக்டர் கூறுகிறார்:



அவருடைய உருவத்தில் சில மாற்றங்கள் ஏற்படும். அவருடைய கண்பார்வை முற்றாக பாதிக்கப்படலாம் - கேட்கும் சக்தி மெதுவாக குறைய ஆரம்பிக்கும் - ஞாபக சக்தி சிறிது சிறிதாக குறைந்து உங்களையெல்லாம் அடையாளம் காண முடியாது போகலாம் - அவரால் எழுந்து நடமாட முடியாது - உடலின் ஜீரண சக்தி குறையும் - உணவுக்குப் பதிலாக அவர் சத்து மிகுந்த மாத்திரைகளை உண்ண வேண்டும் - சிறுநீரகம் தன் சக்தியை இழக்க ஆரம்பிக்கும் - ஆனால், நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. உங்கள் தகப்பனார் இன்னும் எத்தனையோ வருடங்களுக்கு உயிர் வாழ்வார்.

அகிலாவுக்கு பரம திருப்தி

அகிலாவின் வீட்டின் மாடியறையில் இப்பொழுது ஆறுமுகம் என்னும் ஒரு உயிரினம் வாழ்கிறது. காற்று உள்ளே சென்று வெளியே வருவது மட்டுமே அது ஒரு உயிரினம் என்பதற்கு அத்தாட்சி.

இலண்டனிலுள்ள பாடசாலை ஒன்றில் பொருளாதாரம் பயிலும் மாணவர்களுக்கு ஆசிரியர் கூறுகிறார்:


உலக வங்கியின் புள்ளிவிபரப்படி - மருத்துவ வசதியின்மை காரணமாக வறிய வளர்முக நாடுகளில் மக்கள் நீண்ட காலம் உயிர் வாழ்வதில்லை. அதேசமயம் - மேலை நாடுகளில் - மருத்துவ விஞ்ஞானத்தின் உதவியுடன் மக்களை நீண்ட காலம் உயிர் வாழவைக்க முடிகிறது.

வாழ்க உலக வங்கி! வளர்க மருத்துவ விஞ்ஞானம்! வளர்க பாடசாலைகள்!

## மாற்று மருந்து

அந்த பிரபலமான இருதய வைத்தியசாலையில் கடந்த பத்து வருடங்களாக உதவி தாதியாக வேலை பார்த்து வந்த எனக்கு நேற்று ஒரு விசித்திரமான அனுபவம். அதை தொடர்ந்து ஆயிரம் சந்தேகங்கள்.

சென்ற வாரம் அனுமதிக்கப்பட்ட அந்த இருதய நோயாளியின் நிலைமை நேற்று இரவு பன்னிரண்டு மணியளவில் யாருமே எதிர்பாராதபடி திடீரென மோசமாகி விட்டது. எந்த நிலையிலும் உயிர் பிரியலாம் என்ற நிலையில் வைத்தியசாலையில் கடமையிலிருந்த அத்தனை டாக்டர்களும் அவரின் கட்டிலைச் சுற்றி கூடி விட்டார்கள். தலைமை டாக்டருக்கு அவசர அழைப்பு விடுக்கப்பட்டது.




வீட்டிலிருந்த தலைமை டாக்டர் உடனடியாக ஒரு குறிப்பிட்ட மருந்தை கொடுக்குமாறு உத்தரவிட்ட பின் ஆஸ்பத்திரிக்கு விரைகிறார். அவர் அங்கு வந்ததும் அவர் குறிப்பிட்ட அந்த மருந்து கைவசம் இல்லை என்றும் அதற்குப் பதிலாக வேறொரு மருந்து இருக்கிறது. என்றும் கூறுகிறார் மருந்துகளுக்குப் பொறுப்பாக இருக்கும் குமாஸ்தா.

தலைமை டாக்டர் தனது அறைக்குச் சென்று புத்தகங்களைப் புரட்டுகிறார் - இதற்குப் பதிலாக அதை கொடுக்கலாமா என்று அறிவதற்காக. பதினைந்து நிமிட கடின ஆராய்ச்சிக்குப் பின் மருந்து கொடுக்கப்படுகிறது. நோயாளி சிறிது சிறிதாக வழமைக்கு திரும்பி ஒரு மணித்தியாலத்தில் ஆபத்தான நிலையை தாண்டிவிட்டார்.

அடுத்த நாள் காலை வேலை முடிந்து வீட்டிற்கு வந்ததும் குளித்து விட்டு சில மளிகைச் சாமான்கள் வாங்குவதற்காக கடைக்குச் சென்றேன். கடையில் ஒருவர் கையில் ஒரு பேப்பர் துண்டுடன் தீவிரமாக பூஜை சாமான்கள் வாங்கிக்கொண்டிருக்கிறார். இடையில் அவருக்கு ஒரு சந்தேகம். கடைக்காரர் தீர்க்கப் பார்க்கிறார்.

இதில் பாக்கு சீவல் என்று எழுதியிருக்கிறது. எம்மிடம் இப்பொழுது பாக்கு சீவல் இல்லை. அதற்குப்பதிலாக முழுப்பாக்கு வைக்கலாம் - பரவாயில்லை என்கிறார் கடைக்காரர். வந்தவருக்கு திருப்தியில்லை. உடனடியாக குருக்களுக்கு டெலிபோன் பண்ணுகிறார்.

இருபது நிமிடங்களுக்குப் பிறகு குருக்கள் திரும்ப டெலிபோன் பண்ணுகிறார்:

பரவாயில்லை முழுப் பாக்கே போதும்.

புவியீர்ப்பின் காரணத்தால் மேலே எறிந்த கல் கீழே விழுகிறது என்று கூறுகிறது பௌதிகம். பனிக்கட்டி நீராகி - நீர் ஆவியாகி - ஆவி மீண்டும் நீராகி - நீர் பனிக்கட்டியாகிறது என்று கூறுகிறது இரசாயனம்.

பாக்கு சீவலுக்கு பதிலாக முழுப்பாக்கு வைக்கலாம் என்று வேதம் சொல்லுமோ?

பாக்கு சீவல் என்ன செய்கிறது? முழுப்பாக்கு என்ன செய்கிறது?

முழுப்பாக்கு வைக்கா விட்டால் பூஜை பலன் குறையுமோ? ஒரு சீனன் எதை வைத்து பூஜை செய்வான்?

எனக்கு இப்படியான சந்தேகங்கள் வரலாமோ?

அபச்சாரம்! அபச்சாரம்!

# தமிழ் பிரதேச கல்வி நிலவரம்

## லண்டனில் நடந்த பயனுள்ள கருத்தரங்கு





சச்சி



நித்தி



பாலா

போர் முடிவடைந்த பின்னர் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பிரதேசங்களின் மக்களின் வாழ்வு நிலை குறித்து பல்வேறு செய்திகள் வெளிவந்திருந்தன. குடியிருப்பு, சுகாதாரம், உளவியல், போக்குவரத்து போன்ற பல அம்சங்கள் குறித்த பல்வேறு செய்திகள் வெளிவந்த போதிலும் கல்வியினால் ஏற்பட்டுள்ள பாதிப்பு ஒட்டுமொத்த சமுதாயத்தையும் மிகவும் கவலைக்குள் தள்ளியது. குடியிருப்பு, சுகாதாரம், போக்குவரத்து என்பவற்றை சில குறிப்பிட்ட கால எல்லைக்குள் கணிசமான தரத்திற்கு உயர்த்த முடியும். ஆனால், கல்வி என்பது அவ்வாறு இல்லை. மிகவும் திட்டமிட்ட விதத்தில் செயற்பட வேண்டும். இடிந்துபோன பாடசாலைகளை சீரமைத்தல், பாடசாலை உபகரணங்கள், தரமான நூல்கள், ஆசிரியர்களின் தரம், பயிற்சி, ஈடுபாடு போன்றன குறித்து கவனம் செலுத்துதல் எனப் பல அம்சங்களில் தயாராக வேண்டும். பெற்றோர் பங்களிப்பு போன்றன நம்பிக்கை அளிப்பதாக இருக்கவில்லை. அத்துடன் இவ் இளைஞர்கள் வாழும் புறச்சூழல் குறித்தும் அச்சமூட்டும் செய்திகள் வெளியாகின. மதுபானக் கடைகளின் அதிகரிப்பு, போதை வஸ்து பாவனை, சட்டவிரோத பாலியல் உறவுகள் போன்ற செய்திகள் எதிர்கால சமூக மாற்றம் தொடர்பான விவாதங்களுக்கு களமாக அமைந்தன.

மேற்குறிப்பிட்ட பிரச்சினைகள் அரச மட்டத்தின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படுவது அவசியம் என்ற போதிலும் மக்களுடன் கீழ் மட்டத்தில் தொடர்புள்ள நிறுவனங்களைப் பலப்படுத்துவதன் மூலம் அரச கவனத்தைத் திருப்ப அதிகளவு வாய்ப்பு ஏற்படும் என்ற அபிப்பிராயங்கள் நிலவின. இப் பின்னணியில் மாகாணசபை கல்வி வளர்ச்சியில் தனது பங்களிப்பை உரிய முறையில் செலுத்துவதற்கு தேவையான உதவிகள் என்ன? என்ற கேள்வி சமூக அக்கறையுள்ள செயற்பாட்டாளர்கள் மத்தியில் எழுந்தது.

இதன் விளைவாக, யாழ். இராமநாதன் கல்லூரியின் வளர்ச்சி குறித்து உதவிப் பணிகளை மேற்கொண்டிருந்த லண்டன் சமூக செயற்பாட்டாளர் நடராஜா சச்சிதானந்தம் பிரித்தானியாவிற்கு தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டிருந்த யாழ். பல்கலைக் கழகத்தின் முன்னாள் உப வேந்தரான பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை அவர்களை நாடி, அவரது அனுபவ உரைக்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

இதற்கான மண்டப வசதிகளை இலண்டனில் உள்ள லண்டன் உயர்வாசற்குன்று முருகன் ஆலயம் வழங்கியிருந்தது. கடந்த ஜனவரி 3ம் திகதி இடம்பெற்ற இக் கூட்டத்திற்கு யாழ். பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் மு.நித்தியானந்தன் தலைமை வகித்தார்.

இந் நிகழ்வின்போது பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் தற்போது இலங்கையில் சுமார் ஒன்றரை லட்சத்திற்கு மேற்பட்ட பாடசாலைகள் நாடு முழுவதிலும் இருப்பதாகவும், தமிழ் மொழிக் கல்வி பல பாடசாலைகளில் போதிக்கப்படுவதால் முன்னரை விட தமிழ் மாணவர் தொகை அதிகம் எனவும் குறிப்பிட்ட அவர் அந்த அளவிற்கு அரசின் அல்லது தீர்மானம் இயற்றும், உயர் கல்வி மட்டங்களில் தமிழரின் தொகை குறைந்து வருவதை அடையாளம் காட்டினார். இதற்கான காரணங்களில் ஒன்றாக விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் போன்ற பாடங்களில் மாணவர்களின் ஆர்வம் குன்றி வருவதாக குறிப்பிட்டார். இதற்கான பிரதான காரணியாக பல்கலைக்கழக பிரவேசம் உள்ளதாக தெரிவித்தார். மாணவர்கள் பல்கலைக்கழக பிரவேசத்திற்கான இலகுவான வழிகளை நோக்கிச் செல்கிறார்கள். கலைப் பாடங்களை கற்பதன் மூலம் உயர் சித்திகளை பெறவும், பல்கலைக்கழக அனுமதியும் அதிகளவு சிரமமின்றி



பாலசுந்தரம்பிள்ளை உரை நிகழ்த்துகிறார்

பெறலாம் என்ற காரணங்களால் மாணவர்கள் கலைத்துறையை அதிகளவில் தெரிவு செய்வதாக குறிப்பிட்டார்.

கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களில் மாணவர்கள் குறிப்பிடத்தக்க சித்தியைப் பெறாதபோது அவர்கள் உயர் கல்வியைத் தொடர முடியாத நிலை ஏற்படுவதாகவும், இதனால் பலர் பாடசாலைகளிலிருந்து விலகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவதாகவும் குறிப்பிட்டார். இவ்வாறான பரிதாபமான நிலைக்கு பல்வேறு காரணிகள் இருப்பினும் பாடசாலைகளின் தரம் என்பது பெற்றோரையும், மாணவர்களையும் ஒரு சில குறிப்பிட்ட பாடசாலைகளை நோக்கி கவர்வதாலும், ஆசிரியர்கள் கஷ்டமான பிரதேசங்களில் தமது சேவைகளை உளப்பூர்வமாக வழங்க பின்னடிப்பதாலும் சகல பிரதேசங்களும் கல்வியில் கணிசமான தரத்தை எட்ட முடியாமல் உள்ளதாக குறிப்பிட்டார். விஞ்ஞானத்துறை சம்பந்தமான கல்வியில் மாணவர்களின் பங்களிப்பு குறையும்போது, எதிர் காலத்தில் அத் துறைகளில் தமிழர்களின் தொகை குறைய வாய்ப்பு உண்டு என தனது அச்சத்தை வெளியிட்டார்.

ஏற்கெனவே சாதி மற்றும் பொருளாதார ஒடுக்குமுறைகளால் தமது கல்வியை இழந்திருந்த மக்கள் தற்போது அவற்றிலிருந்து வெளியேறி கல்வியில் பெரும் முன்னேற்றத்தை நோக்கிச் செல்வது குறித்து தமது திருப்தியை வெளியிட்ட அவர், புலம்பெயர் சமூகம் தனது முதலீடுகளை அல்லது உதவிகளை வடக்கில் மட்டுமல்ல கிழக்கிலும் மேற்கொள்ள வேண்டுமெனக் கோரினார். கிழக்கு மாகாணம் போரினாலும், இயற்கை அனர்த்தங்களினாலும் அதிகளவு பாதிக்கப்பட்டுள்ளதோடு வட மாகாணத்தில் உள்ளது போன்று பிரசித்தி பெற்ற பாடசாலைகள் என்பது மிகவும் சொற்பம் என்பதால் பாடசாலை வசதிகளைச் செய்வது அவசியமானது என்றார்.

கருத்தரங்கில் கலந்துகொண்ட பலர் வட கிழக்கு மாகாண சபைகளின் கல்வி சார்ந்த செயற்பாடுகளில் தமது பங்கினை வழங்க விருப்பம் தெரிவித்தனர். ■

# நிறைவான வாய்ப்பாட்டு அரங்கேற்றம்



இரவீந்திரன்-கௌரி தம்பதியினரின் செல்வப் புதல்வியும், காலஞ்சென்ற வவுனியா மகாவித்தியாலய முன்னாள் அதிபர் வேலுப்பிள்ளை சிவஞானம் தனலட்சுமி-கனகராயன்குளம் காலஞ்சென்ற இராசையா தம்பதியினரின் பேத்தியுமான செல்வி றுக்ஷினாவின் கர்நாடக வாய்ப்பாட்டு அரங்கேற்றம் இலண்டன் விம்பிள்டன் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பிரபல சங்கீத ஆசிரியையான மனோரமாவின் மாணவி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பக்க வாத்தியக் கலைஞர்கள் றுக்ஷினாவின் வாய்ப்பாட்டுக்கு உயிரூட்டினார்கள். மிருதங்கம்: எம். பாலச்சந்தர், வயலின் : கே.ரி.சிவகணேஷ், தபேலா : சஞ்யுசாஹுய்.

மண்டபம் நிறைந்த ரசிகர்களை மகிழ்வித்த நிறைவான அரங்கேற்றமாக இனிதே நிறைவு பெற்றது.

- உதயன்

வவுனியூர் இரா.உதயணன்

# தொலைந்து போகிற சொந்தங்கள்

அருந்தவன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு ஒரு வார காலமாகிறது. திடீரென ஏற்பட்ட மாரடைப்பு அவரது வாழ்க்கைப் போராட்டத்தை மேலும் மாற்றியிருந்தது. அகதியாய் புலம்பெயர்ந்து இலண்டனுக்கு வந்த அவருக்கு, இதுநாள்வரை தொலைத்தவற்றை நினைத்து நினைத்து வருந்தாமல் இருந்திருந்தால், இப்படியொரு நிலைமை வந்திருக்க சாத்தியமேயில்லை.

அருந்தவனின் தங்கை வினோதினி தானும் குடும்பத்துடன் இலண்டன் வரக்கேட்டபோது, அவர் எழுதிய கடிதம் தலையணைக்கு அடியில் அமைதியாய் உறங்கிக் கொண்டிருந்தது.

அருந்தவன் அதை எடுத்துப் பிரித்து மீண்டும் வாசித்துப் பார்த்தார்.

அன்பான தங்கச்சி,

நீ இங்குவர விரும்புவதை நான் தடுக்கவோ, அல்லது போலிக்காரணம் காட்டியோ இந்தக் கடிதத்தை எழுதவில்லை. உன் அருமை அண்ணன் என்ற பாசத்துடன், நடைமுறை வாழ்க்கையை, இந்த புலம்பெயர்ந்த மண்ணின் நிஜ வாழ்க்கையை உனக்கு எழுதுகிறேன். உன் நிலையில் இருந்து பார்க்கும்போது, இக்கரை உன் கரையை விட பச்சையாகத் தெரியும். ஆனால், அது நிஜமில்லை.

இங்கு வந்து நான் வாழ்க்கையைத் தொலைத்துவிட்டேனோ என எண்ணத் தோன்றுகிறது. ஆசைகள் அதிகமாகும் போதுதான் ஆபத்துகளும் அதிகமாகின்றன.

எமது அப்பா, அம்மாவின் அரவணைப்பில் அன்பு சொரிய வாழ்ந்த அந்த நாட்களை நான் நினைத்துப் பார்த்தேன். அன்பு என்பதன் அர்த்தத்தை இங்கு புரிந்துகொள்வது இளந் தலைமுறையினருக்கு கடினமாக இருக்கிறது.

பாசமாக வளர்த்த எங்கள் தாய் தந்தையருக்கு நாங்கள் அன்புப் பிள்ளைகளாக இருந்தோம். ஆனால் இங்கே பெற்றோருக்கும், பிள்ளைகளுக்குமிடையே நிறைய இடைவெளி இருந்து வருகிறது. எங்களை வளர்த்த பெற்றோர் போல் நாங்களும் இல்லை. எங்கள் பெற்றோருக்கு இருந்த பிள்ளைகள்போல் எங்கள் பிள்ளைகளும் இல்லை.

எங்கள் பிள்ளைகள் மாறுபட்ட சமுதாயப் பழக்கவழக்கங்களுக்கு ஊறி வேறுபட்டுக் கொண்டு போகிறார்கள்.

அந்த நாட்களில் நானும் நீயும் சிறுபிள்ளைகளாக இருந்த காலத்திலும் சரி, வளர்ந்து வேலைக்குப் போன காலத்திலும் சரி, ஒரு நாளாவது எமது பெற்றோரை எதிர்த்துப் பேசியிருப்போமா? எனக்கு இதுவரை அப்படிப் பேசியதாக ஞாபகமில்லை!


இங்கே எனது மகனோ, மகளோ பாடசாலை முடிந்து வீட்டிற்கு வந்தால நான் அறைக்குள் முடங்கிவிடுவேன், என் மரியாதையை நானே காப்பாற்றிக் கொள்ள. ஆனால் இங்கு பலருக்குப் பிள்ளைகளின் வாயால் பேச்சு வாங்குவது பழக்கப்பட்டுவிட்டது.

"யூ ஸ்டுபிட்" என்று எனது மகள் எனது மனைவியைப் பேசும்போது, அவள் கன்னத்தில் ஓங்கி அறைய வேண்டும் போலத் தோன்றும். ஆனால் அப்படிச் செய்தால், ஓங்கி அறைந்தால் நிச்சயமா நான் கம்பி எண்ண வேண்டியதுதான்.

பல்கலைக்கழகம் சென்றுவரும் எனது மகன் காதில் தோடும் மாட்டி, காலடியில் கிழிந்த ஜீன்சும் போட்டு, கெந்திக் கெந்தி நடக்கும் போது அந்தக் காலத்து ஜமேக்கன் நாட்டுக் காப்பிலிகள் நடந்த ஞாபகம்தான் எனக்கு வரும்.

"ஏன்டா தம்பி இப்படி நடையும் மாறி, நடத்தையும் மாறி திரிகிறாய்" என்று கேட்டால், "டடி யூ ஆர் அவுட் ஆஃப் ஓடர்" என்று சொல்லும் போது, அப்படியே அவன் கழுத்தை நெரித்து விடலாமா எனத் தோன்றும்.

எது மகள் சௌந்தர்யா போடும் ஆடைகளைப் பார்த்தால், என் மகளா இப்படி என்ற எண்ணம் உனக்குக் கூடத் தோன்றும். அது மாத்திரமல்லாமல், உனக்கு வியப்பாகக்கூட இருக்கும்.



*Fashion* என்று சொல்லி நாளுக்கு நாள் மாறுகின்ற ஆடையுலகத்தில் மயங்கிக் கிடப்பவள் சௌந்தர்யா. அவளுக்கு சௌந்தர்யா என்று பெயர் வைத்ததைவிட ஆங்கிலத்தில் ஏதாவது பெயர் வைத்திருக்கலாமென எனக்கு அடிக்கடித் தோன்றும்.

இரண்டு துண்டுகளால் கழுத்தின் பின்புறமாக இறுகக்கட்டி ஆழமாக வெட்டி அமைக்கப்பட்ட "ப்ளவுஸ்"சை அவள் போடும்போது, சீ! எனக்கு என் மகளைப் பார்க்கவே அருவருப்பாக - வெட்கமாக இருக்கிறது. கட்டையாக இடுப்பின்கீழ் அரையடி உயரத்திற்கு 'ஸ்கேர்ட்' போட்டுக் கொண்டு, அவள் நடக்கும்போது, கண்களை மூடிக்கொண்டு, 'கடவுளே' என்று நான் வெட்கத்தால் தலைகுனிந்த நாட்கள்தான் எத்தனை...

தாயின் வயிற்றிலே பிள்ளை இருக்கும்போது பிள்ளைக்கு உணவூட்டிய அந்த தொப்புள் கொடி அறுந்த இடத்திலே வெள்ளிச் சலங்கைகள் தாளம் போட அவள் நடந்து போகும் காட்சியை இனிமேலும் என்னால் விவரிக்க, விமர்சிக்க இயலாது.

என் மனைவி அனிதாவிடம் சொன்னால் பிள்ளைகளின் பக்கம் நின்று அவர்கள் செய்வது சரி என்று அடம்பிடிப்பது அவளது பழக்கமாயிற்று.

அனிதாவும் என்னைவிட நல்ல பொறுப்பான வேலையில் இருக்கிறாள்.

என் பிள்ளைகளைப் போல ஓரளவு அவளும் மாறிவிட்டாள் என்று சொல்லலாம்.

இப்பொழுதெல்லாம் என்னைப் பற்றி சிந்திக்க அவளுக்கு நேரமில்லை. அடிக்கடித் தன்னை கண்ணாடியிலே பார்த்து அலங்கரிப்பது அவளது வேலையாகப் போய்விட்டது. நரைத்துவிட்ட தலைமயிரை கறுப்பாக்க ஒவ்வொரு கிழமையும் அவளுக்கு அரைநாள் போய்விடுகிறது.

உழைக்கும் பணத்தில் சாறி, சாறியாக வாங்கி, ஒருமுறை உடுத்திய சாறியை மறுமுறை உடுத்தாமல், சில காலங்களுக்குப் பின், பாக்கில் கட்டப்பட்டு தொண்டு நிறுவனங்களுக்குத் தானமாகக் கொடுக்கப்படும்போது, பாடுபட்டு உழைத்த பணத்தின் மதிப்பை அவள் இன்னமும் உணரவில்லை என்று எனக்குத் தோன்றும்.

நாங்கள் இருவரும் வாக்குவாதப்பட்டால், "வாயை மூடு" என்று சொல்லுமளவுக்கு அவள் துணிந்துவிட்டாள்.

என்னை விவாகரத்து எடுத்துவிட்டு தனியாக வாழக்கூட அவளுக்குத் துணிவுண்டு. தானும் உழைக்கிற, அதுவும் என்னைவிடக் கூட உழைக்கிற அகங்காரம் அவளுக்கு.

சில நாட்களில் அலுவலக 'பார்ட்டி' முடிந்து இரவு வீடு திரும்பி வரும்போது அவள் நடத்தையிலிருந்து அனிதா குடித்திருக்கிறாள் என்று என்னால் உணர முடிந்தது. ஒரு வார்த்தைக் கூட பேசாமல், நான் இதுவரை பொறுமையாக இருந்திருக்கிறேன் என்று சொன்னால் உனக்கு வியப்பாகத்தான் இருக்கும்.

எனது மகன் சுதன் என்னிடமே வந்து, "டடி ஹேவ் யூ கொட் எக்ஸ்ட்ரா கான் ஒவ் பியர்" என்று கேட்கும்போது நான் ஒன்றும் கேட்காதவன் போல் பேப்பர் வாசித்து நடிப்பதை எப்படி உனக்கு விமர்சிப்பது?

மொத்தத்தில் இந்த நாட்டில் எனது குடும்பத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கதாபாத்திரம். நாங்கள் நடிக்கும் நாடகங்கள் ஏராளம்.

அகதியாய் இங்கு வந்த நான் அதிகம் கோபத்தைக் காட்டினால், இருக்கும் கொஞ்ச அன்பையும் தொலைந்து அனாதையாகிவிடுவேனோ என்ற பயத்தில் அதிக நேரம் என் வீட்டு அறையிலேயே முடங்கிக் கிடக்கிறேன்.

இங்கு அகதியாய் வந்த நாங்கள் எங்கள் வாழ்க்கையை தொலைத்துவிட்டோமோ என்ற கவலை எனக்கு மாத்திரம் அல்ல. இங்கு வந்த பலபேருக்கும் மனதின் ஆழத்தில் குடைந்து கொண்டுதானிருக்கிறது.

இன்னும் கொஞ்சக் காலத்தில் இங்கு வாழும் தமிழர்களாகிய எங்களில் ஒருசிலர் என்பதைவிட பலர், எங்கள் பண்பாடுகளை, விழுமியங்களை மறந்து இந்த நாட்டின் பண்பாட்டு கலாச்சாரங்களுக்குள் உறைந்து மாறுபட்ட மனிதர்களாக வேறுபட்ட சூழ்நிலையில் வாழப்போகிறார்கள் என்பதை நினைக்க எங்கள் வாழ்க்கையை இங்கு வந்து தொலைத்துவிட்டோமோ என்ற கவலை என் மனதில் வாட்டத் தொடங்கியுள்ளது.

இன்னும் பல விடயங்களை எழுதவேண்டும் போல் எனக்குத் தோன்றுகிறது. ஆனால் நான் இதுவரை எழுதிய அனைத்தும் நீ சரியானதொரு முடிவெடுக்க உதவியாக இருக்கும் என நம்புகிறேன்.

அன்புடன்

அண்ணன் அருந்தவன்

கடிதத்தை நர்சிடம் கொடுத்து ஆஸ்பத்திரி போஸ்ட் பாக்ஸில் போடச் சொல்லிவிட்டு, பெருமூச்சுடன் நிமிர்ந்து படுத்தார் அருந்தவன்.■

## அகவை 40இல் தமிழர் முன்னேற்றக் கழக

# திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி

தைத்திங்கள் 16ஆம் நாள் விழாக்கோலம் பூண்ட இலண்டன் ஈஸ்ற்காம் நகர சபை மண்டபத்தில் விமரிசையாக நடந்தேறியது, இலண்டன் தமிழர் முன்னேற்றக் கழகத் திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி 40ஆவது ஆண்டு விழா. தமிழர்களுக்கே உரித்தான, தனித்தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் திருநாளினை மனதிலிருத்தி, நாதஸ்வர ஓசையுடன் மேளங்கள் முழங்க, கழக அங்கத்தவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், அன்பர்கள், பெரியோர்கள் என மகிழ்ச்சியில் நிரம்பித் தளும்பியது மண்டபம்.



சொந்த மண் விட்டு, இந்த மண்ணில் வந்தேறு குடிகளான போதும், எந்த நிலையிலும் எம் அடையாளத்தை, முகவரியை நாமே தொலைத்துவிடக்கூடாது என்பதில் திண்ணமாக இருந்த நல்ல தமிழ் உள்ளங்களின் 40 வருட அயராக் கடின உழைப்பும், சேமிப்புமே தமிழர் முன்னேற்றக் கழகம், திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளியின் இன்றைய வளர்ச்சி. இவ்வளர்ச்சித் தொய்வின்றித் தொடர, தோள் கொடுத்து பெருந்தூண்களாக இருந்த மொழிப் பற்றுள்ளவர்கள் பலர் இன்று நேரிலும், சிலர் கழகத்தின், பள்ளியின் நினைவில் உயர்வாகவும் உணர்வாகவும் இருப்பதை 40ஆவது ஆண்டு மலர் படம்பிடித்துக் காட்டியுள்ளது.

வரலாற்றுப் பின்னணி கொண்ட இவ்விழாவில் தலைமை விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார் தமிழகப் பேராசிரியர், திராவிட இயக்கத் தமிழ்ப் பேரவை பொதுச் செயலாளர், ஈழத் தமிழர்களின் ஆதரவாளர் சுபவீரபாண்டியன், இலண்டன் நியூகாம் நாடாளுமன்ற உறுப்பினர் *Mr. Stephen Timms*, ஈஸ்ற்காம் முருகன் ஆலய பிரதம குருக்கள் ஸ்ரீநாகநாத சிவம் சிவாச்சாரியார், இலண்டன் தமிழ் நிலையம், இலண்டன் தமிழ் பெரியார் டாக்டர் இரத்தினம் நித்தியானந்தன், மதுரை மருத்துவக் கல்லூரி முனைவர் டாக்டர் சேகரம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து உரை நிகழ்த்தினார்கள். தலைவர் பூ.நாகதேவன் தலைமை தாங்கி விழாவினை நடத்த, வரவேற்புரையினை செயலாளர் இர. அன்பழகன் தமிழிலும், துணைத் தலைவர் திருமதி அல்லிகுமார் ஆங்கிலத்திலும் கூற, திருமதி சரஸ்வதி இராமையா நன்றியுரையை மொழிந்தார். பள்ளித் தலைமை ஆசிரியை திருமதி மனோகரன் பள்ளியின் வரலாறு பற்றி உரை நிகழத்தினார்.

மாணவ, மாணவிகளின் பரத நாட்டியம், குறத்தி நடனம், திரைப்படப் பாடல்களுக்கான நடனம் மற்றும் நாடகம், தமிழ்ப்பேச்சு எனத் தம் தமிழ்மொழி, கலை, கலாச்சாரப் பாண்டியத்துவங்களை தம் பெற்றோர், சபையோர் முன்னிலையில் செவ்வனே அரங்கேற்றி, ஆண்டு விழாவிற்கு மெருகூட்டினர்.



பிரதம விருந்தினர் சுபவீர பாண்டியன் "திருக்குறளும் அறிவியலும்" எனும் தலைப்பில் எல்லோருக்கும் புரியத்தக்க இலகு தமிழில் பேசினார். "திருக்குறள்" ஒரு அரிய தமிழ் நூல் என்று பேசுபவர்கள் எல்லோருக்குமே அந்நூலின் உட்புகுந்து, அதனை நுகரும் அனுபவம் இருந்ததில்லை. திருக்குறளில் இடம்கொண்டுள்ள ஒவ்வொரு குறளும் ஒரு வாழ்வியல் கருத்தைச் சொல்வதை நாம் எல்லோருமே அறிந்து, ஆய்ந்து, ரசித்து எம் அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்க நினைப்பதுமில்லை.



சுபவீர பாண்டியன் தனது உரையில், திருக்குறளினை எம் அன்றாட வாழ்க்கையோடு ஒப்பிட்டு, இன்று நடப்பனவற்றை அன்றே வள்ளுவர் தன் குறள்களில் சுட்டிக்காட்டியுள்ளதை மிக அழகாகச் சித்தரித்தார். இன்றைய விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சியின் கண்டுபிடிப்புகளை என்றோ எழுதிய திருக்குறளில் வள்ளுவர் கூறியிருப்பதை பிரதம விருந்தினர் விளக்கியபோது, அப்பேச்சினை இரசிக்காதோர் இல்லை என்றே கூறவேண்டும்.



இன்று மருத்துவத் துறையின் வளர்ச்சியில் பேசப்படுபவை திருக்குறளின் 'மருந்து' எனும் அதிகாரத்தின் ஒவ்வொரு குறளிலும் பரிணமிப்பதாக சுபவீ கூறியபோது, இந்த 'மருந்து' எனும் அதிகாரத்தை ஒருமுறை படித்துப் பார்க்க 'வேண்டும் என்ற ஆவல் நிச்சயமாகப் பலர் மனதில் எழுந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை.

மாணவர்களது கலை நிகழ்ச்சிகளைப் பெரிதும் பாராட்டிப் பேசிய பிரதம விருந்தினர், இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழும் மேடையில் இடம்பெற்றதாகக் குறிப்பிட்டார். மாணவர்கள் பேசிய தமிழில்கூட 'முத்தமிழ்' இருப்பதாகக் கூறிய சுபவீ, ஈழத்தமிழ், இந்தியத் தமிழ், ஐரோப்பியத் தமிழ் ஆகிய முத்தமிழும் மாணவர் நாவில் நடம்புரிந்ததாக வேடிக்கையாகக் கூறி, சபையோரை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்.

40ஆம் ஆண்டினை முன்னிட்டு வெளியிட்ட மலரினை சுபவீர பாண்டியன் வெளியிட்டு வைக்க, சம்பத்குமார், டாக்டர் இராதாகிருஷ்ணன், சின்னமணி, போல் செல்லையா, சட்டத்தரணி சிதம்பரப்பிள்ளை, ஆறுமுகம், தமிழர் முன்னேற்றக் கழகப் பாதுகாப்பு மன்றத் தலைவர் திரு. தேவதாசு மற்றும் பல பெரியோர்கள் மலரினைப் பெற்றுக் கௌரவித்தனர்.













தமிழர் முன்னேற்றக் கழக செயற்குழு உறுப்பினர் திரு. ராஜ்பூபதியின் "தமிழா தமிழா தமிழ் பேசு" காணொளி நான்கு நிமிடங்களே காணொளியில் ஒளிர்ந்த போதும், சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவர் மனதிலும் இடம்கொண்டதோடு, மறைந்த ஈழ மண்ணின் மைந்தர்களையும் மீண்டும் ஒரு கணம் நினைவூட்டியதை மறுப்பதற்கில்லை.

இலண்டனில் உள்ள மிகப் பழைமை வாய்ந்த முன்னணிப் பள்ளிகளுள், 40 ஆண்டுகளைத் தாண்டிய பெருமை கொண்ட தமிழர் முன்னேற்றக் கழகம், திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளியை வாழ்க, வளர்க என வாழ்த்துவோம்! ■

ப.வை.ஜெயபாலன்




# இயற்கை தந்த சீதனம் எங்கள் கிளிநொச்சி

எம் தாயக பூமியில் அண்மைக்காலத்தில் அதிதுரித வளர்ச்சியைக் கண்டதாக ஒளிரும் மாவட்டம் கிளிநொச்சி. யாழ்ப்பாண மக்களின் விவசாயப் பகுதி என்றே இது ஆரம்பம் கண்டது. இன்னும் யாழ்குடா நாட்டின் நெல் தேவையை நிறைவாக்குவது, கிளிநொச்சியின் அறுவடைதான். சுமார் அறுபது ஆண்டுகளுக்குள் காடுகள் களணியாகி, இடம்பெயர்வுகளால் குடிசனபரம்பல் கூடிய நிலையான மக்கள் நிறைந்த பட்டணமாக இது அதிசயமான வளர்ச்சியைத் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது.

கிளிநொச்சி, பூனகிரி, பளை என மூன்று பிரதேசங்களை உள்ளடக்கிய மாவட்டம், 634 சதுர மைல் பரப்பளவை கொண்டது. வடக்கே எழுதுமட்டுவான் எல்லைக் கிராமம். கிழக்கே விஸ்வமடு புன்னை நீராவி. தெற்கே முறிகண்டி. மேற்கே முழங்காவில். இரணைமடுக்குளம், கல்மடுக்குளம், திருவையாறு, அம்பாள்குளம், வன்னேரிக்குளம், அக்கராயன் குளம், யூனியன் குளம், பல்லவராயன் கட்டு என பெரிய, சிறிய குளங்களை உண்டாக்கியது, இதன் விவசாய வளம்.

நிறைகுளமாக சுமார் 43,000 ஏக்கர் நெற்செய்கை வயல்களுக்கு நீர்தரும் வசதியைக் கொண்டது, இரணைமடுக்குளம். ஆங்கில ஆட்சிக்காலத்தில் ஹட்சன் என்ற எந்திரவியலாளரின் நெறிப்படுத்தலில் உதயமானது.

வட்டக்கச்சி, உருத்திரபுரம், முரசுமோட்டை என்று குடியேற்றங்கள் மற்றும் 1முதல் 10ஆம் வரையான வாய்க்கால் இடையேயான இதனால் வளம்பெற்றன. சேர்மன் இராமநாதன் அவர்கள் அன்றைய பண்ணைத் திட்டத்தின்கீழ் ஆயிரம் ஏக்கர் நிலத்தை அரசிடம் பெற்று 1ம், 2ம் வாய்க்கால் நிலப்பரப்பை நெற்பூமி ஆக்கினார். இரணைமடுகுள நிர்மாணத்தை ஆரம்பித்த பெருமை அவரைச் சாரும். பிற்காலத்தில் இந்த ஆயிரம் ஏக்கர் பலருக்கும் பிரித்து வழங்கப்பட்டன. தொடர்ந்து டட்லி சேன நாயக்கா, சிறீமாவோ பண்டாரநாயக்கா காலத்தில் ஆரம்பமான படித்த வாலிபர் குடியேற்றத் திட்டங்கள், விவசாயப் படை உருவாக்கம், விவசாய மன்னன் என்ற பட்டய ஊக்குவிப்பு, நெல், மிளகாய் என்பவற்றை வெளிநாடுகளில் இறக்குமதி செய்யத் தடை என்ற ஊக்குவிப்புக்கள் எங்கும்போல கிளிநொச்சியிலும் விவசாய ஈடுபாட்டுக்கு வீறுசேர்த்தன, உத்தியோக மாயையில் ஊறியிருந்த யாழ்குடா நாட்டவரின் மனங்களை மாற்றி படித்த வாலிபர்களையும் காணியை இங்கு தேடி நாட வைத்தது.

உத்தியோகஸ்தர்களுக்கான புளியம் பொக்கணை போன்ற 10 ஏக்கர் திட்டம் மற்றும் மலேசியா சென்று பணம் சம்பாதித்தவர்கள் மனங்களில் உதித்த 3ஆம் வாய்க்கால் முதலான காணி முதலீட்டுத் திட்டம் என்பனவும் நெற்செய்கை, மிளகாய், வாழை மரக்கறிகள் என்பவற்றின் உச்ச விளைச்சலை கிளிநொச்சி நிலமாதா உற்பத்தியாகப் பெற்று உதிர்க்க காரணமாயின.

1960ஆம் ஆண்டுவரை கிளிநொச்சி என்பது சாவகச்சேரி தொகுதியில் இணைந்த பகுதி. 1984 வரை இதுவும் யாழ்ப்பாண மாவட்டம். 1960 முதல் கிளிநொச்சி அரசியலில் நாட்டம் காட்டி பிரவேசித்த திரு. வீ. ஆனந்தசங்கரி கரைச்சி கிராம சபைத் தலைவராக, கிளிநொச்சி பட்டண சபைத் தலைவராக 1970 முதல் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்து கிளிநொச்சி வளர்ச்சியில் முக்கிய பங்காற்றினார்.

பிளாக்கர் பொன்னம்பலத்தால் ஆரம்பிக்கப்பட்ட நகர அபிவிருத்தி இவர் காலத்தில் துரிதம் கொண்டது. பளை வரை இடம்பெற்ற புகையிரத சேவை கிளிநொச்சி வரை நீடிப்பு பெற்றது. முக்கிய கிராமங்கள் அனைத்திலும் புழுதியைக் கிளப்பிக்கொண்டு பேருந்து சேவையின் நடமாட்டம் அதிகரித்தது. பின்தங்கிய பிரதேசத்தில் பணிபுரிந்தால் குடா நாட்டுக்கு இலகுவாக இடமாற்றம் பெறலாம் என்ற அரச திட்டம் ஆசிரியர்களின் உத்தியோகங்களை கிளிநொச்சியை நாட வைத்தது. கல்வி, சுகாதாரம் போக்குவரத்து, விவசாயம் என அனைத்து சேவைகளும் சீர்கண்டது. கிளிநொச்சி சந்தை, தென் இலங்கை சிங்களவர்களுக்கும் வர்த்தக மையமானது. 1984இல் திரு. வீ. ஆனந்த சங்கரியின் விடாமுயற்சி கிளிநொச்சியை தனி மாவட்டமாக்கியது. பின்தங்கிய பிரதேசங்களுக்கும் முன் உரிமை தந்த பல்கலைக்கழக தரப்படுத்தல் முறை கிளிநொச்சி மண்ணின் மைந்தர்களான கூலித் தொழிலாளர்களின் பிள்ளைகளும் வைத்திய கலாநிதிகளாகும் வாய்ப்பைத் தந்தது.

குருகுலம், காந்தி சேவா சங்கம், ஆரோகணம், திருக்குடும்ப கன்னியர் மடம், கடுவை கருணா நிலையம், நவஜீவனும் கஸ்தூரிபாய் இல்லம் என்பன இந்த சமகாலத்தில் ஆதரவற்ற சிறுவர்களுக்கு அடைக்கலம் தந்த இந்த கிறிஸ்தவ அறநிலையங்களாக இயங்கின. குருகுலம் கப்பு, காந்தியம் பெரியண்ணா, வெள்ளைக்கார கட்சன் அம்பா, தம்பிராசா போதகர், சிவமலர் அம்மா என்போர் மனித வடிவ தெய்வங்களாக இந்த மானிட சேவையில் நிலைத்தனர்.

1958இல் நடந்த இனக் கலவரத்தில் ஏதிலிகளாகி கிளிநொச்சியை நாடி ஓடிவந்தவர்களுக்கான குடியேற்றமாக தர்மபுரம் உதயமானது. அன்றைய அரசாங்க அதிபர் சிறீகாந்தாவின் முயற்சி அது. தொடர்ந்து 1972, 1983 என்று வலுத்த இனக்கலவரங்கள் கிளிநொச்சியில் பல அகதி முகாம்களை தோற்றுவித்தன. இவ்வாறு இடம்பெயர்ந்தவர்களால் நகரை அண்டிய இரத்தினபுரம், ஆனந்தபுரம், உதயநகர், அமைதி நகர், ஆரோக்கிய நகர், அம்பாள் நகர், பொன்நகர் என அரசகாணிகளை கிராமங்களாக்கின.

போராட்ட கால ஆனையிறவு போக்குவரத்து தடை, இந்திய இராணுவக் கால யாழ்ப்பாண இடப்பெயர்வு என்பன கிளிநொச்சி குடிமைகளின் தாழ்வாரங்களை கூட குடும்பங்களின் கூடாரமாக்கியது. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசமாக, அவர்களின் படைத்தள நிர்வாகக் கட்டமைப்பு நிலையமாக கிளிநொச்சி மாறியது. ஒழுக்கம், கட்டுப்பாட்டுடன் கூடிய வளர்ச்சி நிலை பெற்றது.

பேன் பார்க்கும் மந்தி இனம் கெந்திப்பாய்ந்த பெருங்காட்டுப் பிரதேசம், வான் பார்த்து வளம் சேர்க்கும் முயற்சியாளர் வருகையினால் உயிர்ப்பு கண்டது கிளிநொச்சி, போராலும் இடம்பெயர்வுகளாலும் நிலைப்புக்கண்டு வளர்ச்சி கொண்டது. இன்றைய பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் மற்றும் மாவட்ட சபை உறுப்பினர்களால் வளர்ச்சி தளம்பாமல் தொடர்கிறது. கொட்டுண்ட நெற்கதிர் பொறுக்கி ஏழையும் பசியாறவைக்கும் வளமான மண் தமிழீழ மாதாவுக்கு இயற்கை தந்த சீதனம். ■


# தாயகத்தில் நற்பணிகளாற்றும் லண்டன் அமைப்பு

சறோஜினி சந்திரகோபால்


# Think 2wice ஒன்றிய சிறப்பான நிகழ்வு




நல்லதோர் அறிவுரையை நாமமாகக் கொண்டு நலிந்தோருக்கு நன்மைபுரியும் நற்பணிகளை நடைமுறைப்படுத்திவரும் "*London Think 2Wice*"ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற "சலங்கை ஒலி *2015*" நிகழ்வில் கலந்துகொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. கிழக்கு இலண்டன் பகுதியில் வெகு விமரிசையாக நடந்த நிகழ்வில், இலண்டனில் உள்ள முன்னணி நடன ஆசிரியர்களின் நெறியாள்கையில் பல பரத நாட்டியங்களும், "*THINK 2WICE*" ஒன்றியத் தலைவரின் நெறியாள்கையில் "கனவு மெய்ப்பட வேண்டும்" என்ற சமூகப் பல்சுவை நாடகமும் அரங்கேற்றப்பட்டது. தமிழகத் திரைப்பட இயக்குநர் இமயம் பாரதிராஜா சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்திருந்தார்.



ஏ.ஆர்.சிறிதரனின் கனவு மெய்ப்பட வேண்டும் நாடகம் களத்திலும் புலத்திலும் உள்ள எம்மவரின் நிலைமைகளை மிகவும் சுவாரசியமாகப் படம் போட்டுக் காட்டியதோடு மட்டுமின்றி, புலம் பெயர் தேசங்களிலுள்ள தமிழ் அமைப்புகள் ஒன்றாக இணைந்து, போரினால் நிர்க்கதியாக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்வினை மீளக் கட்டி எழுப்புவதில், காத்திரமான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்திக் காட்டியது.



நிகழ்ச்சியின் முடிவில் "*THINK 2WICE*" ஒன்றியத்தின் ஸ்தாபகரும் அதன் தலைவருமான திரு. *A.R.*சிறிதரன் அவர்களிடம், இந்த அமைப்பின் தோற்றம், செயல்பாடுகள் பற்றிக் கேட்டபோது....

நாம் பிறந்து வளர்ந்த எமது மண்ணில் *2009*ஆம் ஆண்டு மானிடர் நினைத்துப் பார்க்க முடியாத முள்ளிவாய்க்கால் மனித பேரவலம், தொடர்ச்சியாக ஏற்பட்ட மாற்றங்கள், சீர்குலைவுகள், இழப்புகள் என்னைப் போன்ற பலரின் மனங்களில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தின.

இந்நிலையில் என்னுடைய நண்பர்களை ஒன்றுசேர்த்து *2010*ஆம் ஆண்டு, இந்த அமைப்பை உருவாக்கி, *2011*ஆம் ஆண்டு ஆவணி மாதம் பிரித்தானியாவில் முறைப்படி ஒரு அறக்கட்டளையாகப் பதிவு செய்தோம். *2010*ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை *£43,576* ஸ்ரேலிங் பவுண்ஸ் செலவில் பல ஆக்கப்பூர்வமான பணிகளை முன்னெடுத்து வந்துள்ளோம். குறிப்பாகப் போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி, போரினால் துணைவர்களை இழந்த அன்னையருக்குச் சுயதொழில், கைத்தொழில் போன்ற வேலைத்திட்டங்களிலும் கூடிய கவனம் செலுத்தி வருகின்றோம்.

கடந்த ஆனி மாதம் இந்த அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட "*Walk 4 Bike : 2015*" என்ற நடைப்பயணம் பற்றிக் கேட்டபோது....

புலம் பெயர் தேசங்களில் பிறந்து வளர்கின்ற எமது குழந்தைகளுக்கு, எமது மண்ணில் அல்லலுறும் மக்களைப் பற்றிய, குறிப்பாக தங்களது வயதை ஒத்த சிறுவர்களின் இன்னல்களை அறியத் தருவது எமது கடமையென நாங்கள் நினைக்கின்றோம். இங்கு வாழும் எங்கள் குழந்தைகளுக்கு, பல்லாயிரம் மைல் தொலைவில், எமது மண்ணில், வெறுங்காலுடன் தினமும் பாடசாலைக்கு கல்வி கற்கச் சென்றுவரும் மாணவர்களின் நிலைமையைத் தெளிவுபடுத்தி, அவர்களுக்குத் துவிச்சக்கரவண்டி வாங்கிக் கொடுக்கும் நோக்கில், "*Walk 4 Bike - Kids Charity Walk 2015*" என்ற நடைப்பயணத்தை ஏற்பாடு செய்து இருந்தோம். அந்நிகழ்வில், பல நூற்றுக்கணக்கான மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். அவர்கள் திரட்டித்தந்த நிதியில், வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த, வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள, பெற்றோரை இழந்த, *150* மாணவர்களை இனம் கண்டு, *150* துவிச்சக்கர வண்டிகளை அன்பளிப்புச் செய்தோம். தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் இந்த நடைபயணத்தை நடத்த இருக்கின்றோம்.

*Think 2Wice* ஒன்றியத்தின் எதிர்காலத் திட்டங்கள் பற்றி வினவிய போது...



இந்த அமைப்பினை ஒரு சமூகச் சீர்திருத்த அமைப்பாக செயற்படுத்த விரும்புவதாகக் கூறினார். தாயகத்தில் கலாச்சார சீரழிவுகள், போதைப் பொருள் பாவனைகள், வன்முறைகள் அதிகரித்து வருவதையிட்டுக் கவலை தெரிவித்த திரு. சிறிதரன், அவற்றை இயன்றளவு சீர்செய்ய ஏனைய சமூக முற்போக்குச் சிந்தனையுள்ள அமைப்புகளுடன் இணைந்து செயற்பட முயற்சிகள் எடுத்து வருவதாகத் தெரிவித்தார். போரில் கணவன்மாரை இழந்து, சமூகத்தின் பார்வையில் மிகவும் தர்மசங்கடமான நிலையில் வாழும் இளம் விதவைகளின் மறுமணத்தை ஊக்குவிக்குமுகமாக "தாலி" என்றொரு திட்டத்தை இந்த ஆண்டு அமுல்படுத்த உள்ளதாகத் தெரிவித்தார். இத்திட்டம் பல சமூகக் கலாச்சாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வளிக்குமென நம்பிக்கைத் தெரிவித்தார்.

உங்கள் திட்டங்களினால் பயன்பெறுபவர்களை எவ்வாறு தெரிவு செய்கிறீர்கள்? என்ற கேள்விக்கு...



"ஆரம்பத்தில் நான் நேரடியாக இலங்கை சென்று பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு, பின் சில முக்கியமான வேலைத் திட்டங்களை உருவாக்கினோம். *2011*ஆம் ஆண்டு "யாழ் தினக்குரல்" பத்திரிகையினால் நடத்தப்படுகின்ற "கருணைப்பாலம்" அமைப்புடன் ஒரு புரிந்துணர்வு உடன்பாடு செய்துகொண்டோம். இதனைத் தொடர்ந்து, எமது அறிவுறுத்தலுக்கிணங்க, எம் வேலைத் திட்டங்ளை அவர்கள் அமுல்படுத்தி வருகின்றார்கள். எம் அமைப்பின் இலங்கைப் பிரதிநிதிகளும் எமக்கு உறுதுணையாக செயல்படுகிறார்கள்."

புலம் பெயர் தேசங்களிலுள்ள எம்மவரின் பங்களிப்பு பற்றிக் கேட்டபோது...

போருக்குப் பின்னான சூழ்நிலையில், புலம்பெயர் தேசங்களில் உள்ளவர்களின் பங்களிப்பில் ஒரு தொய்வு நிலை இருப்பதாகவே உணரப்படுகிறது. ஒரு சில அமைப்புகளின் தவறான நடவடிக்கைகளால் இந்த நிலை ஏற்பட்டிருக்கலாம்.

எமது அமைப்பைப் பொறுத்தமட்டில், மக்களின் ஆதரவும் பங்களிப்பும் வரவேற்கத்தக்கதாகவே உள்ளது. எம் அமைப்பின் நலன் விரும்பிகள், தொண்டர்கள், நண்பர்களுக்கு நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

இறுதியாக திரு. *A.R.* சிறிதரன் அவர்களிடம் "கனவு மெய்ப்பட வேண்டும்" என்ற நாடகத்தை எழுதி, இயக்கி, நடித்தும் உள்ளீர்கள். இந்த எண்ணம் தோன்றக் காரணம் என்ன? என்ற வினாவை எழுப்பிய போது...

"இன்று புலம் பெயர் நாடுகளில் நாம் வாழ்கின்ற சூழ்நிலையில், பல வேலைப்பளுக்கள் மத்தியில், எம் மண்ணின் மீது, உடன்பிறப்புகளின் மீது காட்டுகின்ற நாட்டம் குறைந்து வருகின்றது. எம்மில் சிலர், எம் நாட்டு நிலைமைகளைத் தெரிந்தும் தெரியாதவர்களாகப் புரிந்தும் புரியாதவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம், விழியிருந்தும் குருடர்களாக, செவியிருந்தும் செவிடர்களாக வாழ்வது வேதனைக்குரிய விசயம். சொந்த மண்ணை மறப்பது, பெற்ற தாயை மறப்பதற்குச் சமமாகும். இதனையே எனது பேச்சுகளிலும் எழுத்துகளிலும் கவிதைகளிலும் நாடகங்களிலும் சொல்லி வருகிறேன். இதன் ஒரு வெளிப்பாடுதான் "கனவு மெய்ப்பட வேண்டும்" என்ற நாடகம். தொழில்நுட்ப வளர்ச்சியில் மேடை நாடகங்கள் தற்பொழுது அருகி வருகின்றன. எமது கொள்கைகளை முடிந்த வரையில் மேடை நாடகங்கள் வாயிலாக வெளிப்படுத்தி வருகிறோம்."

நல்லதொரு நிகழ்ச்சியை கண்டுகளித்தது மட்டுமின்றி, ஒரு நல்ல சமூக முற்போக்குள்ள அமைப்பினை அறிந்துகொள்ளும் வாய்ப்பினைத் தந்த ஒரு இனிய மாலைப் பொழுதாகவே அன்றைய நாள் அமைந்தது. "*Think 2wice*" ஒன்றியம் எமது சொந்தங்களுக்குச் செய்துவரும் தொண்டினைப் போற்றுவோம். அவர்கள் பணி தொடர வாழ்த்துவோம். எம்மால் என்ன செய்யமுடியும் என்று சிந்திப்போம்.

**Web : www.think2wice.org.uk**
**E-mail : info@think2wice.org.uk**









# லண்டனில் சிறப்பாக நடந்த மார்கழி இசைவிழா

மாதங்களில் மார்கழி என்று அந்த மாதத்துக்கு ஒரு சிறப்புண்டு. அது பக்தி மாதம். குறிப்பாக இசைமயமான மாதம். ஆலயங்களில் இறைவனைத் துயிலெழுப்ப திருவெம்பாவை, திருப்பாவைப் பாடல்களை அந்த மார்கழி அதிகாலை பொழுதில் பாடுகின்ற நம்மவர்கள், மற்றைய நேரங்களில் கச்சேரிகள் செய்வது மரபாகும்.

தமிழகத்தில் சென்னையில் டிசம்பர் மாதம், கலைஞர்களின் இசைக் கொண்டாட்டங்கள் நடனக் கச்சேரிகள் என்று சபாக்கள் அழகூட்டும் புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் பல தமிழர்கள் ஆண்டு தவறாமல் தமிழகத்திற்கு இவற்றை அனுபவிக்கச் சென்று வருவார்கள்.

அப்படியான ஒரு இசைமயமான சுகத்தை லண்டனிலும், இம்முறை அனுபவிக்க முடிந்தது. ஹெண்டன் நகரத்தில் அமைந்த ஸ்ரீஜெயவீர ஆஞ்சநேயர் ஆலய மண்டபத்தில் 2014 மார்கழி மாதத்தில், இசை விழா நிகழ்ச்சிகள் முதல் தடவையாக நடந்தது. கடந்த 2015 மார்கழியிலும் இரண்டாவது முறையாக மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இலைமறை காயமாக உள்ள புலம் பெயர்ந்து வாழும் இளையவர்களின் கலைத் திறமைகளை வெளிச்சத்துக் கொண்டு வந்து, அவர்களை ஊக்கப்படுத்துவதே ஏற்பட்டாளர்களின் நோக்கமாகும்.



மார்கழி மாதத்தில் ஒவ்வொரு சனிக்கிழமை மாலை 5 மணி முதல் இசை, மற்றும் கலை நிகழ்வுகள் அரங்கேறின.

முதல் சனிக்கிழமை மங்கள விளக்கேற்றல், இறைவணக்கம், சிவாச்சாரியர்களின் ஆசி போன்ற சம்பிரதாய பூர்வமான நிகழ்ச்சிகளுடன் கோலாகலமாக ஆரம்பமானது.

பாடகர் கிருஷ்ணா வெங்கட்ராமன் பாடலுடன் ஆரம்பமானது இசை விழா. மீனுஷா குழு வயலின் கச்சேரியை வழங்கினர். நடன ஆசிரியை திருவேணி சங்கர் தனது மாணவிகளுடன் அற்புதமான பரத நாட்டியத்தை வழங்கினார். செல்வி புவனாவின் நடனம் மனதில் பதிந்தது. இறுதியாக சென்னை சகோதரிகளின் வாய்ப்பாட்டு உள்ளங்களை நிறைத்தது.

இரண்டாவது சனிக்கிழமை, ஆசிரியை தேன்மொழியின் சிறப்பான வாய்ப்பாட்டு, ராஜி சுந்தரலிங்கம் குழுவினரின் வீணைக்கச்சேரி தர்சிகாவின் வீணைக் கச்சேரி வனிதா நடனம் இவற்றோடு அன்றைய இசைப் பொழுது நிறைவு பெற்றது.





மூன்றாவது வாரம் ஆஞ்சநேயர் பெருமைகளை ஆன்மீகப் பேச்சாளர் இராஜகோபாலன் பேசினார். சாம்பவியின் வயலின், ஹரோ தமிழ்பாடசாலை மாணவிகளின் நடனம், சுவாதி ஷேஷாத்திரியின் வாய்ப்பாட்டு அனைவருக்கும் நல்ல விருந்தாக அமைந்தன.

இறுதி வாரம், ஆனந்த நடேசனின், 'ஆனந்த-லயா' மாணவர்களின் நிகழ்ச்சி, பிரீத்தி மகேந்திரன் நடனம், கே.ரி. சிவகணேஷின் மாணவர் வயலின் இனிதாக நடந்தது.

இந்த மார்கழி இசை விழாவைச் சிறப்பாக நடத்தி எமது இளைய கலைஞர்களுக்கு அரங்கம் அமைத்துக் கொடுத்து ஆலய அறங்காவலர்களான தில்லை நடராஜா, பரமேஸ்வரன் ஆகியோருடன் ஒத்துழைத்து ஏற்பாடுகளுக்கு உதவிய உள்ளங்களை நெஞ்சாரப் பாராட்டாமல் இருக்க முடியாது.

**டாக்டர் எம். முருகேசன்**










நாம் எடுக்கின்ற முடிவுகளைப் பொறுத்துத்தான் நாம் செய்கின்ற காரியங்கள் வெற்றியளிக்கின்றனவா அல்லது மாறாக தோல்வியில் முடிகின்றனவா என்பதை எமது சொந்த அனுபவத்தை வைத்துத்தான் கூற முடியும்.

விமானப் பயணம் என்பது முன் ஒரு காலத்தில் சமுதாயத்தின் மேல் மட்டத்தில் உள்ளவர்கட்கு மட்டும்தான் என்ற நிலை மாறி, சாதாரணமானவருக்கும் நடைமுறை சாத்தியமாகிய பின்னரும், அதற்கு ஏற்படக்கூடிய செலவு சிறிய தொகையல்ல என்பதை நாமெல்லோரும் அறிவோம்.

தூரப்பயணம் என்றாலே அதிலும் குறிப்பாக விமானப்பயணம் என்றாலே பல ஆதங்கம் ஏற்படுவது மனித இயல்பு. பிரயாணத்தை இடைஞ்சல்கள் இன்றி தொடங்குவதற்கு நல்ல பிரயாண முகவர் (Travel Agent) தேவை. நாளாந்த மளிகைக்கடை அனுபவம், நாம் வேண்டிய பொழுது கடைகளை மாற்றிக் கொள்ள முடியும். விமானப்பயணம் அத்தி பூத்தாற் போல் செய்கின்றவர்கள் ஏராளம். ஏமாற்றத்தினை தவிர்ப்பதற்கு இத்துறையில் நீண்டகால அனுபவமும், நிதானமும் வழி நடத்தல்களும், நியாயமான விலைகள், பொருத்தமான ஆலோசனைகள், இனிய தமிழ், ஆங்கிலத்துடன் சிங்களத்திலும் சரளமாக உரையாடி சினேகபூர்வமான சேவையினை வழங்கி வரும் ஒரே நிறுவனம் ஏ- லங்கா டிராவல் லிமிரெட். இது ஓர் விமானப் பயணியின் உண்மையான அனுபவம்.

*- சிவபரிமேலழகர்.*

**FOR ALL YOUR TRAVEL NEEDS, TICKETS, VISAS ETC.,**

**Contact : Wimal/Viji A-Lanka Travel Ltd.**
*171 Tooting High Street, Tooting*
*London SW17 OSZ*
**Telephone Number 020 8672 5551,**
**Mobile 07956 206 709**

# SRI LAKSHMI MATHA
## ASTROLOGICAL CENTRE



*All Religions Welcome*
**Pandith: RAMRAJU**

**To get Solutions:**
- Financial
- Education
- Children
- Property
- Employment
- Court Cases
- Business
- Love
- Marriage
- Health
- Sexual Problems
- Family Problems
- Job
- Relationship etc.




**We also give suggestion for any type of personal problems.**
**100% REMOVAL OF BLACK MAGIC & GIVEN LIFE LONG PROTECTION**

Call for an Appointment
**0744 078 0447**
241 C, High Street North, Manor Park, Eastham. London E12 6SJ

# லண்டனில் முதியோர்களின் ஆடல், பாடல் கொண்டாட்டம்!










முதியோர்கள் ஒன்றுகூடி ஆடல், பாடல், உரையாடல் என்று கொண்டாடி மகிழ்ந்த நிறைவான நிகழ்ச்சியை சமீபத்தில் லண்டனில் கண்டுகளித்த நினைவுகளை நெஞ்சம் மறக்கவில்லை.

லண்டன் ஹரோ நகரத்தில் இயங்கும் முதியோர் சங்கத்தின் 9வது ஆண்டு விழா, இயக்குனர் குணா வேலுப்பிள்ளையின் பசுமையான வரவேற்புரை, குளிரான அந்தக் கலைமாலையான கலாச்சார விழாவை இதமாக்கியது. அடுத்து முதியோர் சங்கத்தின் வாழ்த்துப் பாடலை மூத்த பெண்மணிகள் பாடினார்கள். குணா வேலுப்பிள்ளை இதனை யாத்திருந்தார்.

பிரதம விருந்தினராக தமிழ் உணர்வாளரான ஹரோ மேயர் சுரேஷ் கிருஷ்ணா, தன் துணைவியார் கவுன்சிலர் சசிகலா சுரேஷ் கிருஷ்ணாவுடன் கலந்துகொண்டார். இவர்களுடன் தயா இடைக்காடரும் பங்குபற்றினார்.

வயதான மூத்த பெண்களின் கோலாட்டம், ஜோடி நடனம் அருமை.

நிகழ்ச்சிகளில் மகுடம் வைத்தாற்போல, இருபதுக்கும் மேற்பட்ட, ஆண், பெண் முதியோர்கள் கலந்துகொண்ட 'மண்வாசனை' என்ற குறுநாடகம் மேடையேறியது. குணா வேலுப்பிள்ளை இந்நாடகத்தைத் தயாரித்து, இயக்கியிருந்தார். காலம் மாறிவிட்டது. புலம்பெயர்ந்த இளம் சமுதாயம் ஊருக்குச் சென்று அங்கு வாழும் தமது உறவுகளுடன் கொண்டாடி, திருமணம் புரிந்து, தாயக உறவுப்பாலம் அமைக்கிறார்கள் என்ற கருப்பொருளில் நாடகத்தை அமைத்திருந்தார்.

நீண்ட இடைவெளியின்பின் உறவுகளைக் காணும்பொழுது உண்டாகும் பிணைப்பு விட்டுப் பிரியமுடியாத மண் வாசனையுடன் கூடிய காதல் என்று














முதுமையிலும், இளமை உணர்ச்சியுடன் காட்சிகளை அற்புதமாக நகர்த்திச் சென்றார்கள்.

முதியோர்களை ஒன்றுபடுத்தி, நெறிப்படுத்தி, ஹரோ முதியோர் தமிழ்ச்சங்க உறுப்பினர்களின் ஒத்தாசையுடன் இதனை அருமையாகச் சாதித்திருக்கிறார், குணா வேலுப்பிள்ளை. இந்நாடகத்தில் சிறப்பாக நடித்த ஆண், பெண்களை தெரிவு செய்யும் பொறுப்பை செய்து முடித்தேன்.

சாந்தி தயாபரன் நிகழ்ச்சிகளை அழகாகத் தொகுத்தளித்தார். சங்கத்தின் செயலாளர் காசி விசுவநாதன் நன்றி கூறினார். இரவு விருந்துபசாரத்தோடு விழா இனிதே நிறைவெய்தியது.

சிரிப்பு இதயத்தில் எழுகின்ற இசை; சிந்தனா சக்தியின் பிறப்பிடம்; நட்பு மகிழ்ச்சிக்குப் பாலம். இவற்றை நான் ஹரோ முதியோர் சங்க செயற்பாடுகளில் இருந்து கற்றுக்கொண்டேன்.

- சிவதணிகாசலம்.

# ஈழத்து பத்திரிகையாளரின் தொடரும் சாதனைப் பயணம்

பிரபல ஈழத்து பத்திரிகையாளர் எஸ். திருச்செல்வத்தின் கனடா 'தமிழர் தகவல்' சஞ்சிகையின் இருபத்தி ஐந்தாவது ஆண்டு பூர்த்தி 'இளந்தோப்பு' சுவடு வெளியீடும், தமிழர் தகவல் வெள்ளி விழா ஆண்டு விருதுகள் வழங்கலும் ரொறொன்ரோ நகரசபையின் அங்கத்தவர் சபாபீடத்தில் *(Council Chamber, City Hall, Toronto)* 7-2-2016 ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு நடைபெறுகிறது.

சமூகப் பணி, தமிழ்ப்பணி, எழுத்துப்பணி, இலக்கியப் பணி ஆகியவற்றில் நீண்டகாலமாக ஈடுபட்டுவரும் தமிழர் சமூகப் பிரமுகர்கள் வருடாந்த விருதுகளைப் பெறத் தெரிவாகியுள்ளனர்.

கணினித் தொழில்நுட்பம் சார்ந்த ஊடகத்துறையில் முதல்வராகக் கணிக்கப்பெறும் சாதனையாளர் ஒருவருக்கு சிறப்பு விருது வழங்கப்படுகிறது. இளையவர் ஒருவருக்கு 'வளர்ந்துவரும் சாதனையாளர்' விருதும், தொழில்துறை பங்களிப்புக்காக இருவருக்கு விருதும் வழங்கப்படுகிறது.

பல பட்டங்களும், பதவிகளும் பெற்று, பல மருத்துவச் சாதனைகள் புரிந்து, பல நூறு ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் எழுதிய ஐரோப்பா வாழ் மருத்துவப் பேராசிரியர் 'வாழ்நாள் சாதனையாளர்' விருதைப் பெறவுள்ளார்.

ஒவ்வொரு துறையிலும் ஆற்றல்மிக்க நூற்றுக்கு மேலான படைப்பாளிகளின் ஆக்கங்களை சுமந்து, நூற்றுக்கு மேலான பக்கங்களுடன் ஆசிரியர் எஸ். திருச்செல்வத்தின் கடும் உழைப்பில் 'தமிழர் தகவல்' வெள்ளி விழா மலர் 'இளந்தோப்பு' சுவடு வெளியிடப்படுகிறது.

'ஈழமுரசு', 'முரசொலி' ஆகிய தினசரிகளை யாழ்ப்பாணத்தில் பிரதம ஆசிரியராக இருந்து நடத்தி, ஒரே செல்வ மகன் அகிலனை தமிழீழத் துரோகிகளின் கொலைவெறிக்குப் பலிகொடுத்து, உயிராபத்தை எதிர்கொண்டு தன் மனைவியுடன் அரசியல் தஞ்சம் வழங்கப்பட்ட கனடாவில் திருச்செல்வம் குடிபுகுந்த பின்னர் கடநத 25 ஆண்டுகளாக 'தமிழர் தகவல்' மாத சஞ்சிகையை அங்கிருந்து நடத்தி வருகிறார்.

ஈழமண்ணுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் கனடாவில் தொடர்ந்து பணிசெய்யும் நமது பத்திரிகையாளர் எஸ். திருச்செல்வத்தின் தொடரும் சாதனைப் பயணத்துக்குப் 'புதினம்' நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

# யாழ். தேசிய பொங்கல் விழாவில் உடுவையின் 'நல்ல நல்ல கதைகள்'

நம்மவர் என்று உரிமையோடு உரத்துச் சொல்லக்கூடிய ஈழத்து பிரபல எழுத்தாளர் உடுவை தில்லை நடராஜா எழுதிய 'நல்ல நல்ல கதைகள்' நூல் சமீபத்தில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த தேசிய தைப் பொங்கல் நிகழ்வில் பங்குகொண்ட பிரதமர் ரணில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, தமிழ் அமைச்சர்கள் டி.எம். சுவாமிநாதன், விஜயகலா,



பிரதமர், அமைச்சர் மற்றும் பிரமுகர்களுடன் உடுவை தில்லை நடராஜா

மகேஸ்வரன், வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது.

இந்து சமய கலாச்சார அலுவல்கள் அமைச்சின் பணிப்பில் உடுவை இந்நூலைத் தயாரித்திருந்தார். மாணவர்களுக்கும் அறிவூட்டத்தக்க வகையில் அறிஞர்களின் மேற்கோள் மற்றும் அழகான சித்திரப் படங்கள் கொண்ட பதினைந்து கதைகள் மாணவர்களின் பொது மனப்பாங்கை வளர்க்கக்கூடிய வகையில் ஒவ்வொரு கதையிலிருந்தும் கேள்விகள் ஆகியவற்றை இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

வெகுவிரைவில் இணையத்தளங்கள் மூலம் பதிவிறக்கம் செய்யக்கூடியதாக இறுவட்டாகவும் வெளியிடவிருப்பதாக இந்து சமய கலாச்சார அலுவலகப் பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரன் தெரிவித்தார்.

அரச உயர் பதவிகளில் பொறுப்பான பதவிகள் வகித்து, உடுவை தில்லை நடராஜா இப்போது பொதுச் சேவை கமிஷனில் *(Public Service Commission)* உறுப்பினராக உள்ளார்.




## லண்டன் பல்கலைக்கழக வளாகத்தில்


# வள்ளுவர் தினமும் பொங்கல் விழாவும்

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான் புகழ் கொண்ட தமிழ்நாடு

என்ற மகாகவியின் வாக்கு பலித்து 1996ஆம் ஆண்டு அன்றைய தமிழக அரசால், அந்த ஆண்டு நடைபெற்ற உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டின் நினைவாக, வழங்கப்பட்ட திருவள்ளுவரின்திருவுருவச்சிலை லண்டன் (*SOAS*) பல்கலைகழகத்தின் வளாகத்தில் வைக்கப்பட்டிருந்தது.

ஆங்கில நாட்டின் தட்பவெப்ப நிலையின் மாறுதல்களுக்கு ஈடுகொடுத்து 20 ஆண்டுகளாக அங்கே வீற்றிருந்த சிலை சரிவர பராமரிக்கப்படாமல் சற்று உருக்குலையத் தொடங்கியது. 15.01.2009 திருவள்ளுவர் தினத்தை கொண்டாட அங்கு சென்ற ஈலிங் சாலை நூலக தமிழ்வாசகர் வட்டம் உறுப்பினர்கள் சிலர் அச்சிலையின் அந்நிலையை கண்டு சற்றே அதிச்சியுற்றனர். மேலும் சற்றும் மனம் தளராமல் அன்று தொடங்கிய சிலையை சீரமைக்கும்விண்ணப்பம் 7 ஆண்டுகளுக்குப்பிறகு பல்கலைக்கழகத்தாரால் அப்பாணியை மேற்கொள்ளஒப்புக்கொண்டதோடு சிலையை அங்கிருந்து அகற்றி பணிமனைக்கு எடுத்துச்சென்றுள்ளது.

அவர்களின் இந்த நற்பணியை பாராட்டும் முகமாகவும் பல்கலைகழத்தாரை கௌரவிக்கும்நோக்கோடும்




16.01.216 அன்று வள்ளுவர் தினமும் பொங்கல் தினமும் பல்கலைக்கழக வளாகத்திலேயே நடத்தப்பட்டது. *SOAS* பல்கலைக்கழகத்தின் ஒரு முக்கிய அங்கமான *South Asian Institute*இன் தலைவர் பேராசிரியர் திரு.மைக்கேல் ஹட் அவர்கள் தலைமை பொறுப்பேற்று உரையாற்றினார்.

நிகழ்ச்சியின் தொடக்கமாக அகரமுதல எழுத்தெல்லாம் என்ற முதல் குறளின் ஆய்வுத் தாளை வாசித்தளித்தார் திரு.சுரேஷ் அவர்கள். வாசகர் வட்டத்தின் தலைவர் திருமதி யமுனா தர்மேந்திரன் அவர்கள் விழாத்தலைவர் உள்ளிட்ட அனைவரையும் தமிழிலும் ஆங்கிலத்திலும் வரவேற்றார்.

குழுவும் குறிக்கோளும் என்ற தலைப்பில் சிலை பராமரிப்பின் 7 ஆண்டு செயல்பாட்டினை ஒளிப்படமாக விளக்கினார் செல்வி ராணி ஸ்ரீநிவாசன்.

எங்கள் வாசகர் குழுவின் புதிய உறுப்பினர் திரு.அமலன் வாசகர் வட்டம் தனக்குத்தந்த அனுபவத்தை கவிதையாக்கி வாசித்தார்.

தமிழ் வாசகர் வட்டம் தங்களுக்கென ஒரு கீதம் இயற்றி மெட்டமைத்து அரங்கேற்றி பெருமிதப்பட்டனர்.

வாசகர் வட்டத்தின் புதிய உறுப்பினர் திருமதி அமலா சுந்தர் சிங் அப்பாடலை இயற்றியதோடு நிகழ்ச்சியின் தொகுப்புரையையும் எழுதி வழங்கினார்.

திருக்குறள் கதை ஒன்றுகூட நாடகமாக்கப்பட்டு வழங்கப்பெற்றது. நகரின் பல்வேறு தமிழ்பள்ளி மாணவர்கள் திருக்குறள் ஒப்புவித்து விளக்கமும் வழங்கி நிகழ்ச்சிக்கு மேலும் மெருகூட்டினர்.

திருமதி மாதவி சிவலீலன் ஆய்வுத்தாள் வாசித்தளித்தார்.


தமிழ் கற்கும் இளைஞர் ஷாமக்கா தன் தமிழார்வத்தை அழகாக ஆங்கிலத்தில் விளக்கினார்.

எங்கள் வாசகர் குழுவின் பன்முக செயல் வீரர் திரு. சிவ தணிகாசலம் செவிக்கும் வயிற்றுக்கும் பொங்கல் விருந்து படைத்தார்....ஆம் உரையும் உண்ணவும் தந்தார்.

திருக்குறளின் நேபாள மொழிபெயர்ப்பை நமக்கு அறிமுகப்படுத்தியதோடு அம்மொழியில் குறள் ஒன்றை வாசித்து அதன் ஆங்கில விளக்கத்தையும் சிறப்பு விருந்தினர் அவர்கள் வாசித்தது நிகழ்ச்சிக்கு மகுடமாக இருந்தது. ■







**முதல் பக்கத்தின் தொடர்ச்சி**

அதேவேளையில் பண்டா-செல்வா உடன்படிக்கை அல்லது டட்லி-செல்வா உடன்படிக்கை போன்றவைகளை அடித்தளமாகக் கொண்டு ஒரு புதிய தீர்வுப்பொதியை முன்வைக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் தமிழ் மக்களின் சார்பில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதெல்லாம் அவை கணக்கில் எடுக்கப்படவில்லை. அவ்வாறானவர்கள் தமிழ்த் தேசியத்தின் எதிரிகளாக சித்தரிக்கப்பட்டு பழிவாங்கப்பட்டது வரலாறாகவுள்ளது.

இன்று கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் 2016ஆம் ஆண்டு இனவிவகார தீர்வு விடயத்தில் ஒரு திருப்பு முனை ஆண்டாக அமையும் என்றும்: தீர்வு வரும் என்றும் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டியுள்ளார். தமிழர் பிரச்சினைக்கான தீர்வை வெளிப்படைத் தன்மையுடன் நகர்த்த முடியாது என்ற கோட்பாட்டுடன் இருப்பதாகவே கூட்டமைப்பின் தலைமை தொடர்ச்சியாகக் கூறிவருகின்றது. ஆனால், சிங்களத்தலைமைகள் மிகத் தெளிவாக தமது நிலைப்பாட்டை தெரிவிப்பதில் பின் நிற்கவில்லை என்பதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட பெரும்பாலான சிங்களத் தலைவர்களின் நிலைப்பாடு உணர்த்தி நிற்கின்றது. இந்தவொரு பின்னணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டும் ஏன் வெளிப்படைத் தன்மையுடன் நடக்கமுடியாது என்றும் தமிழ் மக்களும் அரசியல் விமர்சகர்களும் கேள்வி எழுப்புகின்றனர்.

நல்லாட்சி அரசாங்கத்தையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் தான் மிக அதிகமாக நம்புவதாகவும் அவர்கள் நம்பிக்கைக்குரியவர்கள் என்றும் எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் தெரிவிக்கின்றார். ஆனால், அவரது நம்பிக்கைக்குரியவர்களிடம் இருந்துதான் சாத்தியமாகாத அரசியல் கோட்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன.

சமஷ்டி ஏற்பாடு குறித்து இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஒரு உடன்பாடு எட்டப்பட்டிருந்தது. இந்த உடன்பாடு இன்று பிரதமராக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க அன்று பிரதமராக இருந்தபோது தான் நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் கைச்சாத்திடப்பட்டது. கூட்டமைப்பின் தலைவரான இரா.சம்பந்தன் நம்பிக்கைக்குரிய இன்றைய பிரதமர் காலத்தில் கைச்சாதிடப்பட்ட உடன்படிக்கையை முன்னெடுத்துச் செல்வதற்கு கூட்டமைப்பு ஏன் கோரிக்கையை முன்வைக்கவில்லை என்பது குறித்தும் அரசியல் விமர்சகர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

கூட்டமைப்பு தலைமையின் தளம்பல் போக்கே தமிழ் மக்கள் பேரவை உருவாகக் காரணமாகியது. புதிய அரசியலமைப்புக்குள் தமிழ் மக்களுக்கான உரிய இடம் குறித்த வரைபை தமிழ் மக்கள் பேரவை முன்னெடுக்க தொடங்கியுள்ளது. தமிழ் மக்கள் பேரவையின் பிரவேசத்தை மிக மோசமாக விமர்சனம் செய்து வந்த கூட்டமைப்பின் தலைமை தற்போது தமது இருப்பை காப்பாற்றிக் கொள்வதற்காகவே சமஷ்டி யோசனையை வெறும் வார்த்தையாக முன்வைத்துள்ளது. தமது நம்பிக்கைக்குரிய பிரதமரையும் ஜனாதிபதியையும் 60 ஆண்டுகால இனவிவகாரம் குறித்த தீர்வுக்கு இணங்க வைப்பதற்கு எதிக்கட்சி தலைவர் இரா.சம்பந்தனுக்கு பெரிய விடயமாக இருக்கப் போவதில்லை. ஒற்றையாட்சி தான் அரசியலமைப்பு என கூறும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இனவிவகாரத்திற்கான தீர்வு இந்த ஆட்சி முறைமைக்குள் எவ்வாறு சாத்தியமாகும் என்பதை தமிழ் மக்களுக்கு கூறவேண்டிய கடமைப்பாடு பிரதமருக்கு உண்டு.

இந்த புதிய அரசியலமைப்பு வராது என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெளிவாகக் கூறுகின்றார்.

தமக்கு கிடைத்த பல சந்தர்ப்பங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் தவற விட்டுள்ளனர் என்று குற்றம் சுமத்தும் கூட்டமைப்பின் தலைமை இன்று கூட்டமைப்பிற்கு கிடைத்துள்ள தமிழ் மக்களின் தலைவிதியை எழுதுவதற்கான சந்தர்ப்பத்தை நழுவவிடாது எவ்வாறு காப்பாற்றிக் கொள்ளப்போகின்றது என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும். ■

**7ம் பக்கத்தின் தொடர்ச்சி**

தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வரும் போது உங்களுக்கு விடிவு காலம் பிறக்கும்" என்றார். மு.க.ஸ்டாலின் தனது 4வது கட்ட 'நமக்கு நாமே' பயணத்திட்டத்தை சென்னையில் தொடங்கிய அதே நாள், தமிழக அரசின் 'இலட்சியப் பேரணி' தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

## முதல்வர் ஜெயாவின் திடீர் வியூகத்தை யாரும் அறிந்து கொள்ளமுடியாது!

சென்னை செம்பரம்பாக்கம் ஏரி திடீரென திறக்கப்பட்டதன் மூலம் ஏற்பட்ட விளைவை அளவிட முடியாதபடிக்கு தி.மு.க. மற்றும் எதிர்க்கட்சிகள் அக்குவேறு, ஆணிவேறாக சேத புள்ளி விபரம் வெளியிட்டு, பேரணி நடத்தி கண்டனம் தெரிவித்து நீதிவிசாரணை கோரியும் இதனை எதிர்கொள்ளாமல் தமிழக அரசு மௌனம் சாதித்து சமாளிப்பதும், இத்துயரத்துக்கு ஜெயலலிதாதான் காரணம் - நீதி விசாரணை வேண்டும் என்று தி.மு.க. கோருவதும், பல கட்சிகள், அமைப்புகள் இக்கோரிக்கையை ஆதரிப்பதும் மக்களிடையே பெரும் விழிப்பை ஏற்படுத்திவிட்டது. ஜெயலலிதா தனது இடைத்தேர்தல் தொகுதியில் கூட வாகனத்திலிருந்து கீழே இறங்காமல், 'வாக்காளர் பெருமக்களே' என்று நலம் விசாரித்தது, வாகனத்துக்குள்ளிருந்தவாறே 'மைக்'கில் பேசியது, எல்லாமே மக்களை கேள்விக்குள்ளாக்கி, பேரழிவின்போது மெத்தனமாக இருந்த ஜெயலலிதா மீண்டும் முதல்வராக வேண்டுமா எனும் சந்தேகத்தை பரவலாக ஏற்படுத்திவிட்டது.

இந்தக் 'கணக்கை' கூட்டிக்கழித்துப் பார்த்து, தனக்கு ஏற்பட்டிருக்கும் பின்னடைவைப் பற்றி முதல்வர் ஜெயலலிதா சிந்திக்கின்றார். அதே நேரம் எந்தக் கட்சியை அரவணைத்தால் வாக்குவங்கியை அதிகரிக்கலாம் என்பதற்குப்பதிலாக, எந்தக் கட்சிகள் ஒன்றிணையக் கூடாது என்பதிலும், சேர்ந்த கூட்டணியை உடைப்பதிலும்தான் ஜெயலலிதா வியூகம் வகுக்க இப்பொழுது இறங்கிவிட்டார். இதன் மர்மம் யாருக்கும் தெரியவராததன் அடிப்படையில், அவரது போக்கில் 'ஜெயா' அரசியல் கணக்குப்படி கூட்டிக் கழித்தால், கூட்டணியோ அல்லது தனித்தோ ஆறாவது தமிழக முதல்வராகும் முடிவில் எந்தவித மாற்றமும் இருக்காது. தேவைப்பட்டால் கூட்டணிகளை உடைப்பார் அல்லது தனித்து சேர்ப்பார். மற்றையது, ஆட்சி அமைக்கும் அளவுக்கு அ.தி.மு.க. தொகுதிகளில் போட்டியிடுவார். அந்த அளவுக்கு பணநாயக நிவாரணம் புகுந்து விளையாடும்.

## செம்பரம்பாக்கம் நெருக்கடி 'ஜெயா' எப்படி சமாளிப்பார்?

கலைஞர் கருணாநிதி, விஜயகாந்த் கனவுகளில் அரசியல் குழப்பம் ஏற்பட்டாலும் உள் மனதில் ஒருவரை ஒருவர் விட்டுக் கொடுக்க மனது இன்னும் வரவில்லை. ஒரே அணி ஆகலாம் என்பதுதான் இவர்களின் 'கலர்க்' கனவுகள்! காங்கிரஸுடன் மீண்டும் நட்புக் கொண்டு கூட்டணி அமைக்க விரும்பும் கலைஞர்: எந்தக்கட்சி எங்கே போனாலும் பரவாயில்லை... 'விஜி'யின் தே.மு.தி.க. வந்தால் மட்டுமே ஆட்சியில் அமரும் கனவையும் காண முடியும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றார். காங்கிரஸின் ராகுல் காந்திக்கு தி.மு.கவை பிடிக்காவிட்டாலும் சோனியா காந்தியின் ஆதரவு இருக்கும். தமிழக காங்கிரஸின் முடிவும் அதுதான் என்று கணக்குப் போடும் கலைஞர், மக்கள் நலக் கூட்டணி மூலம் பிரியும் (தி.மு.க. ஆதரவு) வாக்குகள் தி.மு.க.வின் வெற்றியைப் பாதிக்கும், எனவே தே.மு.தி.க. வராதபட்சத்தில் மக்கள் நலக் கூட்டணியை உடைத்து இந்திய கம்யூனிஸ்டுகளையும் விடுதலை சிறுத்தை கட்சியையும் தி.மு.க. அணியில் சேர்க்கவேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்.

தே.மு.தி.க. தானாகவே தாறுமாறாக உடைய சந்தர்ப்பம் உண்டென்றும் கலைஞர் குறுக்கெழுத்து போட்டி நடத்துகின்றார். அதாவது, தி.மு.கவுடன் கூட்டணி கொண்டால்தான் சட்டமன்ற உறுப்பினராக முடியும் என்று தே.மு.தி.கழக நிர்வாகிகளும் மாவட்ட செயலாளர்கள் பலரும் நம்பிக்கையுடன் காத்திருக்கின்றனர். தி.மு.க. ஆதரவு இல்லாமல் விஜயகாந்த் ஒரு தொகுதியிலும் வர முடியாது என்பது இவர்களது கணக்காக இருக்கிறது.

அடுத்த சில நாட்களில், தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதும், அரசியல் தேர்கள் புறப்பட்டுவிடும். வீரர்கள் கைகளில் கேடயமாக செம்பரம்பாக்கம் பேரழிவுதான் காட்சிக் கொடுக்கும். உயிர்ச்சேதம், உடைமை சேதம், ஊர்விட்டு காலி செய்தவர்களின் விபரம், தமிழக முதல்வரின் அலட்சியப்போக்கு, காணாமல் போன ஆயிரமாயிரம் பேரின் கதி, தொலைந்து விட்ட வாழ்வாதாரம் போன்றவை புள்ளி விபரங்களுடன் எதிர்க்கட்சிகள் அணிவகுக்கப்போகின்றன. முழு எதிரியாக எழுந்து நிற்கும் செம்பரம்பாக்கம் நெருக்கடியை 'ஜெயா' சமாளிப்பாரா? ■




# வாசகர் கடிதம்

**புதிய தகவல்கள்**

கடந்த சில இதழ்களில் புதிய அம்சமாக ர.ஜே. ஞானேந்திரன் எழுதுகிற 'போகிற போக்கில்...' பல தகவல்களை அறிய வைக்கிறது. அத்தனையும் சுவையான செய்திகள்.

- கே.ஆர். டேவிட்சன், Croydon

**ஆவலோடு...**

ஜனவரி 1ஆம் தேதி, புதிய 2016ஆம் ஆண்டு பிறந்த அன்று பகல் பிள்ளையார் கோயிலுக்குப் போனோம். கோயிலுக்குள் பூஜை எல்லாம் முடிந்த பின்னர், இலவசப் பத்திரிகைகள் இருக்கிற இடத்துக்குப் போனேன். ஏமாற்றமாக இருந்தது. முடிந்துவிட்டதோ என்று எண்ணியபடி தெரிந்த நண்பரிடம் விசாரித்த போதுதான், இந்த மாதத்தில் பத்திரிகை வருவதில்லை என்பது நினைவுக்கு வந்தது. நீண்ட காலமாக நான் 'புதினம்' வாசகன். 'புதினம்' பிப்ரவரி இதழை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

கு. செல்வச்சந்திரன், Mitcham

**இலகுவாக விளக்குகிறார்**

ஹோமியோபதி டாக்டர் தியாகராஜனின் நோய்களுக்கான தீர்வை மிகவும் இலகுவான முறையில் விளங்க வைக்கிறார். தவறாது படித்து பயன்பெறுபவர்களில் நானும் ஒருவன்.

- த. சிவகுரு, Surrey

**அவராகத்தான் இருக்கும்!**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சனையில் நடந்துகொண்ட விதத்தை வி. தேவராஜ், 'தடுமாறுகிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு' என்ற ஆய்வில் எழுதியிருப்பது உண்மைதான்! கொழும்பு வீரகேசரி ஞாயிறு இதழின் ஆசிரியராக அவர் இருந்த காலத்தில், அவரது எழுத்துகளைப் படித்திருக்கிறேன். அந்த வி. தேவராஜ் அவர்களால்தான் இப்படிச் சிந்திக்க முடியும்; எழுத முடியும். தொடர்ந்து அவருடைய எழுத்துகளைப் படிக்க ஆசைப்படுகிறேன்.

- ஆர்.எஸ். சர்மா, Harrow

## இலண்டனில் இலக்கிய சங்கமம் நடத்தும் பொங்கல் விழா

இலண்டன் உயர்வாசற்குன்று ஆலயத்தில் 14-02-2016 ஞாயிறு அன்று மாலை 5.00 மணிமுதல் 9.00 மணிவரை மேற்படி ஆலயத்தின் ஆதரவில் இலண்டன் திரிசக்தி இலக்கிய சங்கமம் பொங்கல் பெருவிழாவை நடத்துகிறது.


இளம் தமிழர்களின் சொற்போர் சிறப்பு நிகழ்வாக இலண்டன் முருகன் ஆலய பிரதம குரு கயிலை நாகநாதசிவம் குருக்கள் தலைமையில் நடைபெறும். 'பொங்கலோ பொங்கல்' கவியரங்கம், ஹரோ முதியோர் தமிழ்ச் சங்கத்தின் கிராமிய நடனம், சிறப்புரைகள் ஆகியனவும் இடம்பெறும்.

**தொடர்புகளுக்கு :**

**இலக்கிய சங்கமம் அமைப்பாளர்**

**சிவ தணிகாசலம்: 07958319563**

# புகைப்படங்கள் மனதின் பிம்பம்



• இளைய அப்துல்லாஹ்




புகைப்படங்கள் எப்போதும் எங்களுக்கு எங்கள் வாழ்வின் கடந்த காலங்களை ஞாபகப்படுத்தியே வைத்திருக்கின்றன. புகைப்படங்கள் ஒரு டயரி போலவே இருக்கின்றன. ஞாபகத்தின் பதிவு அவை. நாங்கள் எங்களது எத்தனையோ புகைப்படங்களைத் தொலைத்து விட்டிருக்கிறோம். கடிதங்கள் போல அவற்றையும் கவனமாகச் சேர்த்து வைக்கவில்லையே என்ற கவலை எனக்கு இன்றுவரை இருக்கிறது. எங்களில் எத்தனை பேருக்கு முதலாவது புகைப்படம் எடுத்த ஞாபகம் இருக்கிறது. ஞாபகம் வராத காலங்களில் எடுத்த புகைப்படங்கள் கூட எத்தனை விதமான கதைகள் சொல்லும், ஒவ்வொன்றும் ஒவ்வொரு காலங்களை நினைவுபடுத்தும். அண்மையில் எனது சிறிய கால புகைப்படங்களை எனது தங்கச்சி அனுப்பி வைத்திருந்தாள்.

அதில் நான் பதினாறு வயதில் 'கூட்டுறவுக் கொள்கைகளும் நடைமுறைகளும்' என்ற தலைப்பில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடந்த பேச்சுப் போட்டியில் பேசி முதலாம் இடம் வென்றதற்கான பரிசில்கள்



வாங்கிய படமும் ஒன்று. அந்தப் பேச்சுப் போட்டியின் பரிசு எனக்கான ஒரு மன உந்துதலைக் கொடுத்திருந்தது அப்பொழுது. எங்களது பாடசாலையில் இந்த பேச்சுப் போட்டிக்காக இரண்டே இரண்டு பேரை மட்டும் அதிபரும் ஆசிரியர்களும் தெரிவு செய்தார்கள்.

உருத்திரகுமாரனும் நானும்தான் தெரிவு செய்யப்பட்டோம். பேச்சுப் போட்டி என்றாலே நெஞ்சில் ஒரு படபடப்பு இருந்து கொண்டே இருக்கும். அன்று தெரிவு செய்வதற்காக எங்களுடைய பாடசாலையில் அசெம்பிளியில் எல்லோரும் ஒன்று சேர்ந்திருந்தார்கள். மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர் எல்லோரும், அந்த தெரிவு செய்யும் போட்டியில் உருத்திரகுமாரன்தான் தெரிவு செய்யப்படுவான் என்று நினைத்திருந்தேன். ஆனால், அதிகம் கை ஆட்டி ஆட்டி பேசியதற்காக அவன் தெரிவு செய்யப்படாமல் நான் தெரிவு செய்யப்பட்டேன்.

எங்கள் பாடசாலை ஆசிரியர்களதும் அதிபர்களதும் கணிப்பு சரியாகவே இருந்தது. முல்லைத்தீவு மாவட்டத்தில் நான்தான் முதலாம் இடம். அது இன்னமும் மனதில் பெருமையாகவே இருக்கிறது. 32 வருடங்கள் கழிந்து அந்தப் புகைப்படத்தைப் போன கிழமைதான் பார்த்தேன். கருப்பு வெள்ளைப் படம் அது. புகைப்படங்களைப் பார்க்கும் போது எங்களுடன் தொடர்புடைய பின்னால் உள்ள எல்லாச் சம்பவங்களும் நினைவுக்கு வரும்.

எத்தனையோ புகைப்படங்களோடு எமது சொல்ல முடியாத கதைகள் அடங்கியிருக்கும். நாம் நேசிக்கும் எல்லோரிடமும் புகைப்படத்தின் கதையைச் சொல்ல முடியாமல் இருக்கும். உண்மையில் புகைப்படம் ஒரு டயரி போலத்தான். அந்த புகைப்படத்தை எடுத்த இடம், எடுத்த நபர், எடுத்த சந்தர்ப்பம், என்று எல்லாமே எல்லாருக்கும் பகிர்ந்துகொள்ள முடியாத ஒரு மௌனமான ரகசியமானதாக இருக்கும் சில புகைப்படங்கள். சில புகைப்படங்களில் எமக்கு அருகில் நிற்பவர்கள் சிலர் பற்றிய எத்தனையோ கதைகள் மௌனமாக பரிமாறிக்கொண்டிருக்கும். எனது சிறிய காலத்துப் புகைப்படம் ஒன்று இன்று பார்த்தாலும் சிரிப்பு வருகிறது. அது கதிர்காமத்தில் வைத்து எடுத்தது. 'எனக்கு 4 வயதில் எடுத்தது' என்று அம்மா சொல்லுவா. 39 வருடங்கள் முந்தி எடுத்த புகைப்படம் அது. காலையில் தோசைக்கடையை கோவில் வீதியில் கண்டுவிட்டு உடனேயே தோசை வாங்கித் தருமாறு கேட்டு கோபமாக அடம்பிடித்தபோது எடுக்கப்பட்ட புகைப்படம் அது. அதில், அம்மா, ஐயா, அம்மம்மா, நான் எல்லோரும் இருக்கிறோம். அந்த புகைப்படம் தான் ஐயாவோடு நான் நின்று எடுத்த கடைசிப் புகைப்படம். அதற்குப் பிறகு ஐயாவுக்கும் அம்மாவிற்கும் சண்டை வந்து ஐயா அம்மாவை விட்டுப் பிரிந்துபோய் விட்டார். அதற்குப் பிறகு ஐயாவை இடைக்கிடை சந்தித்தாலும் ஒன்றாக நாங்கள் வாழக் கிடைக்கவில்லை. விவாகரத்து என்று ஒன்று இல்லாமலே ஐயா அம்மாவை விட்டு பிரிந்து போய்விட்டார்.

அது ஒன்றும் பெரிய மனஸ்தாபமான சண்டை இல்லை. ஆனால், அம்மாவின் தமையன்தான் எனது ஐயாவையும் அம்மாவையும் பிரிப்பதற்குச் செய்வினை செய்ததாக அம்மா இப்பொழுதும் சொல்லுவா. அம்மாவை விட்டு ஐயா பிரிந்து போனதன் பிறகு இரண்டு வருடத்தில் ஐயா செத்தும் போனார். நான் அம்மாவினதும் அம்மாவின் அப்பாவினதும் ஆதரவில் தான் வளர்ந்தேன். வாழ்வில் ஐயா என்று ஒருவர் எனக்கு இருந்தார், அவரின் மகன்தான் நான் என்று சொல்வதற்கு இருக்கும் ஒரே ஒரு புகைப்படம் அதுதான். அதுமட்டுந்தான்.

ஐயா பற்றிய வேறு புகைப்படங்களோ அல்லது ஆதாரங்களோ என்னிடம் இல்லை. தகப்பன் இல்லாத பிள்ளையாகவே நான் வளர்ந்து முடித்தேன்.

எங்கள் ஊரில் புகைப்படம் பிடிப்பவர் என்று ஒருவரும் இருக்கவில்லை. முள்ளியவளையில் இருந்து ஒரு மாஸ்ரர்தான் புகைப்படக் கருவியோடு வருவார். அவருக்குப் புகைப்படம் பிடிப்பது ஒரு கலை, விருப்பம். அதற்காக அவர் புகைப்படக் கல்லூரி எதிலும் படித்ததாக நான் அறியவில்லை. சைக்கிளில் முள்ளியவளையில் இருந்து ஒட்டுசுட்டான் வரைக்கும் வருவார். அதற்கு அப்பாலும் போவாரோ எனக்குத் தெரியாது.

வரும் வழியில் ஒவ்வொரு வீடு வீடாக வந்து கேட்பார். அவரின் பெயர்கூடத் தெரியாது. 'போட்டோ மாஸ்ரர்' என்றுதான் கூப்பிடுவோம். போட்டோ மாஸ்ரர் வந்தால் நாங்கள் பொடியன்கள் அவருக்குப் பின்னால் திரிவோம். அவரைப் பார்ப்பதும் ஒரு மகிழ்ச்சிதான். அவர் புகைப்படம் பிடிப்பதற்கு இப்போதையது மாதிரி டிஜிற்றல் கமெரா எதுவும் எழுபதுகளில் கிடையாது. ஒரு கமரா, அதில் றீல் போட்டிருப்பார். கமெராவின் லைட் தான் புதினமாக இருக்கும். கமெராவில் ஒரு ஸ்ராண்ட் மாதிரி பூட்டியிருக்கும். அதன் றிஃப்ளெக்டர் ஒரு வட்டமான சைசில் விசிறி மாதிரி இருக்கும். அதனைச் சுருட்டி வைத்திருக்கலாம். ஒருமுறை ஃபிளாஸ் அடித்துவிட்டு பல்பை கீழே போட்டுவிடுவார் அவர். பல்ப் உள்ளுக்குள்ளே இருக்கும் கண்ணாடி உடைந்துவிடும்.

தோல் மட்டும் பிளாஸ்ரிக் மாதிரி இருக்கும். போட்டோ மாஸ்ரர் பல்ப்பைக் கழட்டி எப்போ போடுவார் என்று பார்த்து இருந்துவிட்டு ஓடிப்போய் எடுத்து அதனை வைத்து விளையாடுவோம் நாங்கள். சின்ன வயசில்



எல்லாம் புதினம் தானே எங்களுக்கு. அப்படி கமெராவையும் லைட்டையும் அதற்குப் பிறகு நான் கண்ணாலும் காணவில்லை. பிரபலங்களோடு நின்று புகைப்படம் எடுக்கும் பழக்கம் பலருக்குப் பெரும் ஆசை. சிலருக்குத் தீராத ஆசை. சினிமாக்காரருக்குப் பக்கத்தில் நின்று புகைப்படம் எடுப்பது என்பது சிலருக்குப் பைத்தியம் மாதிரி.

நான் தொலைக்காட்சி தொகுப்பாளராக, செய்தி வாசிப்பாளராக ஆன கடந்த பல வருடங்களில் எத்தனையோ பேர் எமது ஸ்ரூடியோவுக்கு வந்து என்னோடு புகைப்படம் எடுத்துக்கொண்டு போயிருக்கிறார்கள். லண்டனில் புகைப்படம் பிடிப்பவர்கள் நன்றாகவே சம்பாதிக்கிறார்கள். அது ஒரு **TAX** கட்டாத தொழிலாக வளர்ந்து போயிருக்கிறது. நல்ல துல்லியமான திடமான கமெராக்களை வாங்கக்கூடியதாக இருக்கிறது. எனவே சனி, ஞாயிறு தினங்களில் பகுதி நேரத்




தொழிலாக கலியாணவீடு, சாமத்திய வீடுகளில் படம் பிடிக்கப்போகிறார்கள். ஒரு அல்பம் செய்து கொடுக்க 600 பவுண்களில் இருந்து 800 பவுண்கள் வரைக்கும் காசு வாங்குகிறார்கள். அதில் போட்டோ சேப்பில் வேலை செய்து அழகூட்டி சம்பாதிக்கிறார்கள். இங்கு சுப்பர் மார்க்கட்டுகளிலும் புகைப்படங்கள் எடுப்பவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கறுப்பு வெள்ளை பிறவுண் என்று புகைப்படங்களை வெறும் 10 பவுண் முற்பணம் கட்டி எடுக்கச் சொல்வார்கள்.

யாருக்குத்தான் அழகான புகைப்படங்களில் தங்களைப் பார்க்க ஆசையில்லை. ஒரு கிழமைக்குப் பிறகு புகைப்படம் எடுத்தவரிடம் போனால் மிக அழகான புகைப்படங்களை பிறிண்ட் போட்டுக் கொண்டு வந்து வைத்திருப்பார். ஒரு கொப்பிக்கு 10 பவுண் என்பார். அதனைப் பார்த்துவிட்டு வர மனம் இருக்காது. 50, 60 பவுண் கொடுத்து வாங்கிப் போவார்கள். நல்ல பிஸினஸ் அது. பாடசாலைக் காலங்களில் புகைப்படங்களை பரிமாறிக்கொள்வதில் தான் சில காதல்கள் முகிழ்ந்திருக்கின்றன.

எனது எட்டாம் வகுப்பில் எனது பள்ளித் தோழியை காதலித்ததும் ஒரு புகைப்படத்தில்தான். அவளும் அவளது நண்பிகளும் ஒன்று சேர்ந்து புகைப்படம் எடுத்திருந்தார்கள். அதனை நான் வாங்கிப் பார்த்தபோது எனக்கு அவள் மீது அப்பவே அந்த இடத்தில் காதல் வந்துவிட்டது. பிறகு அவளின் தோழிகள் ஒன்றுசேர நிற்கும் புகைப்படத்தை வாங்கிக்கொண்டு போய் ஸ்ரூடியோ ஒன்றில் கொடுத்து அவளை மட்டும் தனியாக எடுத்து அதனைப் பெரிதாக்கி புத்தகத்திற்குள் வைத்துக் கொண்டு அலைந்திருக்கிறேன்.

அப்படி ஒரு இளமைக் காலம் எத்தனை பேருக்கு இருந்திருக்கும். காதலித்த பெண்ணின் புகைப்படத்தை காவிக்கொண்டு திரிந்தவர்கள் எத்தனை பேர் இருந்தார்கள். இப்பொழுது காதலிகளை மொபைல் போனில் படம் படமாகச் சேகரித்து வைத்திருக்கிறார்கள் இளைஞர்கள்.

எனது பாடசாலையில், ஊரில், எடுத்த பல புகைப்படங்களை தவறவிட்டு விட்டேன். இப்பொழுது நினைக்கும் போதும் கவலையாக இருக்கிறது. இப்படி எத்தனை பேருக்கு இருக்கும். லண்டனில் இருக்கும் போது சில வேளைகளில் புகைப்பட அல்பங்கள்தான் ஊரை நினைவுபடுத்திக்கொண்டிருக்கின்றன. வெட்ட வெளிச்சமாக அல்பத்தில் இருக்கும் புகைப்படங்களைப் பார்க்கும் பொழுது அதன் பின்னால் எங்கள் மனதுக்கு மட்டும் தெரிந்த ரகசியங்கள் ஆயிரம் ஆயிரம். மனைவியிடம், மகனிடம், மகளிடம், அம்மாவிடம் பகிர்ந்துகொள்ள முடியாத ரகசியங்கள் பல ■

## ஈழத் தமிழருக்கு இலண்டனில் பெருமை தேடித்தந்த 'மைலா!'

# 2016இல் மகாராணி வழங்கி கௌரவித்த MBE

'மைலா' என அறியப்பட்டு, அனைவராலும் அன்பாக அழைக்கப்படுகின்ற திரு சரவணமுத்து மயில்வாகனம் அவர்கள் மாட்சிமை தங்கிய மகாராணி எலிசபெத் அவர்களினால்; *2016* புதுவருஷத்தில் *MBE* என்ற கௌரவம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இவரைக் கௌரவித்து அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில், *"Saravanamuthu Mylvaganam Lately Strategic Unit Network Manager, Department of Business, Innovation and skills. For Public Services and Services to the Tamil Community in the UK and Sri Lanka"* என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

திரு.மயில்வாகனம் அவர்கள் மலேசியாவில் பிறந்து சிறு வயதில் பெற்றோருடனும் சகோதரங்களுடனும் தங்களுடைய பூர்வீக மண்ணான அச்சுவேலியில் குடியேறினார்கள். ஹாட்லிக் கல்லூரியில் கல்விகற்ற இவர், கிரிக்கெட், உதைபந்தாட்டம், தடகள விளையாட்டுக்கள் என அனைத்திலும் சிறந்து விளங்கிக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்தார். அறுபதுகளில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரனாக திரு.நடராஜ சுந்தரத்துடன் (பேராசிரியர்) இணைந்து விளையாடி, ஏற்படுத்திய சாதனைகள் ஏராளம். அவர்கள் இருவரும் *1963 - 64* காலப்பகுதியில் யாழ்.மாவட்ட கிரிக்கெட் அணியில் விளையாடிய சாதனைக்கும் சொந்தக்காரர்கள். அன்றைய விளையாட்டு இரசிகர்களால், இன்றும் நடராஜசுந்தரம் - மயில்வாகனம் இரட்டையர்கள் என நினைவுகூரப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அறுபதுகளின் இறுதியில் இங்கிலாந்துக்கு வந்த திரு.மயில்வாகனம் கிரிக்கெட் விளையாட்டில் தொடர்ந்து அக்கறையுடன் விளையாடியதுடன் சிறுவர்களுக்கு கிரிக்கெட்டை ஆர்வமுடன் பயிற்றுவிப்பவராகவும் விளங்கினார். *Surbiton Sports Club, Kingston Tamil School*, என இங்கு செயற்படும் பலவேறு அமைப்புக்களுடன் தன்னை இணைத்துச் செயற்பட்டுவருகிறார். தனது பாடசாலையான ஹாட்லிக் கல்லூரிக்கு ஒரு பழைய மாணவர் சங்கத்தை இங்கு



உருவாக்குவதிலும் அதனை நல்ல முறையில் நடாத்துவதிலும் இவருக்கு முக்கியமான பங்குண்டு. இதன் தலைவராகவும் செயற்பட்டு கல்லூரிக்கும் சங்கத்திற்கும் சிறந்த சேவையை வழங்கினார்.

*1992*ம் ஆண்டு விளையாட்டில் அக்கறை கொண்ட பன்னிரண்டு நண்பர்களுடன் இணைந்து ஆரம்பித்த தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் (வுஞுஞயு ருமு) இவருடைய சேவைகளிற்கெல்லாம் முத்தாரமானது. ஆரம்பத்தில் அதன் பொருளாளராகவும் *2005, 2006*ம் ஆண்டுகளில் அதன் தலைவராகவும் செயற்பட்டு பல்வேறு வகைகளில் சங்கத்தின் வளர்ச்சிக்கும் இங்கும் இலங்கையிலும் சிறுவர்களின் விளையாட்டு முன்னேற்றத்துக்கும் ஆற்றிய பணி விதந்து குறிப்பிடத்தக்கது. தமிழ்பேசும் மக்கள் மத்தியில் ஒற்றுமையைப்பற்றி பேசுகின்ற அனைவரும் கவனிக்கவேண்டிய நிறுவனம் வுஞுஞயு. கடந்த 25 ஆண்டுகளாக ஜனநாயக முறைப்படியும் ஒற்றுமையாகவும் செயற்படுகின்ற இந்த அமைப்பின் முதுகெலும்பாகத் திகழ்பவர்களில் இவர் குறிப்பிடத்தக்கவர். கிளிநொச்சியில் நிறுவ முயற்சித்த விளையாட்டுக் கல்லூரித் திட்டத்தின் காரணகர்த்தாக்களில் மைலாவும் ஒருவர்.

விளையாட்டிலும் பொதுச் சேவையிலும் அக்கறை கொண்ட தேவி இவருடைய மனைவி. சிறந்த வலைப்பந்தாட்ட வீராங்கனைகளான சுறோமி, றோசினி என்ற பெண்களின் தந்தை. மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரக்குழந்தைகள் என நிறைவாக வாழ்ந்துவரும் திரு. மயில்வாகனத்தின் வாழ்க்கையில் ஆடீநு ஒரு மைல்கல்லாகும். வுஞுஞயுயின் வெள்ளி விழா ஆண்டில் திரு மயில்வாகனம் பெற்றுள்ள இந்த கௌரவத்திற்காக எல்லோரும் இணைந்து அவரை வாழ்த்துவோம். ■

---

தொகுப்பு: ராகினி

### ஏனம்மா அப்படி?



வேலைக்குச் சென்று வந்த தன் தாயிடம் ஐந்து வயதுச் சிறுமி கேட்டாள்:

"ஏனம்மா நம்ம வீட்டு 'பீரோ' சாவியை 'ஆயா'கிட்ட கொடுத்திட்டுப் போகல?"

"அதைப் போய் ஆயாகிட்ட கொடுப்பாங்களா?"

"ஏம்மா நம்ம பீரோவிலே இருக்கிற நகை, பணத்தை எல்லாம் ஆயாகிட்ட கொடுத்திட்டுப் போகல?"

"ஷ்.... ஷ் அதையெல்லாம் ஆயாகிட்ட கொடுக்கக் கூடாது!"

குழந்தை கேள்வி மேல் கேள்விகளை அடுக்க, தாய்க்கு கோபம் வந்து, "இப்படி எல்லாம் கேட்காதே!" என்று அதட்டினாள்.

சிறுமி கடைசியாக ஒரே ஒரு கேள்வி கேட்டாள்.

"அப்போ ஏனம்மா என்னை மட்டும் ஆயாகிட்ட விட்டுட்டுப் போறீங்க? உனக்கும் அப்பாவுக்கும் நான் முக்கியமில்லையா?"

–தாயிடமிருந்து எந்தப் பதிலும் இல்லை! கண்களில் இருந்து நீர் மட்டுமே....

### மனைவிக்கு மனதில் பட்டது என்ன?



உடல் நலம் இல்லாத கணவனை மருத்துவரிடம் அழைத்துச் சென்றாா் அவர் மனைவி.

பரிசோதித்து, மருந்துகளை எழுதிக் கொடுத்துவிட்டு, டாக்டர் மனைவியிடம் சொன்னார்.

"நல்ல சத்தான காலை உணவை அன்பாகவும், அமைதியாகவும் கொடுங்கள். சுவையான இரவு உணவுடன், உங்கள் பிரச்சினைகளை அவரிடம் பேசாது இருங்கள். சின்னத்திரையில் சீரியல் பார்ப்பதைத் தவிருங்கள். புதுச்சாறி, புது நகைகள் வேண்டும் என்று அவரைத் தொல்லை படுத்தாதீர்கள். இப்படி ஒரு வருடம் நீங்கள் செய்தால் உங்கள் கணவர் பிழைத்துக்கொள்வார்"

வீட்டுக்கு வரும் வழியில் கணவன் மனைவியிடம் கேட்டார், "டாக்டர் என்ன சொன்னார்!"

பதில் சொல்லாமல் மௌனமாக மனதில் நினைத்துக் கொண்டாள் "இவர் பிழைத்துக் கொள்வது கஷ்டம்"

### கடவுளும் டாக்டரும்

'கடவுள் கிட்டேயும், டாக்டர் கிட்டேயும் கோபமாகப் பேசக்கூடாது'

கடவுள் டென்ஷனானால், உடம்புக்கு நோய் வரவச்சு டாக்டரிடம் அனுப்பி விடுவார்!

டாக்டர் டென்ஷனானால், கடவுளிடம் அனுப்பி விடுவார்!



### இரண்டு காரணங்கள்

தோல்விக்கு இரண்டு காரணங்கள். ஒன்று: யோசிக்காமல் செய்வது!

இரண்டு: யோசித்த பின்னும் செய்யாமல் இருப்பது!



### 'சரக்கு' என்ன சொல்லுது?

சாப்பிடும்போது தரையைப் பார்த்துச் சாப்பிடுகிறோம் – பூமித்தாய்க்கு நன்றி சொல்ல!

தண்ணீர் அருந்தும்போது வானத்தைப் பார்த்து அருந்துகிறோம் – மேகத்திற்கு நன்றி சொல்ல!

நீங்கள் 'சரக்கு' அடிக்கும்போது மட்டும் கண்கள் இரண்டையும் இறுக்கி மூடிக் கொண்டு குடிக்கிறீங்களே! ஏன் தெரியுமா?

அந்தச் 'சரக்கு'ச் சொல்லுது:

"என்னால் தாண்டா ஒரு நாளைக்கு நீங்கள் இரண்டு கண்களையும் ஒரேயடியாக மூடப்போறீங்கள்!"

# LycaFly

0207 132 32 32
24 x 7

## MOST POPULAR AGENT OF SRI LANKANS

# COLOMBO

from
**£398**
including taxes

- ANY FLIGHT
- ANY DESTINATION
- LOWEST FARE GUARANTEED

SriLankan Airlines
KUWAIT AIRWAYS
Emirates
QATAR AIRWAYS
ETIHAD AIRWAYS
JET AIRWAYS
OMAN AIR

PLUS

# FREE
## LYCAMOBILE TOP-UP WHEN YOU BOOK WITH US

*T&Cs Apply

### Your Hotel | Stop Over | Dream Holiday... Just a Call Away

| | |
|---|---|
| NEW YORK \| 3 nights | fr £449 pp |
| ATLANTIS DUBAI \| 3 nights | fr £495 pp |
| LAS VEGAS \| 5 nights | fr £629 pp |
| MALDIVES \| 6 nights | fr £899 pp |
| CUBA \| 7 nights | fr £899 pp |
| BARBADOS \| 7 nights | fr £973 pp |

HOLIDAY PACKAGES INCLUDE FLIGHTS, TRANSFERS & ACCOMMODATION

**WEMBLEY**
14 Ealing Road, Wembley,
London HA0 4TL · 0207 132 0055

**EAST HAM**
180 High Street North,
East Ham E6 2JA · 0207 132 0056

**CANARY WHARF**
Walbrook Building, 195 Marsh Wall
London E14 9SG · 020 7132 0100

**COLOMBO**
No. 08, Kinross Avenue, Colombo 04.
Sri Lanka · 0117 623 232

IATA

All fares shown above are subject to availability. The Free Lycamobile top-up offer is offered to each fully paid adult return ticket and will not be offered to child/infant and one way tickets. The Lycamobile top-up offer is not valid for selected airlines. The Lycamobile top-up offer is not exchangeable, transferable or redeemable for cash. LycaFly reserves the right to withdraw this offer before the expiry date, without notice. Please see our full terms & conditions at www.lycafly.com.


Lycamobile
Call the world for less
9p
/min
Sri Lanka
Landlines & Mobiles
To activate : Text SAVE to 2525
BUY 2 MONTHS AND
GET 3RD MONTH FREE
UK
PLAN 20
1000
National minutes
Unlimited
National SMS
2GB
Data
Unlimited
calls to Lycamobile UK
Every month for three months
To activate: Dial *139*12044*3#
Order your free SIM at
www.lycamobile.co.uk
or call 020 7132 0322
£36
£24
/ 3 months
Don't miss out!
Get your
deal today!
Lyca mobile